

Veritas Radio Tamil Services

# Silver Jubilee Souvenir

Germany 2001



# வேரித்தாஸ் வானொலி தமிழ்ப் பணியின் வெள்ளி விழா மலர்

ஜேர்மனி - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரித்தாஸ் வானொலி

தமிழ்ப் பணியின்

# வெள்ளி விழா மலர்

ஜேர்மனி - 2001

29. 06. 2001
பேர்லின்
BERLIN

30. 06. 2001
எசன்
ESSEN

*Veritas Radio Tamil Services*
**Silver Jubilee Souvenir**
Germany 2001


பேராசிரியர்
அருட்கலாநிதி
**சீ. யோ. இமானுவேல்**
**(பங்குத்தந்தை டாற்லன்)**
Horneburger Straße 58
54711 Datteln-Horneburg
Germany
Tel./Fax : 00 49 (0) 2363 625 20
e-mail : esjay.raj@t-online-de

*மலர்க்குழு, வெள்ளிவிழாக்குழு*
*சார்பாக*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு மெய்ப்படல் வேண்டும்

## கைவசமாவது விரைவில் வேண்டும்



ஆனி - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க நிரந்தரம்

## வேரித்தாஸ் தமிழ்ப் பணியின் இனிய இதயங்களே!



"போர் அல்லது சமாதானத்தின் ஊற்றுக்கள் மனித சிந்தனையிலிருந்துதான் உருவாகின்றது. சிந்தனையை உரிய வழியில் கருத்து நெறிப்படுத்துவதிலேயே மனித சமூகத்தின் வெற்றி தங்கியுள்ளது. இதில் ஊடகங்களும், கல்வி நிறுவனங்களும் ஆற்றவேண்டிய பங்கு மிக அளப்பரியது". பல வருடங்களுக்கு முன்னர் முன்னாள் ஐ.நா பொதுச்செயலர் திரு "மர்ஸ்கீல்ட் அவர்கள் கூறிய இக் கருத்துக்களை வெரித்தாஸ் தமிழ்ப் பணியின் இருபத்தைந்தாண்டு நிறைவில் நினைவுகூருவது பொருத்தமானதாகும். 1966 இல் மணிலாவில் உருவாக்கப்பட்டு இருபத்தைந்தாண்டு காலப்பகுதிக்குள் ஒரு மக்கள் இயக்கமாக மாறி இருக்கின்றது வேரித்தாஸ் வானொலி. குடிசைக்குள் தோழனாக நுழைந்து கொண்ட வேரித்தாஸ் வானொலி. அரண்மனைக்குள் கண்ணகியாகவே பிரவேசித்திருக்கின்றது. இதுவே உலகெங்கும் பரந்து வாழும் கோடிக்கணக்கான இனிய இதயங்கள் இந்த ஆண்டை வேரித்தாஸ் தமிழ்ப்பணி வெள்ளிவிழா ஆண்டாக கொண்டாடக் காரணமாகின்றது. சமூகம் ஒன்றும் அந்தச் சமூகத்தை தாங்கி நிற்கும் சூழலும் வன்முறைக்கும், ஒடுக்குதலுக்கும், பிரிவுக்கும் உள்ளாகும் போது மௌனித்து நின்று நீரோ மன்னன் பாணியில் களிப்பூட்டுதலில் காலம் கடத்தாது உண்மையை ஓங்கி ஒலித்து, உலக மனச்சாட்சியை தட்டி எழுப்பும் தார்மீகப் பணியை முன்னெடுத்துச் செல்கின்றது வேரித்தாஸ் தமிழ்ப் பணி.

இலங்கையில் 1977இல் ஏற்பட்ட வன்முறைக் கலவரத்தை அறிந்து, கருவறை உறவுகளின் கண்ணீர் துடைக்க தமிழ்ப்பணியின் பணிப்பாளர் திரு எம்.ஏ. சாமி அவர்கள் இலங்கை வந்தார். வேரித்தாஸ் அமைத்த முதல் உறவுப் பாலம் அவர். "நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி அஞ்சி யுயிர்வாழ்த லறியாமை" என்னும் பாரதியின் வரிகளுக்கு உரமூட்டியது அவரது உரைகள். கடந்த கால் நூற்றாண்டாக அந்தப் பணியைத் தொடர்கிறது வேரித்தஸ் தமிழப் பணி.

செய்தி, கருத்து நெறிப்படுத்துதல், மகிழ்வூட்டுதல் என்பன வானொலியின் அடிப்படைப் பணிகளாகக் கருதப்படுகின்றது. எண்ணங்களும் நிகழ்வுகளுமே செய்திகளாகின்றன. எனவே எண்ணங்களை ஆக்கபூர்வமாக நெறிப்படுத்துவதன் மூலம் விளைவுகளிலும் நல்ல மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை வரலாறு பல தடவை உறுதி செய்திருக்கின்றது. செய்தி ஊடகங்களினால் கிளப்பிவிடப்படும் புரளிகளினால் பல அனர்த்தங்களை இந்த உலகம் சந்தித்திருக்கின்றது. குறிப்பாக போர் மற்றும் பனிப் போர்க் காலங்களில் இந்த வரலாற்று உண்மைகளை நாம் சந்தித்திருக்கின்றோம். இரத்தம் சிந்துகின்ற அரசியலுக்கு இலங்கைத் தமிழ்ச் சமூகம் முகம் கொடுக்க ஆரம்பித்த காலத்திலிருந்து செய்திகளின் நம்பகத்தன்மையைச் சரி செய்து கொள்ள உரைகல்லானது வேரித்தாஸ் தமிழ்ப் பணி.

வெள்ளி விழாக்காணும் வேரித்தாஸ் தமிழ்ப்பணியின் பணிப்பாளர் அருட்திரு ஜெகத் கஸ்பார் அடிகளார் பணிக் காலம் தமிழ் ஈழ வரலாற்றில் வைர வரிகளினால் பொறிக்கப்படும்.
புலம்பெயர்ந்து சிதறி வாழும் உறவுகளை கருத்து நெறிப்படுத்தி, நேர்கோட்டிற்கு கொண்டுவரும் சவால் நிறைந்த பாரிய பணியை அவர் ஏற்றிருக்கின்றார். அடிகளாரின் பன்முக ஆளுமையின் செயல்முறைகளும், நடைமுறைகளும் அவரது ஆழமான வியூக கண்ணோட்டத்தை விரிவுபடுத்துகின்றன. கனடாவின் அனைத்து வானொலிகளுடனும் பாரிஸில் தமிழ் ஒலி—ஒளியுடனும் இணைந்து வன்னிக் குழந்தைகள் பசியாற கோடிகள் சேர்த்து உதவியதை ஐ.நாவின் சிறுவர் நலன்பேண் பிரிவு மனதாரப் பாராட்டியிருக்கின்றது.

வெள்ளி மலரை வாழ்த்துக்களாலும் கட்டுரைகளாலும் சிறப்பித்த அனைத்துக் கரங்களையும், வெள்ளிவிழாத் தொடர்பான செய்திகளையும் தகவல்களையும் வெளியிட்ட ஈழநாடு, தமிழ் அலை, ஐ.பி.சி நிர்வாகத்தினரையும் நன்றி உணர்வுடன் பார்க்கின்றோம். மிகக் குறுகிய கால அவகாசத்தில் தங்கள் எழுத்துக்களைத் தந்துதவி, தொடர்பாடல் தொடர்பான பின்புலத்தையும் அறிய உதவிய கல்விமான்கள் அவர்கள்.


பல்லாண்டு காலமாக வேரித்தாஸ் தமிழ்ப்பணியில் தங்கள் உதிரத்தை உழைப்பாகத் தந்த அனைத்து படைப்பாளிகளையும் அன்புடன் நினைவு கூறுவதில் பெருமையடைகின்றோம்.
வேரித்தாஸ் தமிழ்ப் பணி ஒரு திறந்தவெளிப் பல்கலைக்கழகம் போல் மேலும் பல்லாண்டு பணியாற்ற இறையருள் வேண்டுகின்றோம்.

**வேரித்தாஸ் வெள்ளிவிழாக் குழுவினர்**
ஜேர்மனி, 29.6.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை நின்றிட வேண்டும்

உலகின் பல்வேறு நாடுகளிலும் பரந்துபட்டு வாழுகிற மக்கள் இனங்களில் தமிழ் மக்கள் இனமும் ஒன்று. பாரம்பரியமாகத் தமிழ் மக்கள் வாழும் இந்தியா, இலங்கை மட்டுமல்லாது மலேசியா, சிங்கப்பூர், பர்மா, பிஜி, நியூஸியன், கயானா, மொரிசியஸ் , இன்று ஐரோப்பிய நாடுகள், கனடா, அமெரிக்கா என தமிழ் மக்கள் வாழும் நாடுகளது பட்டியல் விரிகிறது. உலகெங்கும் பரந்து வாழும் இத்தமிழ் மக்களிடையே ஓர் கலாச்சார உறவுப் பாலத்தை உருவாக்குவது வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணியின் இலக்குகளில் ஒன்றாகும். அந்த இலக்கு பரவலாக வெற்றியடைந்திருப்பதை என்னால் இன்று மனநிறைவுடன் உணர முடிகிறது.



ஐரோப்பிய நாடுகளில் வெரித்தாஸ் தமிழ்ப்பணி நிகழ்ச்சிகளை தமிழ் மக்கள் கேட்கிறார்கள் என்பது பேரானந்தம் தருகிறது. மேற்கத்தியக் கலாச்சாரச் சூழலில் வாழும் தமிழ் மக்கள் அதி நவீன ஊடக வழிகள் பல இருந்த போதிலும் எமது வானொலி நிகழ்ச்சிகளை மதிப்புடன் கேட்கிறார்கள் என்பது உண்மையிலேயே மனநிறைவு தருகிறது. வெள்ளி விழா நிகழ்ச்சிகளையும்
அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள் என்பதில் அளவிலா மகிழ்ச்சி.

உண்மைக்கு சாட்சியம் பகரவே இயேசு உலகிற்கு வந்தார். இவரது பணியை நாங்கள் தொடர்கிறோம். உண்மையின் குரலாக என்றும் வெரித்தாஸ் ஒலிக்கும். ஒடுக்கப்பட்டு நீதி மறுக்கப்படும் மக்களுக்காய் வெரித்தாஸ் என்றும் குரல் கொடுக்கும். இந்த உறுதியை வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யும் உங்களுக்கு என் நன்றி பரிசாகத் தருகின்றேன்.

விழாக் குழுவினருக்கும் , மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

MARIANUS AROKIASAMY
ARCH EPISCOPUS, MADURAIENSIS

**பேராயர் ம. ஆரோக்கியசாமி**
*தலைவர், சமூகத்தொடர்பு ஆணைக்குழு*
*தமிழக ஆயர் பேரவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Radio Veritas Asia

# *A Time to Rejoice*

*The twenty-five years of Tamil Language Service for the people of Tamil Nadu and Northeast Sri Lanka is indeed a feat. This kind of achievement becomes even more precious if we consider the fact that historically the last twenty-five years for the Tamil people have been years of diaspora and a time of suffering, a time of surviving and healing, a time of searching and re-uniting.*

*Our Tamil coordinators and producers during all these years were surely affected and even motivated because of the awareness of the existing situation in your homeland. This situation must have been the reason for your sincere commitment and creative programming in your service to the Tamil people.*

*On this anniversary celebration, I together with the management council members and the whole working force of Radio Veritas Asia, salute you and rejoice with you. We join you in thanking the Lord for giving you the strength and wisdom all those years. It is also fitting to thank all the listeners of this program for their support and inspiration, suggestions and all their efforts to help make this broadcast more effective and directed.*

*For the future, I cannot but wish and pray that this service will continue to be a vanguard in its creative approach by using the different advanced media and approaches. It is also my wish that your down-to-earth Christian programs to help alleviate the sufferings of a broken people will sustain its healing effects, uniting families and ushering a new era of national re-unification and development.*

*More power to you and our sincere CONGRATULATIONS!*

**Fr. Carlos S.Lariosa, SVD**
**RVA General Manager**

-Buick Street, Fairview Park, Quezon City, Philippines - Mailing Address: P.O. Box 2642 Quezon City 1166 Philippines
Telex: 64220 VERTAS PN - Fax: 938 - 1940 - Tél N°: 939-0011 to 14 (connecting al depts.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Most Rev. Dr. Rayappu Joseph
Bishop of Mannar,
Pattim, Mannar,
Sri Lanka
Tel. & Fax : 023-2290

**மன்னார் ஆயர் அவர்களின் மங்கல வாழ்த்து.**



# கனவு மெய்ப்பட வேண்டும்

ஜேர்மனியில் இருந்து வெளிவரும் வெரித்தாஸ் வானொலி வெள்ளிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இரவினிலே இறைவன் நிலா விளக்கை ஏற்றி வைத்திருக்கின்றார். உலகினிலே உண்மையை உரைக்க வேண்மென்று வெரித்தாஸ் வானொலி என்ற தீபத்தை திருச்சபை மணிலாவில் ஏற்றி வைத்துள்ளது.

வெரித்தாஸ் என்றால் உண்மை என்பதே பொருள். உண்மைதான் மனித வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் ஆதாரம். உண்மை செயல் வடிவம் பெறும் பொழுது அது நீதியாகின்றது.

இயேசுபிரான் ஏற்படுத்திய இறை அரசில் உண்மையும் நீதியும்தான் முதல் இடம்பெறும் உயர் மதிப்பீடுகள். உண்மையினதும் நீதியினதும் பணியிலே வெரித்தாஸ் வானொலி ஈடுபடும் பொழுது இறைவனிடம் இருந்து வரும் காருண்யத்தையும் கலந்துதான் பணி செய்கின்றது.

தமிழ் ஈழப் பகுதியில் இந்தப் போர்க்காலத்தில் வாழும் எமக்கு வெரித்தாஸ் வானொலி ஒரு பெரும் வரப்பிரசாதமாக இருந்து வருகின்றது. இங்கு நடைபெறும் கொடிய போரையும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களையும், அப்பாவி மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் இருட்டடிப்புச் செய்து தென்னிலங்கையில் அரசியல் இலாபத்தையும், உலக நாடுகளில் அனுதாபத்தையும் பெறுவதையே நோக்கமாகக் கொண்டு எமது நாட்டின் அரசியல் ஊடகங்கள் செயற்படுகின்றன. இந்தப் போர்க்காலச் சூழலில் மனித உரிமை மீறல்களும் அப்பாவி மக்களுக்கெதிராக இழைக்கப்படும் தீமைகளும் எப்பக்கத்திலிருந்து வந்தாலும் அவை கண்டிக்கப்படவேண்டுமென்ற அவசியத்தை வெரித்தாஸ் உணர்ந்து செயல்படுவதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். இந்த வகையில் இருளில் வாழும் எமக்கு வெரித்தாஸ் வானொலிச் சேவை ஒரு ஆறுதலின் தாரகை. மௌனிகளாக்கப்பட்ட எமக்காக ஓங்கி ஒலிக்கும் குன்றாக் குரல். இன்னலுறுவோருக்காக இது செய்யும் இறைவேண்டுதல் எமக்கெல்லாம் ஓர் ஆறுதலின் ஊற்று.

உண்மையைப் பக்கச்சார்பற்ற ஊற்றுக்களிலிருந்து பெற்று நீதியோடு வெரித்தாஸ் தொடர்ந்து பணி புரிய எனது நல் வாழ்த்தக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உண்மையின் சேவையில் கடந்த 25 ஆண்டுகளாகத் தம்மை உருக்கி உயரிய பணியாற்றிய அனைவரையும் பாராட்டி இறை ஆசீர் வேண்டி நிற்கின்றேன்.


**பேரருட் திரு இரா. யோசேப்பு**
*ஆயர், மன்னார் மறை மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Soma. Srikarakurukkal**
*Post Fach-103508*
*44147.Dortmund.*
*Germany*
*Tel- 0231.829136*

சிவாச்சாரியரத்தினம்
சிவாச்சாரிய குலபூசணம்
சிவாகமகிரியாகலாபமணி
சிவாகமபூசணம்
**சிவஸ்ரீ. சோம.ஸ்ரீகரகுருக்கள்**
(ஸ்ரீ.நவதுர்கா.தேவஸ்தான பிரதம குரு)
வூப்பெற்றால்.



# எண்ணிய முடிதல் வேண்டும்

ஆண்டவன் பெயரைப் போல் தமிழ் நெஞ்சங்கள் அன்றாடம் உச்சரிக்கின்ற பெயர் வெரித்தாஸ் தமிழ்ப் பணி. இனிய இதயங்களே, அன்பு நெஞ்சங்களே என வாஞ்சையுடன் அழைக்கும் அந்த இனிய உபசரிப்புக்கு சொந்தமானது அது. உலக இயக்கத்தில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, இணையம்....... இவ்வாறான பல ஊடகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. பல ஆயிரக்கணக்கான கல் தொலைவும் அருகிலிருப்பது போல் அனைத்துச் செய்திகளையும் இவை உடனுக்குடன் தெரியப்படுத்துகின்றன. இருப்பினும் வணிக நோக்கில் பல உண்மைகளுக்கு புறம்பான செய்திகளையும் அவற்றில் சில கூறுகின்றன. அவ்வாறில்லாமல், உண்மைக்கு இலக்கணம் வகுத்து, தமிழ் மக்களின் நன்மதிப்பை பெற்று ஓங்கி ஒலிக்கின்றது வெரித்தாஸ் வானொலி. கத்தோலிக்க மதத் தகவல்களை கூறுவதற்காக இவ் வானொலி 1969ம் ஆண்டு ஏப்ரல் 11ம் திகதி அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டாலும், தேச எல்லைகளைத் தாண்டி மக்கள் நலனை இதயத்தில் சுமந்து வாசல் தேடி தினமும் வருவதை பாராட்ட வார்த்தைகள் கோடி வேண்டும்.

17 மொழிகளில் ஒலிபரப்பப்படுவதும், கடந்த ஆண்டு வந்த நேயர் கடிதங்கள் 126000 என்பதும், 62000 கடிதங்கள் தமிழ் நெஞ்சங்களினதும் என்பதை அறியும் போது நெஞ்சு நெகிழ்கின்றது.

மக்கள் நலனுக்காக ஒரு சர்வாதிகார அரசையே எதிர்த்துப் போராடி பெரும் சாதனை படைத்த வெரித்தாஸ் வானொலி தமிழ்மக்களுக்காக குரல் கொடுப்பது யாவரும் அறிந்ததே. திரு. எம். ஏ. சாமி அவர்களைத் தொடர்ந்து வந்த பலருக்குப்பின் இந்த இனிய தமிழ்ப்பணியை இன்று அருட்திரு. ஜெகத் கஸ்பார் அடிகளார் பொறுப்பேற்றுச் சிறப்புற நடாத்தி வருகின்றார்கள்.

அவர்களது அசாத்தியமான துணிவும் திறமையும், பொதுப்பணியும் உலகறிந்ததொன்று. வெரித்தாஸ் வானொலியும், அதன் பணியாளர்களும் நீடு வாழ்க.

வெரித்தாஸ் வானொலியின் எதிர்கால வளர்ச்சித்திட்டங்கள் இனிது நிறைவேற இறையருள் வேண்டுகின்றேன்.

அன்புடன்
*சிவஸ்ரீ. சோம. ஸ்ரீகரக்குருக்கள்.*
(அகில உலக இந்துமதகுருபீட ஜேர்மன் அமைப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SANTHOME COMMUNICATIONS CENTRE

## நினைவு நல்லது வேண்டும்

உண்மையின் குரலாக ஓங்கி ஒலிக்கும் வெரித்தாஸ் தமிழ்பணீ வெற்றி விழாக் காண்கிறது. லெமூரியாக் கண்டத்தின் முதல் இனமாகத் தோன்றிய தமிழ் இனத்தின் குரலாக இன்று உலகம் முழுவதும் அது ஒலிக்கிறது.

தமிழ் மக்களின் மொழி, இலக்கியம், கலாச்சாரம் உலகெங்கிலும் பரவிக்கிடக்கும் தமிழரின் பண்பாட்டு வேர்கள் என இவை ஒவ்வொன்றின் அடையாளத்தையும் உலகிற்கு உணர்த்தும் நிகரற்ற வான் ஊடகமாக வெரித்தாஸ் வானொலி திகழ்கிறது.



தகவல் தொழில்நுட்ப உலகம் பல நவீனங்களைக் கண்டுவிட்ட போதிலும், அந்த நவீனங்களின் ஊடாக தமிழ்ப்பணி நிகழ்ச்சிகளை, ஆசிய, ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்லாது, கனடா மற்றும் அமெரிக்காவில் வாழும் தமிழர்களும் விடாமல் ஆர்வத்துடன் கேட்கிறார்கள் என்னும் செய்தி கேட்டு நெஞ்சம் பெருமிதம் கொள்கிறது.

உலகில் பல பகுதிகளிலும் வாழும் தமிழரை ஒன்றிணைக்கும் உறவுப் பாலமாக தமிழ்பணி உயர்ந்திருப்பது கண்டு பெருமகிழ்ச்சி கொள்கின்றேன். தமிழரிடையே ஒற்றுமை உணர்வையும் சக மனிதரோடு மனித நேயத்துடன் வாழும் பண்பையும் நாள்தோறும் வலியுறுத்தி வரும் வெரித்தாஸ் தமிழ்பணியை, சாதி, மத வேறுபாடு இல்லாத எல்லா இனிய நெஞ்சங்களும் தங்கள் உயிராகப் போற்றி வருவது வெரித்தாஸ்சின் வெற்றிக்கு அறிகுறி.

உண்மைக்கும் அன்புக்கும் ஒரே சாட்சியாய் நின்று உலகிற்காய் உயிர் கொடுத்த உத்தமன் இயேசு. அவர் காட்டிய பாதையில், துவக்க காலத்திலிருந்து தமிழ்பணியை உண்மை உணர்வுடனும், உறுதியுடனும் கட்டியெழுப்பிய அன்பு உள்ளங்களையும், இந்நாள் வரை அதை உயிர்ப்புடன் கட்டிக் காத்துப் பெருமை சேர்த்திருக்கும் தோழமை நெஞ்சங்களையும் வாழ்த்துகிறேன்.

வானின்று பெய்யும் மழையாக, நீதியின் குரலாக
உங்கள் பணி என்றும் தொடரட்டும் !
வெள்ளிவிழாக் காணும் தமிழ்ப்பணி இதயங்களைத்
தாய்நாட்டிலிருந்து வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
**அருள்திரு ஜோ லூர்துசாமி**
இயக்குநர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னையிலிருந்து

# ஒலியே நீ வாழ்க!

திசைபரவும்
ஒலிகள்...
ஆயிரம் ஒப்பனைகளுடன்
உண்மையின் சொல் ஒப்பனையற்றது.
எதனைக்கொண்டு கண்ணீர் ஒப்பனை செய்யும்?
எந்த நறுமணத்தைப் பெருமூச்சுப் பூசிக் கொள்ளும் ...
ஈழத்தமிழர்களின் கண்ணீரும் பெருமூச்சும்
திசை எங்கும் கேட்டது.
காலக் கணக்கை வெள்ளியில், தங்கத்தில், வைரத்தில்
குறிக்கலாம்.
உண்மையை..
அது ஞாயிறு போலும்...விண்மீன் போலும்..
வெரித்தாஸ்! உன் வளர்ச்சியும் அத்தகையதே
நீ வாழ்க.

- இன்குலாப்

# வாழ்க வெரித்தாஸ் வானொலி அன்னை !

லண்டனிலிருந்து

*மணிலா மாநகர்*
*மங்கலத் திருந்து*
*பணிசெய் வானொலி*
*பார்புகழ் வெரித்தாஸ்*
*திணிநெடுங் குன்றத்*
*தேம்படு உச்சியில்*
*அணிபெற ஏற்றிய*
*அருள்விளக் காகும்!*

*காற்றினில் ஏறியிக்*
*காசினி ஒளிபெற*
*ஆற்றும் பணிகள்*
*ஆயிரம்! ஆயிரம்!*
*நாற்திசை முழங்கும்!*
*நானில மாந்தரும்*
*போற்றுவர் என்றும்!*
*புரையிலாப் புகழே*

*ஒருபாற் கோடா*
*உலகச் செய்திகள் !*
*விருந்தாய் அமுதாய்*
*விளங்கும் உரைகள் !*
*மருந்தாய் நலஞ்செய்*
*மாண்பின் நிகழ்ச்சிகள்!*
*தருந்தாய் வானொலி*
*தரணியில் வெரித்தாஸ் !*

*வெல்லும் தமிழில்*
*வியனறிவு ஊட்டும்*
*நல்லவான் ஒலிகளுள்*
*நற்றுணை போன்றது*
*அல்லவோ வெரித்தாஸ்!*
*அன்புநெஞ் சங்கள்*
*சொல்லும் வாசகம்*
*சூழ்ந்ததே பெருமை!*

*கால்நூற் றாண்டு*
*கலங்கரை விளக்காய்*
*வாலறி விறைவன்*
*வகுத்த நெறியெலாம்*
*ஆலயம் உலகாய்*
*ஆகுக! வென்றே*
*நூல்நயத் துண்மைகள்*
*நுவலும் வானொலியே!*

*வாழ்க, வெரித்தாஸ்*
*வான்புகழ் வானொலி !*
*ஏழ்கடல் வையகம்*
*எங்கணும் நலமுற*
*ஆழ்ந்த கருத்துக்கள்*
*ஆறிவலை அலையாய்ச்*
*சூழ்கவே உலகெலாம்*
*சுடரொளி பரப்புக !*

**எஸ் . சங்கரமூர்த்தி — சங்கர்**
முன்னாள் தலைமைத் தயாரிப்பாளர்
பி. பி. ஸி . தமிழோசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெரித்தாஸ் வெள்ளி விழா!**
**தமிழருக்கு ஓர் வெற்றி விழா !!**
**வாழ்த்துக்களையும் வளங்களையும்**
**அள்ளி வழங்கும் நல்ல விழா ! ! !**



**KATH. PFARRAMT**
**ST. MARIA MAGDALENA**

Horneburger Straße 58
54711 Datteln-Horneburg
Germany
Tel./Fax : 00 49 (0) 2363 625 20
e-mail : esjay.raj@t-online-de



தமிழ் அல்லது தமிழன் என்ற வார்த்தைகளை உண்மையான உறவுப்பற்றுடனும் உரோச உணர்வுடனும் எல்லாத் தமிழர்களும் விதிவிலக்கின்றி அணுக வேண்டிய நேரமிது

தமிழ் இனப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கெடுக்காவிட்டாலும் தாய்த் தமிழையும், உடன்பிறப்புக்களையும் காட்டிக் கொடுக்கும் ஈனம் மறைந்து தாயக மண்ணையும் மக்களையும் காத்து விடுதலை அடைய வீரத்துடன் போராடும் தமிழர் தொகை வளர்க!!

வெரித்தாஸ் அல்லது உண்மை என்ற தலைப்பில் இயங்கும் வானொலியும் அதை வளர்த்த பெரியார்களும் இன்று அதை ஈழத்தமிழ் போராட்டத்தின் உண்மைக் குரலாக இயங்க வைத்திருக்கும் கஸ்பார் அடிகளாரும் வாழ்க வளர்க என்று தமிழ் இனம் விழா எடுக்கின்றது.

எமது விடுதலைப் போராட்டம் பல வளர்ச்சிப் படிகளைத் தாண்டி விட்டது.
அரசியல் போராட்டத்துடன் ஆயுதப் போராட்டம் வளர்ந்ததும் இவை இரண்டும் இணைந்து மக்கள் மயமாக்கப்பட்டதும் நாளடைவில் சர்வதேச மயமாக்கப் பட்டிருப்பதும் நாமறிந்த வெற்றிப் படிகளாகும்.

இத்தனை படிகள் தாண்டி வெற்றி நடைபோட நாள்தோறும் களத்தில் உயிர் கொடுத்துப் போராடும் போராளிகளுக்கும் பட்டினிச் சாவின் எல்லையில் நின்று போராடும் பொதுமக்களுக்கும் நம்பிக்கை நிறைந்த வார்த்தைகளால் ஊக்கமும் ஊட்டமும் கொடுப்பது வெரித்தாஸ்.

புலம் பெயர்ந்து அந்நிய அநியாயங்கள் மத்தியில் வாழ்ந்தாலும், தாயகத் தாகத்துடன் தமிழினத்தின் விடுதலைக்குதாராளமாய் கொடுக்கும் உள்ளங்களையும் தவளத் துடிக்கும் தமிழ் குழந்தைகளையும் ஈகையில் இணைப்பது வெரித்தாஸ்.

சிதறுண்டு வாழும் ஓர் இனத்தை
இல்லை, சிதறிக் கொண்டிருக்கும் எம் இனத்தை உண்மை என்ற இலட்சியத்தின் கீழ் நீதி என்ற நெறியின் கீழ் கரம் பிடித்து உள்ளத்திற்கு உரம் கொடுத்து வழி நடத்துவது வெரித்தாஸ்.

உண்மையிலும் நீதியிலும் மலருவது ஈழ விடுதலை இந்த உயர்ந்த உன்னத இலட்சியத்தை இலச்சிய புருசன் இயேசு காட்டிய வழியில் நல்ல ஆயனாகவும் நம்பிக்கை ஊட்டும் தலைவனாகவும் வழி நடத்துகிறவர் ஜெகத் கஸ்பார்

வெரித்தாஸ் வானொலியின் பணி வளர்க!
அதன் பணியாளர்கள் அனைவரையும் வாழ்த்தி இறை அருளை அவர்கள் மேல் வேண்டுபவன்.

**பணியாளன் சீ. யோ. இமானுவேல்**
*29. மே. 2001. டற்றல்ன். ஜேர்மனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr. SP. THINNAPPN MA., M.Lit., Ph.D**
*South Asian Studies Programme*
*Faculty of Arts and Social Sciences*
*National University of Singapore*
*3 Arts Link, Kent Ridge*
*Singapore 117570.*

## சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!

பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து வெரித்தாஸ் வானொலி நிலையம் தமிழ் நிகழ்ச்சிகளை ஒலி பரப்பத் தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு எய்தியதன் தொடர்பாக மலர் வெளியிட இருப்பது அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

வெரித்தாஸ் என்றால் இலத்தீன் மொழியில் உண்மை என்று பொருள். உள்ளத்தால் பொய்யாதிருப்பது உண்மை என்றும், வாயால் பொய்யாதிருப்பது வாய்மை என்றும், உடம்பால் (மெய்யால்) பொய்யாதிருப்பது மெய்மை என்றும் பகுத்துக் காணும் பண்பாட்டுச் சிறப்பு தமிழுக்கு உண்டு. எனவே எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் உண்மையைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதை எடுத்துக்காட்டாகக் கொண்டு பணியாற்றும் வெரித்தாஸ் வானொலி நிலையத்தின் தமிழ்ப் பணியைப் பாராட்டுகின்றேன்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்னும் வள்ளுவர் வாக்கு தனிமனிதர்க்கு மட்டுமன்றி நிறுவனங்களுக்கும் பொருந்தும். எனவே உலகத் தமிழர்களை ஒன்று சேர்க்கும் பணியிலும் இவ்வானொலி நிலையம் உயர்ந்து விளங்குகிறது.

தமிழ் மொழி வழியாகப் பண்பாட்டையும், ஒற்றுமையையும் தரணி எங்கும் பரப்பும் வெரித்தாஸ் வானொலி நிலையம் ஒல்லும் வகையான் எல்லாம் ஓயாது தொடர்ந்து பல்லாண்டு பணியாற்ற வாழ்த்துகின்றேன்.

**டாக்டர் சுப. திண்ணப்பன்.**
*சிங்கப்பூர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரியத்தில் உறுதி வேண்டும்

ஈழத்தமிழர்களின் சொல்லணாத் துன்பங்களை உலக மனச்சாட்சியின் முன் கொண்டு வருவதை தன் தலையாய பணியாக ஏற்றிருக்கும் வேரித்தாஸ் வானொலி நிலையத்தின் கால்நூற்ண்டு விழாவிற்கு மனமார்ந்த நன்றி கலந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.
இந்தத் தலைமுறை ஏதோ வழியில் எம்மீழத் தமிழினத்தை அணைத்து ஆதரிக்க வேண்டுமென உயிர் மூச்சாகக் கருதும் வேரிததாஸ் வானொலியின் பணிப்பாளர் அருட் திரு ஜெகத் கஸ்பார் அடிகளாரை நெஞ்சாரப் பாராட்டுகின்றேன்.

நாமார்க்கும் குடியல்லோம், நமனையஞ்சோம் என்ற நெஞ்சுத்துணிவோடு, நற்றமிழர் மேன்மைக்கே உழைத்து வாழ்வோம் என்று சூளுரைப்போம். அவ்வகையில் மனித உரிமைக்கு குரல் கொடுத்து நீதிக்கும், நியாயத்திற்கும் கலங்கரை விளக்கமாய் திகழ்ந்து தமிழ் சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் அரியதொரு தொண்டினை ஆற்றிவரும் வேரித்தாஸ் வானொலி நிலையத்தின் கால்நூற்ண்டு விழாவினை நினைவு கூர்ந்து அக மகிழ்கின்றேன். தம் வானொலி நிலையம் வளமுடன் வளர்ச்சி பெற, உள்ளன்போடு வாழ்த்துகிறேன்.
வாழ்க தம் நற்பணி. வளர்க வேரித்தாஸ் தமிழ்ப்பணி.
உண்மை ஓங்குக!

**திரு. கி. சின்ன அப்பன்**
தமிழீழ ஒத்துழைப்பு கழகம்
டார்பன், தென் ஆபிரிக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களமும் கருவியுமான வெரித்தாஸ் வானொலி



வாடா தமிழா
வந்துப் பாரடா
விரிந்துக் கிடக்கும்
வையகத்தை
வந்துப் பாரடா

அடிமைத்தோலை கழற்றி எறி
ஆளுமை உணர்வை
உள்ளே செலுத்து

களம் கொள்
கருவி எடு
எரி
பகைவனை வீழ்த்து
கொடி நாட்டு
வீரமாய் முளைத்தெழு
மீண்டும் தமிழனாய்
பிறவிக்கொள்
வளர்க வாழ்க
வெரித்தாஸ் வானொலி

ஒரு போராட்டத்தின் வெற்றி யாது தெரியுமா?
களமும் கருவியும்தான். தமிழ் மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தின் களமாயும் கருவியாகவும் சேவையாற்றிக் கொண்டிருக்கும் வெரித்தாஸ் வானொலியை மனமார வாழ்த்துகின்றேன்.
கடந்த கால்நூற்றாண்டுகளாய் தனது நோக்கில் சிதைவுறாமல் பணியாற்றிடும் வெரித்தாஸ் வானெலி ஒரு வியப்பக்குறியே. சுவரில்லாமல் சித்திரம் வரைய இயலுமா? இயலும் சான்று வெரித்தாஸ் வானொலி. ஆம். பல நூறு மைல் கற்களைத் தாண்டி தமிழ் - தமிழன் என்ற சூழல் கொண்டிராத நாட்டில் தமிழ் வானொலியை உருவாக்கி செயலாற்றிடும் பெருந்தகையாளரை என்னென்று சொல்வது.

தமிழீழத் தோழர்களின் இணைப்பகமாக இயங்கும் வெரித்தாச் வானொலியின் குரலினை பல சூழலில் கேட்டு உள்ளம் உருகியுள்ளேன். அவர்களின் கடிதங்களை ஒலிநாடாக்களின் வழி கேட்கும் போது நான் என்னையே இழக்கின்றேன்.
வாடா நண்பா உன் அவலம், சோகம் சுமை இவ்வளவா என்ற வியப்பிலிருந்து மீளமுடியாமல் தவித்த சூழல் கொஞ்சமா நஞ்சமா?
என்னை நானே அழ வைக்க வேண்டும் என்ற எண்ணம் வரும்போது என் கைகளில் தென்படுவது அந்த ஒலிநாடாக்கள் தானே.
இன்னும் சொல்ல வேண்டுமானால் எமது தமிழீழ மக்களின் அவலத்தை - இன்னலை வெரித்தாஸ் வானொலியின் ஒலிநாடா வழிதான் அதிகமாக உணர்ந்தேன்.

வளர்க தொண்டு ! வாழ்க வெரித்தாஸ் வானொலி !

மலேசியாவிலிருந்து


**உணர்ச்சிக் கவிஞர் சீ . அருண்**
கிள்ளான், மலேசியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர் வை. நந்தகுமார்**
*பேராதனைப் பல்கலைக்கழகம்*
*இலங்கை.*

# வாழ்த்துரை



## பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?

வெரித்தாஸ் தமிழ்ப் பணி வெள்ளி விழாக் காண்கின்ற செய்தி அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். உலகெங்கும் பரந்து வாழும் இனிய இதயங்களுக்கு உறவுப் பாலம் அமைத்து செய்தி சொல்ல உருவாக்கப்பட்ட வெரித்தாஸ் தமிழ்ப்பணி, ஈழத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகி இன்று வெள்ளி விழாக் காண்கின்றது. நிலை இழந்து தவித்தபோது தன் "கடன் அறிந்து காலம் கருதி இடன் அறிந்து" எண்ணி உரைத்த கருத்துக்கள் ஈழ மக்களுக்கு வேதமாகியது. வெரித்தாஸ் முதியவர்களுக்கு நம்பிக்கை கொடுத்தது. இளையவர்களுக்கு கீதை சொன்னது. தேம்பி அழுத குழந்தைக்குத் திடம் கொடுத்தது. மறுபடியும் தர்மம் வெல்லும் என்ற சத்தியாவேசத்தை வேள்வியாக வளர்த்தது வெரித்தாஸ் தமிழ்ப் பணி. சீரிய பணியை சிறப்புற நடத்தும் அருட் திரு ஜெகத் கஸ்பார் அடிகளார், மற்றும் வேர்களாகவும், விழுதுகளாகவும் வெரித்தாஸ் தமிழ்ப் பணியைத் தாங்கி நிற்கும் அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

வெள்ளிவிழாவை புலம்பெயர்ந்த மக்களின் ஒரு நன்றி விழாவாகவே காண்கின்றேன்.

விழாச் சிறப்புற வாழ்த்துவதோடு, வெள்ளி இறகுகளைச் சேகரிக்கும் வெரித்தாஸ் தமிழ்ப்பணி மேலும் தங்க, வைர இறகுகளைச் சேகரித்து பல்லாண்டு காலம் வானலையில் சிறகடிக்க நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

*அன்புடன்*
**வை. நந்தகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிரஜைகள் குழு வன்னிப் பிராந்தியம்**
Citizen Committee of Vanni Region

## என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய் யாகும்?

மறைப் பணியை தமிழ்ப் பணியாகவே கொண்டு 25 ஆண்டுகள் வளர்ந்து, வாலிப மிடுக்குடன் உண்மையை உரைக்கும் வெரித்தாஸ் தமிழ்ப் பணியே, உன் பணி பல்லாண்டு சிறத்தோங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி விண்ணிலிருந்து வாழ்த்துகின்றேம்.

தமிழுக்கும், தமிழருக்கும் இடுக்கண் வரும் பொழுது, விரைந்து குரல் கொடுக்கும் பணிக்காக நாம் தலை வணங்குகின்றோம்.

உலகின் கண்களிலிருந்து மறைக்கப்பட்ட ஈழத்தமிழர் எமது இன்னல்களை இனங்கண்டு, உலகெல்லாம் நீதிகேட்டு ஓங்கி ஒலிக்கும் உன் பணியை நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

வன்னியிலே போரின் கொடும் பிடியில் சிக்கி, நாம் எல்லாம் பசியில் வாடியபோது, உலகெல்லாம் கையேந்தி, எம் மழைலைகளின் வயிற்றில் பால் வார்த்து, பசி போக்கி காலத்தால் செய்த அருஞ்செயலை வன்னி மக்கள் நாம் என்றும் மறவோம்.

இப் பணியால், நீ எதிர் கொண்ட அளவில்லா இன்னல்களின் தடையினை அஞ்சா நெஞ்சுடன் தகர்த்தெறிந்து வெள்ளி விழா கொண்டாடும் இவ் வேளையில், உன்னை வன்னி மக்கள் சார்பில் நாம் உளமார வாழ்த்துகின்றோம்.

**உண்மை ஓங்குக.**



**எஸ். பி. நடராஜன்.**
செயலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெரித்தாஸ் வானொலி

புலவர்மணி
இளவாலை-அமுது.

வெள்ளிவிழாக் காணுகின்றோம் வெரித்தாஸ்! வான
வீதியிலே பறந்துவரும் ஒலியின் ஓசை
உள்ளத்தில் உறவாடும் தென்றல் காற்று
உண்மை கொண்டு நீர்ப்பாச்சும் கங்கை ஆறு

ஈழமக்கள் கண்ணீரைத் துடைத்த கைகள்
இனமழிக்கும் அரசியலை எரிக்கும் நாக்கு
நாளெல்லாம் நீதிநெறி நடக்கும் கால்கள்
நலஞ்செறிந்த அமைதிக்கே அழைக்கும் நெஞ்சம்.

கொலை வெறியால் குண்டுகளைக் குவிக்கும் நாடு
குற்றமற்ற தமிழ் இனத்தை நசுக்கும் நாடு
அலையாய்ப் படைதிரட்டி அழிக்கும் நாடு
அனைத்துலகைப் பொய்யாலே அணைக்கும் நாடு

செய்து வரும் கொடுமைகளை உலகம் கேட்கத்
தினந் தோறும் சொல்லிவரும் தேவதூதன்
வையகத்தெம் தாயகத்தின் மண்ணை மீட்கும்
மாவீரர் தியாகத்தின் மணியின் ஓசை

அரசியலார் அக்கிரமம், மறியல் வாழ்வு,
அநியாயம், மக்கள்படும் அவதி, வன்னிப்
பெருந்துயரம், பசிக்கொடுமை, பெண்கள் துன்பம்
பேசிவரும் நேசத்தின் புறாவே! வாழி!

ஆயிரமாய்த் தொல்லைகளைச் சுமந்துவிட்டோம்
அடுக்கடுக்காய் துன்பத்தால் சோர்ந்து வீழ்ந்தோம்
தாயினைப்போல் அணைத்திட்டாய் உரையின் ஆழம்
சரியாகப் புரிந்துவிட்டால் உலகம் வாழும்

நற்றமிழில் அன்பென்ற தேனைப் பூசி
நலம்சிறந்த கருத்தெல்லாம் அள்ளி வீசி
பற்றற்ற துறவியரின் வாழ்வில் நின்றும்
பாசத்தால் ஈழமக்கள் நெஞ்சில் வாழ்ந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேரித்தாஸ் நாட்குறிப்பேட்டில் இருந்து



- ஆசிய மக்களுக்கென கத்தோலிக்க திருச்சபை வானொலி நிலையமொன்று அமைக்கவேண்டுமென்ற யோசனையை முதலில் முன்வைத்தவர் திருத்தந்தை 12ம் பயஸ் என்பவர்.

- 1958 டிசம்பரில் மணிலா நகரில் ஒன்று கூடிய தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கத்தோலிக்க ஆயர்கள் செய்தி-தகவல் ஒலி பரப்பு மையமொன்றை உருவாக்க அதிகார பூர்வமாக முடிவு செய்தனர்.

- ஆகஸ்ட் 1960ல் மணிலாப் பேராயர் இத் திட்டத்திற்கு நிதியுதவி வேண்டி அப்போதைய ஜேர்மன் வேந்தர் கலாநிதி கொன்றாட் ஆடெனொவர் அவர்களைச் சந்தித்தார். ஆய்வுகள் மற்றும் நிதித்திட்டங்கள் சமர்ப்பிக்கும்படி அவர் பேராயரைப் பணித்தார்.

- 1963ம் ஆண்டு மேற்கு ஜேர்மன் பாராளுமன்றம் வேரித்தாஸ் வானொலி நிலையம் எழுப்ப நிதி ஒதுக்கீட்டை அங்கீகரித்து ஏற்று நின்றது.

- பிலிப்பைன்ஸ் நாடு, மக்களாட்சி அமைப்பைக் கொண்ட தனியார் வானொலியை அனுமதிக்கும் நாடாக இருந்ததாலும் ,ஆசியாவின் ஒரே கத்தோலிக்க நாடாக இருந்ததாலும் இதற்குத் தகுதியான இடமாக தெரிவானது.

- பரிசோதனை ஒலிபரப்புக்கள் பல முறை நிகழ்த்தப்பட்ட பின் 1969ம் ஆண்டு ஏப்ரல் 11ம் நாள் வெரித்தாஸ் வானொலி அதிகார பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

- "வெரித்தாஸ்" என்பது உண்மை என்ற பொருள்படும் லத்தீன் மொழிச் சொல். அதனால் இன் நிலையத்தின் பெயர் உண்மையின் குரலாக இருக்கிறது.

உண்மையின் குரலாய் ஓங்கி ஒலிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சுதந்திரம், மனித உரிமைகளின் அடிப்படைகளைப் பாதுகாப்பதும் பரவுவதும்
அறிவியல், கலை, கலாச்சார வளர்ச்சிக்குப் பங்காற்றுவது.
ஆசிய மக்களின் வளர்ச்சிக்கும், அமைதி வாழ்வுக்கும் பங்களிப்பு வழங்குவது.
ஆரோக்கியமான இசையைப் பரப்புவது.
ஆற்றுப்படுத்தும் ஓய்வுக்கு உதவுவது.

- 1969ம் ஆண்டு முதல் அனைத்துலக சிற்றலைப் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- 1976ம் ஆண்டு ஜுன்12ம் நாள் தமிழ் நிகழ்ச்சிகளின் ஒலிபரப்பு ஆரம்பமாகியது.

- 1976ம் ஆண்டு நவம்பர் முதலாம் நாள் வெரித்தாஸ் தமிழ்பணி ஒலிபரப்பு அதிகாரப் பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

உண்மையின் குரலாய் ஒலிப்பது
மனித மாண்பு,உரிமைகளுக்காய் பாடுபடுவது.
துன்புறும் மக்களுக்குத் துணையாய்இருப்பது
புதிய சமுதாயம் உருவாக்கும் கருத்துகளுக்கு ஊக்கமளிப்பது
மத நல்லிணக்கம் வளர்ப்பது.
உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்மக்களிடையே உறவுப்பாலம் அமைப்பது
தமிழ் மொழிக் கலாச்சார வளர்ச்சிக்கு உதவுவது.

- 1976 முதல் 1988வரை திரு. எம். ஏ. சாமி மற்றும் அவரது பிள்ளைகள் ரபி பெர்ணாட், கெலின் மேரி, புளொரா ராணி ஆகியோர் தமிழ்ப் பணியை வளர்த்தனர்.

- 1989 முதல் 1995 வரை அருட்திரு செபா, அருட் சகோதரிகள் செலஸ்ரீனா, ரூபி மேரி ஆகியோர் பணியாற்றினர்.

- 1996 முதல் அருட்திரு ஜெகத் கஸ்பார் தலைமையில் பணி தொடர்கிறது. மத நல்லிணக்கம் ஈழத் தமிழ் மக்களோடு இணைந்த பயணம் ஆகியவை ஜெகத் கஸ்பார் காலப் பணிகளின் சிறப்பாகும்.

- வெரித்தாஸ் நிலையத்தில் இருந்து இப்போது 17 ஆசிய மொழிகளில் ஒலிபரப்புக்கள் நடைபெறுகின்றன. எல்லா மொழிகளுக்கும் சேர்த்து கடந்த ஆண்டு வந்த நேயர்கடிதங்களின் தொகை 1,26,000 இவற்றில் தமிழ் மொழிக்கு மட்டும் 62,000 ஏறத்தாள பாதித்தொகை. மாதத்தில் சராசரி4500முதல் 5,000 நேயர் கடிதங்கள் கிடைக்கின்றன. இவற்றில் சுமார் 2000 கடிதங்கள் தமிழ் ஈழ நெஞ்சங்களிடமிருந்து கிடைக்கின்றன.
இந்தியா, இலங்கை என மட்டுமன்றி மலேசியா, சிங்கப்பூர், பர்மா மற்றும் அரபு வளைகுடா நாடுகளில் வாழுகின்ற தமிழர்களும் வெரித்தாஸ் வானொலியைக் கேட்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலன் பேணும் தொடர்பாடற் பணி

**எஸ். தில்லைநாதன்**
*தமிழ்ப்பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்*

**வெ**ரித்தாஸ் வானொ[illegible] நிலையம் ஒலிபரப்புத்துறையி[illegible] இருபத்தைந்தாண்[illegible]யினைப் பூர்த்தி செய்த தி[illegible] வெள்ளி விழாக் ச[illegible]வ் வேளையில், இன்று [illegible]ருவளர்ச்சி கண்டுள்ள வெகுஜனத் தொடர்பாடல் ஊடகங்கள் மனித சமுதாய வாழ்வில் பெற்றுள்ள இடம், அவற்றின் ஆற்றல் , அவற்றினால் ஆகக்கூடிய பயன்பாடு முதலானவை பற்றி எண்ணிப்பார்ப்பது பொருத்தம் உடையதாகும்.

இலங்கையிலே 1983 ஆடியில் இனக்கலவரம் மூண்ட வேளை பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் வதித்த தமிழர்களைப் பாதுகாப்புக்காக ஒரு விடுதியில் கொண்டு போய் விட்டார்கள். நாட்டின் அரசயந்திரம் தமிழ் மக்களைப் பாதுகாப்பதில் எவ்வித அக்கறையும் காட்டியதாகத் தெரியவில்லை. என்ன நடக்கப் போகிறதுதென்று தெரியாமல் பெரும் அச்சத்தில் மூழ்கித் தூக்கமிழந்து தவித்தவர்கள் வெரித்தாஸ் வானொலியைக் கேட்பதில் காட்டிய ஆவல் கொஞ்சமன்று. தொடர்பாடல் ஆனது மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாகவும், அவர்களுடைய அச்சத்தை அகற்றுவதாகவும், நம்பிக்கை இழக்கப்படும் சந்தர்ப்பங்களில் அதனை மீட்டளிப்பதாகவும் அமைவதால், தொடர்பாடல் ஊடகங்களை மக்கள் நாடுகின்றார்கள் என்பர். அது எவ்வாறாயினும், அந்தரப்பட்ட தமிழர்களுக்கு வெரித்தாஸ் வானொலியைக் கேட்பது அன்று ஆறுதல் அளிப்பதாய் அமைந்தது. அவ்வொலிபரப்பின் மூலமாக அவர்களுடைய அச்சம் அகற்றப்பட்டதென்றோ பாதுகாப்பான உத்தரவாதம் உண்டானதென்றோ கூறமுடியது. ஆனாலும், உலகத்தின் கவனத்தை நாங்கள் இழந்து விடவில்லை என்ற ஒருவகை ஆறுதலை வெரித்தாஸ் வானொலி அவர்களுக்கு வழங்கியது.

வெகுஜனத் தொடர்பாடல் ஊடகங்கள் எனப்படுவனவற்றுள் அதிக அளவிலான மக்களைச் சென்றடைவது வானொலியே ஆகும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைப் பொறுத்த வரையில் அதில் ஐயத்துக்கிடமில்லை. காடுகரம்பைகளிலும், வயல்களிலும் வேலை செய்வோர், கடலில் மீன்பிடிக்கச் செல்வோர், வாகனங்களில் பிரயாணம் செய்வோர் முதலானவர்களையெல்லாம் எளிதே எட்டக் கூடியது வானொலியே. தத்தமது தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டே சிரமமின்றி சுகமாக வானொலியைக் கேட்கலாம்.

அது புதுமையான ஒன்றென்பதற்காக வானொலியைக் கேட்டகாலம் போய்விட்டது. இன்று பல்வேறு நிலையங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக்கொண்டு ஒலிபரப்புகின்றன. எனவே மக்களைக் கவரக் கூடிய, அவர்களுடைய மதிப்பினை வெல்லக் கூடிய மார்க்கங்களை பற்றி வானொலி நிலையங்கள் கூடுதலாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில், நம்பகத்தன்மையை பேணும் முறையில் அவை செயற்பட வேண்டும். உடனடிச் சம்பாத்தியத்தை அவாவிய, தரம் தாழ்ந்த, கிளுகிளுப்பும், பரபரப்பும் ஊட்டும் நிகழ்ச்சிகள் நீண்ட காலப் பலனையோ, மதிப்பையோ பெற்றுத்தருமென்று கூறமுடியாது.

நிகழ்ச்சிகளை வழங்கும் அறிவிப்பாளரின் குரல்வளம் வானொலிக்கு இன்றியமையாததாகும். இனிமையாகவும், தெளிவாகவும், நாகரீகமாகவும், கண்ணியம் தொனிக்கும் வகையிலும் பேச வேண்டும். வழுவின்றி, செவ்வையாக உச்சரித்து, நிதானமாகப் பேசுவதைக் கேட்பது இன்று அருமையாகவே உள்ளது. வெவ் வேறு பிரதேசங்களையும் நாடுகளையும் சேர்ந்த மக்களை நேயர்களாகக் கொண்டிருக்குமிடத்து, அவர்கள் எல்லோராலும் பிரயத்தனமின்றி விளங்கிக் கொள்ளப்படக்கூடிய மொழிநடையைக் கையாளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அறிவிப்பாளன் தான் பேசும் விடயத்தைச் சரியாக விளங்கிக் கொண்டு, கேட்போருக்கு செவி வழி விளக்கம் பிறக்கும் வண்ணம் பேச வேண்டும். "தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவுதர மொழிந்திடுதல்" என்ற மகாகவி பாரதி கூற்றுக் கவனிக்கத்தக்கது. அந்தகரும், ஊமையரும் மட்டும் உள்ள கூட்டத்தில் உரையாடுவதைப் போன்றது வானொலிப் பேச்சு என்பர். அப்படியானவர்க்கும் கேட்ட ஒரே தடவையில் விளக்கம் பிறக்கவைப்பனவாக வானொலி நிகழ்ச்சிகள் அமைய வேண்டும்.

செய்திகளைப் பொறுத்தவரை, அவற்றை உடனுக்குடன் கால, இட எல்லைகளைத் தாண்டி வழங்கும் ஊடகம் மிகுந்த விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டுமென்பது சொல்லாமலே புரியும். ஒலிபரப்பப்படும் செய்திகளை தெரிந்தெடுப்பதில் பொறுப்புணர்வும், பொது அறிவும், உலகானுபவமும், நிதானமும் மிகுதியாக வேண்டப்படும். செய்திகளைத் தெரிந்தெடுத்து வெளியிடுவதையும் அவற்றுக்கு விளக்கம் அளிப்பதையும் பொறுத்தவரையில் ஊடக இலாபத்தை அன்றிப் பொது நன்மையைக் கருத்திற் கொள்ளல் பொறுப்புணர்வுடைய ஊடகங்களின் கடனாகும். கண்டவை கேட்டவை எல்லாம் , உண்மைகளை வெளியிடுகிறோம், என்று சொல்லிக் கொண்டு பரிமாறுவது விரும்பத் தக்கதன்று. உண்மை என்பது சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்யத்தக்கது, தீமை பயவாதது.பீதியையோ, வன்முறையையோ, குழப்பத்தையோ தூண்டிவிடக் கூடிய செய்திகளைத் தவிர்த்துப் பிரயோசனமானவற்றை வெளிப்படுத்துவது.

"கூட்டி மானிட ஜாதியை ஒன்றெனக் கொண்டு வையம் முழுதும் பயனுற" விழைவோரின் செயலாகும்.

சமூக பொருளாதார அபிவிருத்திக்கு முறையான தொடர்பாடல் இன்றியமையாதது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாகும். தொடர்பாடலின் பங்களிப்பு அபிவிருத்திக்கு உதவுவதோடு மட்டும் முடிந்துவிடுவதில்லை. நீதியும் மனிதாபிமானமும் பொருந்திய ஒரு சமூக ஒழுங்கினைக் கட்டியெழுப்பவும் அது பயன்பட வேண்டும். அத்தகைய ஆற்றல் அதற்கு இருப்பதனாலேயே தான், சிறந்ததொரு தொடர்பாடல் முறைமை அறிவிப்பதாக மட்டுமின்றி அறிவூட்டுவதாகவும் அமைதியான வாழ்வுக்கு வழிகாட்டுவதாகவும் அமையும் என்பர்.

நவீன ஜனநாயக சமூகத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய வாழ்வினை நிர்ணயிக்கும் சம்பவங்களிலும் நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ள விரும்புகின்றனர். அவ்வாறு பங்குபற்ற வேண்டுமென்ற அடக்கமுடியாத அவர்களுடைய வேட்கையானது பல வாய்ப்புகளைத் தோற்றிவிப்பதோடு மட்டுமன்றி பல சவால்களையும் எதிர்நோக்குவதாய் உள்ளது. அவ் வாய்ப்புக்களை எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பதையும், எதிர்படும் சவால்களை எவ்வாறு சமாளிக்கின்றோம் என்பதையும் பொறுத்ததாய் எமது எதிர்கால வாழ்வு அமையும். எனவே சமுதாய நடவடிக்கைகளில் மக்களைப் பங்குபற்ற வைக்கும் தொடர்பாடலானது மனித வாழ்வின் மேம்பாட்டுக்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

தெருக்களையும், புகைவண்டிப் பாதைகளையும், பாலங்களையும் அமைப்பதே தொடர்பாடலுக்கு வழிவகுக்கும் என்ற நிலை மாறிவருகிறது. இன்றைய ஜனநாயக சமூகத்தில் தொடர்பாடலானது நல்லெண்ணப் பாலங்களையும், புரிந்துணர்வுப் பாலங்களையும் உருவாக்குவதாக அமைய வேண்டும். பன்முகப்பட்ட மக்கட் சமுதாயத்தில் சகிப்புத்தன்மை அருகியும், அவநம்பிக்கைகளும் பகைமைகளும், மோதல்களும் ஒதுக்கல்களும் பெருகியும் காணப்படுவதற்கான அடிப்படைக் காரணம் போதிய புரிந்துணர்வும் விளக்கமும் இல்லாமையே ஆகும். எவ்வளவுதான் கற்றவர்களாயினும், உலகத்தோடு இணங்கி வாழ முடியாதவர்கள் அறிவில்லாதவர்களேயாவர் என்று திருவள்ளுவர் கூறியிருப்பதன் தாத்பரியம் இங்கு ஆழ்ந்து நோக்கத்தக்கது.

உலகத்தோடு இணங்கி வாழ்வதற்கு மிகவும் வேண்டப்பட்டும் விளக்கத்தையும் புரிந்துணர்வையும் மக்கள் மத்தியில் வளர்க்க வல்லனவான தொடர்பாடல் ஊடகங்களிற் பணியாற்று வோர் உற்சாகத்துடனும், பொறுப்புணர்வுடனும் அர்ப்பணச் சிந்தனையுடனும் மானுடப் பொதுநல வேட்கையுடனும் செயலாற்றுவார்களேயாயின், பல் வேறு இனங்களையும், மதங்களையும் பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் எல்லோரும் ஒன்றாய் இந்த மண்ணில் நல்லவண்ணம் வாழ, உதவலாம். வாழ்க வெரித்தாஸ்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் ஊடகங்கள்

கார்த்திகேசு சிவத்தம்பி
*தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்.*

வெ ரித்தாஸ் வானொலி வெள்ளிவிழா காணுகின்றவேளை "தமிழில் ஊடகங்கள்" குறித்த பின்புலத்தை ஆராய்வது பொருத்தமானதாகும்.

ஊடகம் என்பது *(medium/media )* வெகுசனத் தொடர்பாடலிற் பயன்படும் சாதனங்களுக்கான இன்றைய மொழிபெயர்ப்பாகும். சமகால உலகில் தொடர்பாடல் *(Communication)* நடைபெறும் முறைமை பற்றிய ஆய்வில் வெகுசனத் தொடர்புக்கு
*(Mass Communication )* முக்கிய இடமுண்டு. வெகுசனத் தொடர்பாடல் அதன் தன்மை (கேட்போர் "திரள" ஆக இருப்பதன்) காரணமாக, ஊடகம்; (Medium) வழியாகவே நடைபெறுகின்றது. இன்றைய நிலையில் இந்த ஊடகங்களை

1. அச்சு ஊடகங்கள் (Print Media)
2. மின்னியல் ஊடகங்கள் (Electronic Media)

என இரு பெரு நிலைப்பட வகுப்பர். ஒவ்வொரு வகைப்பாட்டுக்குள்ளும் பல்வேறு ஊடகங்கள் இடம்பெறும்
(அச்சு-புத்தகம்,சஞ்சிகை, புதினப்பத்திரிகை.)
(மின்னியல் -வானொலி, சினிமா, தொலைக்காட்சி )
இவை இல்லாது சமகால உலகில் அரசியல், சமூக, பொருளாதார நடவடிக்கைகள் எதுவும் இடம் பெறா. இவை ஒவ்வொன்றும் தத்தம் இயல்புக் கேற்ப தனித்தன்மைகள் கொண்டனவாகும்.
ஒவ்வொன்றும் தொடர்பாடலை ஒவ்வொரு "முறைவழி" யில் நடத்தும். இவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினுள் அல்லது சாகியத்தினுள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதனை அறிவதன் மூலம் அவை தொழிற்படும். சமூகம் *( Society)* சாகியம் (Community) பற்றி அறிந்து கொள்ளலாம் என்பதும் பொதுவான சமூகவியல் உண்மையாகும். ஊடக சமூகவியல் *(Media Sociology)* எனத் தனியே ஒரு துறையே உண்டு. அது இவ்விடயங்கள் பற்றி மிக நுண்ணியதாக ஆராயும்.

அத்தகையதொரு நோக்கு, தமிழ் சமூகம் பற்றியும் பல உண்மைகளை வெளிக் கொணரும்.
எனவே தமிழ்ச் சூழலில் ஊடகங்கள் எவ்வாறு தொழிற்படுகின்றன என நோக்குவது தமிழ்ச் சமூகத்தின் அசைவியக்கம், தொழிற்பாடு அமைந்த- அமையும் முறைமை பற்றி அறிவதற்கு பெரிதும் உதவும்.
அத்தகைய ஒரு ஊடக வரலாறு மூலம் நவீன தொழில் நுட்பங்கள் பயிலும் இக்காலத்தினை அறிந்து கொள்வதற்கு மாத்திரமல்லாது காலம், காலமாகத் தமிழ் நாட்டில் சமூகத் தொடர்பாடல் எவ்வாறு நிகழ்ந்து வந்துள்ளது என்பதனையும் அறிந்து கொள்வதற்கு உதவும்.

அத்தகையதொரு ஊடக வரலாறு நவீன காலத்திற்கு முற்பட்ட*(Pre-Modern)* தமிழ்ச்சமூகத்தில் "தொடர்பியல்" நிலைமைகள் எவ்வாறு இருந்தன் என்பதைத் தெளிவுபடுத்தும். ஏனெனில் எந்த ஒரு சமூகத்தின் அசைவியக்கத்திற்கும் சமூகத் தொடர்பாடல் அத்தியவசியமாகும். இது எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பது பற்றிய அறிவு அச் சமூகம் பற்றிய அறிகைக்கு முக்கியமான ஒன்றாகும்.

நாயக்க ஆட்சியும் அதன் அடிநிலைக் கூறான, பாளையக்காரர் ஆட்சியும் வருவதற்கு முன்னர் தமிழகத்தின் சமூகத் தொடர்பாடலின் திரள் நிலைப்பட்ட சனக் குழுமத் தொடர்பு முறைமை இருந்திருக்கக் கூடுமென எதிர் பார்த்தல் முடியாது. கி.பி 600-1300 காலப் பகுதியினை நோக்கும் பொழுதும், இக்காலப் பகுதிக்குரிய சமகாலச் சான்றுகளை நோக்கும் பொழுது, சமூக நிலைத் தொடர்பாடல் என்பது அரசவை, கோயில், உள்ளூராட்சி அலகுகள் என்ற மட்டத்திலேயே பெரும்பாலும் நிகழ்ந்திருத்தல் வேண்டுமென ஊகிக்கலாம். இவற்றை விட பௌத்த, சமணப் பள்ளிகளும், மடங்களும் முக்கிய மையங்களாக விளங்கின எனக் கொள்ளலாம்.
தொடர்பியல் நிலையினின்று கூறுவதானால் இவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கான தொடர்பாடல். *(point to point communication)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு நிலைப்பட்ட அறிவித்தல்கள் இவ்வாறு சென்றன எனக் கொள்ளலாம்.
இதற்குக் கடிதமுறைமை (ஓலை) தூதுவர், மூலமாகவும், புறாக்கள் மூலமாகவும் தொழிற்பட்டிருக்கலாம்.
கல்வெட்டுக்கல் என்பவை ஆணைகள் அறிவித்தல்களைத் தெரிவிக்க வேண்டிய இடத்தில் வைத்துத் தெரிவிப்பவனவாகவே அமைந்தன.

இந்த "இடத்துக்கிடம்" முறைமையினுள்ளும் தொடர்பு உண்மையில் (அ) நேர்முகமாகவும் *(Face to Face)*
(ஆ) ஆகக்கூடினால் ஒரு கணிசமான குழுவுக்கானவையாகவுமே *(Sizeable group)* இருந்திருத்தல் வேண்டும்.
கல்வியைப் பொறுத்தமட்டில் தான் கற்றலும் (கல்-வி) பிறர் வாயால் கேட்டலுமே (கேள்வி) முக்கியமாகின. "கல்வி" யில்(தான் கற்றலில்) ஓதுதலே முக்கியமாயிற்று.

தொடர்பியல் வளர்ச்சியில் வரும் முக்கிய கட்டமான "எழுத்து" *(writing)* வளர்ச்சி நிலை கண்டது. அந்த எழுத்துக்கான "ஊடகமாக" ஓலை (பனையோலை) அமைந்தது.
இதனால் எழுதப்பட்டனவற்றையும், எழுதி யனுப்பப்பட்டனவற்றையும் "ஓலை" எனும் ஆகுபெயர் வடிவம் சுட்டியது எனலாம்.
இந்த நிலை நன்கு நிறுவனமயப்படுத்தப்பட்ட மட்டங்களிலேயே காணப்பட்டது எனலாம்.
(அரசு, பள்ளி)
மற்றைய தொடர்பாடல்களின் மட்டத்தில்
2. "நேர்முகமானதான " *(Face to Face)* தொடர்பாடலே முக்கியப்பட்டது எனலாம்.
அயல், சமூகம் போன்ற குழுமத் தொடர்புகள் பெரும்பாலும் நேர்முகமானவையே.
சங்ககாலத்தின் (கி.மு 300-கி.பி 250 ) வன்மையான தொடர்பாடல் முறைமை இந்த நேர்முக முறைமையாகவே இருந்திருத்தல் வேண்டும். சங்கப்பாடல்கள் நேர்முகமாக, சிறு குழும நிலையில் தோன்றியனவாகவே உள்ளன. *(Face-to Face, small group )*

நாயக்கர் காலம் முதல், பிரித்தானிய ஆட்சியின் தொடக்க காலம் வரை தமிழ்நாட்டில் ஓர் அரசியல் பன்முகப்பாடும், குழுமநிலைத் தொழிற்பாடும் *(activisation of Community groups )* நிலவின என்று வரலாற்றாசிரியர் கூறுவர். இக்காலத்தில் அடிநிலைச் சமூகங்களின் செயற்பாட்டில் முன்னர் கேள்விப்பட்டதற்கு மேலான (கூடுதலான) ஒரு துடிதுடிப்பு இருந்தது எனத் தெரிய வருகின்றது. இது அம்மட்டத்து இலக்கியங்களின் பெருக்கத்திலும்
(உ-ம் கதைப்பாடல்கள்) அவற்றுள் சிலவற்றின் உயர்வாக்கத்திலும் (பள்ளு, குறவஞ்சி) இருந்தது எனத் தெரிய வருகின்றது.
நவீன காலத்துக்கு முந்திய காலத்துத் தமிழ் தொடர்பாடல் பற்றி முகவுரைப் பாங்காக இதுவரை கூறியனவற்றைக் கொண்டு, மேலே நவீன காலத்துத் தாழ்நிலைத் தொடர்பாடலுக்கு வருவோம்.

தமிழர் சமூக ஊடாட்டங்களில் முன்னர் காணப்படாத பெரும் மாற்றங்கள் ஏற்படுவது, மேனாட்டவரின் சமூக, அரசியல் உறவுத் தொடக்கத்துடனேயே. இது பற்றிய நீண்டதொரு வரலாற்றுக் குறிப்புக்குச் செல்லாது தொடர்பியல் நிலையில் இந்த "வருகை" ஏற்படுத்தும் மாற்றங்களை நோக்குவோம்.

மேனாட்டார் வருகையும், தொடர்புறவும் இரு நிலைகளில் வன்மையான செயற்பாடுகளுக்கு இடமளிக்கின்றது.
(1) மிசனரிமார்களின் கிறிஸ்தவ மதப்பரப்பல் தொழிற்பாடுகள்.
இது சம்பந்தமாக, றோமன் கத்தோலிக்கத் தாக்கத்திற்கும், புரட்டஸ்தாந்தத் தொழிற்பாடுக்கும் வேறுபாடு உண்டு. றோமன் கத்தோலிக்கத் தொடர்பு அச்சினை தமிழுக்கு அறிமுகப்படுத்துகின்றதெனினும் (1577) அச்சுச் சாதனத்தின் சமூக நிலைப்பட்ட பெரும் தாக்கம் புரட்டஸ்தாந்த மிசனரிகளின் வருகையுடனேயே தொடங்குகின்றன (ஏறத்தாழ 18ம் நூற்றாண்டின் முற்பகுதி)
இஸ்லாத்தின் வருகை தமிழில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது ஒரு சுவாரசியமான வினாவாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இஸ்லாம் வெகுசன மதமாற்றத்தைச் செய்யவில்லை. இவ்விடயத்திலே கிறிஸ்தவர்கள் தொழிற்பட்டது போன்று முஸ்லீம்கள் தொழிற்படவில்லை.அதே வேளையில் இஸ்லாமியர்களாக மாறியவர்களின் மதத் தனித்துவத்தைப் பேணுவதிலும், அவர்களை ஒரு சாதியமாக்கிக் *(Comnunity)* கொள்வதிலும் நிறைந்த அக்கறை காட்டினர். அவர்களின் மதநெறி அரபு மொழியை முதன்மைப்படுத்திற்று. மத விடயங்கள் பற்றிய தங்களிடையேயான உள்ளகக் குழுமத் தொடர்புக்கு *(intra-group Communication)* "அரபுத் தமிழ்" என்ற ஒரு மொழி இலக்கிய வழக்கை ஏற்படுத்திக் கொண்டது. இஸ்லாமிய மதப்பண்பாடு ஸ்த்திரப்பட்ட தன் பின்னரே அரபுத் தமிழ் பற்றிய அழுத்தம் குறைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அரசியல் அரச நிலைத் தொழிற்பாடுகள் பிரித்தானிய ஆட்சி ஏற்பட்டதன் பின்னர் ஏற்பட்ட ஆளும் முறைமை ( governance ) மாற்றங்கள்.

இந் நிலைப்பட்ட விளக்கங்கள் மிகுந்த நிதானத்துடன் செய்யப்படல் வேண்டும். வந்த ஆட்சி காலனித்துவ ஆட்சியெனினும், அதன் காரணமாக அது சுதேச பண்பாட்டையும் [illegible] நடைமுறைகளையும், அறிவுப்பேறுகளையும் [illegible] புறக்கணித்து ஒதுக்கியதெனினும், இந்திய சமூகத்தி[illegible] (தமிழ் சமூகத்தில்) முன்னர் நிலவாத , முன்ன[illegible] கருத்தில் கொள்ளப்படாத ஒரு முக்கியமான அர[illegible] எடுகோளை அடிப்படையாகக் கொண்டு தொழிற்ப[illegible]ந்த சமூக, அரசியல் எடுகோள் "சட்டத்தின்முன் [illegible] (ஆட்சிக்கு உட்பட்டவர்கள் யாவரும்) சமம்" [illegible]கும்.

சாதியமைப்பினை ஒரு முறைமையாக(as a system)) கொண்டிருந்த சமூகத்தில் இது புரட்சிகரமான மாற்றமாகும். இது தமது ஆட்சிக்குள் வந்த தமிழர்கள் எல்லோரையும் சாதி,மத பேதமின்றி ஒரு குழுமமாகக் கருதியது. அவ்வாறு கருதி தமது தொழிற்பாடுகளின் "பெறுநர் "கூட்டமாக இவர்களைக் கொண்டது. இதனால் தமிழர் என்ற மொழியடையாளத்திற்கு ஒரு வன்மையும், அழுத்தமும் ஏற்பட்டது. மொழி நிலையில் இது அம் மொழியைப் பேசுவோர், வாசிப்போரிடையே ஒரு "பொதுமையை" ஏற்படுத்திற்று. இது தமிழ் நாட்டில் முன்னர் நிலவாத, முன்னர் முனைப்புப்படுத்தப்படாத ஒரு செயற்பாடாகும்.

அதன் காரணமாக "தமிழர்" என்பது அம் மொழியைப் பேசும் மக்களிடையே நிலவிய உள்ளக வேறுபாடுகளைக் கடந்த ஒரு குழும அடையாளமாகிற்று. இது "தமிழன்" என்ற ஒட்டு மொத்த
அரசியல் அடையாளத்திற்கு இட்டுச்செல்லும் ஒன்றாக அமைந்தது எனலாம்.
கிறிஸ்தவக் கோட்பாட்டு நிலையில் சாதியமைப்பை ஏற்காதிருந்தமையால் (ஆனால் சமூகநிலையில் சாதியமைப்பை ஏற்றுக் கொண்டது) கிறிஸ்தவத்தின் தாக்கம் ஒரு புறமாகவும், ஆளுகை எடுகோள் மறுபுறமாகவும் முன்னர் நிலவாத சமூக சமத்துவத்துக்கு குறிப்பாக சமத்துவ உணர்வுக்கு இடமளித்தது.

இத்தகையதொரு பின்புலத்திலேதான் ஆங்கில ஆட்சி "எழுத்தறிவு" என்ற கொள் நெறியை *( principle)* முன்னெடுக்கின்றது.

"எழுத்தறிவு" என்னும் எண்ணக்கரு சகலருக்கும் எழுத்து, வாசிப்பு அறிவை அத்தியவசியமாக்குகிறது. உள்ளூர்ப்பண்பாடு, பொருளாதார நிலைமைகள் இதனை சரிவர நடைமுறைப்படுத்த இடமளிக்கவில்லை. இருப்பினும் இது ஆளுகையின்பொது எடுகோள் ஆனது. மிக முக்கியமாக இதனை இலக்காகக் கொண்ட ஒரு கல்வி முறைமை உருவாக்கப்பட்டது. இதற்கு முன்னர் இந்தியாவில் தமிழகத்தில் இவ்வாறு சகலருக்கும் பொதுவான சமத்துவமான ஒரு கற்பித்தல் முறைமை இருக்கவில்லை (இந்திய சமூக முறைமையில் சாதி வாழ்வை நிர்ணயிக்கவே, கல்வியும் அதற்குள் நின்றது. கற்கை என்பது பெரும்பாலும் சாதித் தொழிலைக் கற்பதையே குறித்தது. தொழில்நுட்ப சாதிக் குழுக்கள் தத்தம் தொழினுட்ப அறிவைச் சாதிக்குள் கையளித்து வந்தன.வைத்தியம் குடும்பத்தினுள் கையளிக்கப்பட்டது.)

இந்த பரந்த எழுத்தறிவு ஊடகங்களின் வருகையை தவிர்க்கப்படமுடியாத ஒன்றாயிற்று.
அந்த முறையில் தமிழரிடையே வந்த முதற் பெரும் ஊடகம் அச்சு ஊடகமாகும்.
1835 வரை அரச, திருச்சபைத் தனியுரிமையாக இருந்த அச்சு ஊடகம், 1835 ல் பொதுமைப்படுத்தப்படுகின்றது. இந்தக்காலம் முதல் தமிழில் அச்சு நிகழ்காலத்தை விளக்குவதற்கும் , இந்தக்காலப் பண்பாடு பேறுகளை குறிப்பாக இலக்கியத்தை மீட்டெடுப்பதற்கும், எதிர்காலத்துக்கான இலட்சியங்களுக்குப் , போராடுவதற்குமான ஒரு சாதனம் அல்லது கருவியாயிற்று.
அச்சுச்சாதனம் தமிழ் வாசகர்களை ஒரு மொழிக் குழுமமாய்ப் பார்க்கும் மரபை ஊர்ஜிதப்படுத்திற்று எனலாம்.
தமிழில் அச்சு சாதனத்தின் தாக்கம் பற்றிய எந்த ஒரு பார்வையும் இரு நிலைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

(1) தமிழ் சமூகத்தில் அது ஏற்படுத்திய மாற்றம்.
(2) தமிழ் மொழியில் அது ஏற்படுத்திய மாற்றம்.

இந்த இரண்டு நிலைகளும் ஒன்றுடன் மற்றது சம்பந்தப்பட்டதே. இவ் விடயம் பற்றிய விரிவான தரவு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் பல உள்ளன.
மிகச் சுருக்கமாகவும், பொதுப்படையாகவும் எடுத்துக் கூறுவதானால் தமிழில் ஊ டகத்தின் வளர்ச்சி என்பது இரு முக்கிய சமூக, அரசியல்,பொருளாதார அரசியல் நடைமுறை வழிகளுடன் தொடர்புற்று நிற்பதைக் காணலாம்.

(அ) நவீன மயப்பாடு
(ஆ) சனநாயகமயவாக்கம்

இந்த இரண்டினது தாக்கங்களையும், சமூகமாற்றங்களிலும்,மொழிமாற்றங்களிலும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இந்த இரு நடைமுறைகள் பற்றி நாம் பல்கலைகழக புகுமுக வகுப்புகளிலும், சில வேளைகளில் பல்கலைக்கழக வகுப்புகளிலும் கூட"மேனாட்டார் தமிழுக்காற்றிய தொண்டு" என்றும், "உரைநடையின் வளர்ச்சி" என்றும் பயிற்றி வந்துள்ளோம்.)

தமிழ் சமூகத்தினதும் தமிழ் மொழியினதும், சனநாயகமயப்பாடும், நவீனமயப்பாடும் தமிழன் சமூக வரலாற்றில் மிக முக்கியமானவையாகும். தமிழர், தமிழ்ப்பொதுமக்கள் (பாரதிகூறியது போன்று எல்லோருக்கும் விளங்குவதான எளிய பதம், எளிய நடை என்பனவும் அந்த எளிய மக்களின் வாழ்க்கையை இலக்கியப் பேசும் பொருளாகக் கொள்வதுவும் முக்கியமாகின்றன.

தமிழ் நாட்டின் சனநாயகமயப்பாடும், நவீனமயப்பாடும் நிகழ்காலத்திற்கு வேண்டிய பொதுமையையும், எளிமையையும் வற்புறுத்திய அதே வேளையில் "தமிழர்" பற்றிய மீள் கண்டுபிடிப்பும் நடைபெற்றது. இந்த மீள் கண்டுபிடிப்புத் தமிழ் இலக்கிய வளத்தையும், வரலாற்றுச் செழுமையையும் மக்கள் நிலைப்படுத்திற்று.

"தமிழ் உணர்வு" என்பது இவற்றின் பெறுபேறுதான்.

உண்மையில் தமிழில் சனநாயகமயப்பாடு எவ்வாறு வளர்ந்தது என்பதும், எவ்வாறு அந்த எண்ணக்கரு ஆழப்படுத்தப் பட்டது என்பதும் 18,19,20 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகத் துல்லியமாகத் தெரிகிறது. தமிழ் என்பதற்கு கிறிஸ்தவ மிசனரிமார் கொடுத்த விளக்கங்களும், அதற்கு ஆறுமுகநாவலர் கொடுத்த விளக்கமும், மறைமலை அடிகள் கொடுத்த விளக்கமும், பொரியார், அண்ணாத்துரை கொண்டிருந்த விளக்கமும் உண்மையில் இந்த வரலாற்றின் படிக்கற்களாக அமைவனவே.

இந்த கட்ட வேறுபாடுகளை தமிழ் எழுதப்பட்டநடுநிலை நின்று அறிந்து கொள்ளலாம்.

சீகன்பாகு- வீரமாமுனிவர்நடை
நாவலர் நடை
ராஜம் ஐயர் நடை-மாதவையர் நடை
மறைமலையடிகள் நடை
திரு. வி.க வின் நடை
கல்கியின் நடை
அண்ணாத்துரையின் நடை
தினத்தந்தி நடை

என்பன வெறுமனே இலக்கிய நிலைப்பட்டவையன்று. இவை தமிழின் சனநாயகமயப்பாட்டின் பல்வேறு பரிமாணங்களைக் காட்டுபவை.

அச்சு ஊடகங்கள் முதற் சின்னமாக அமையும். சமூகமாற்றங்கள் பின்புலத்திலே, மற்றையஊடகங்கள் பிரதானமாக- மின்னியல் ஊடகங்கள் வருகின்றன.

வானொலியின் வருகை மிக முக்கியமான ஒன்றாகும். இலங்கையில் தமிழ் ஒலிபரப்பு 1925 இல் ஆரம்பமாகிறது. இந்தியாவில் ஒழுங்கமைக்கப்பட்ட வானொலிச் சேவை 1927 முதல் வருகின்றது.(அதற்கு முன்னர் சில நேரங்களில் தனியார் ஒலிபரப்பு நிலவிற்று. சென்னைக்கு 1927 லேயே வருகின்றது.

வானெலியின் முக்கிய பெறுபேறுகளாகப் பின்வருவனவற்றைத் குறிப்பிடலாம்.

(1) வானொலி, அறிவை எழுத்தறிவு மட்டத்துக்கு அப்பாலும் கொண்டு செல்கிறது.

வானொலி கேட்பதற்கு வாசிப்புத்திறன் அவசியமில்லை. இப்பண்பு தமிழரின் எளிமைப்பாட்டுக்கு மேலும் உதவியது.

2.) வானொலி உண்மையான சமூக சமத்துவத்தை மேலும் வலுப்படுத்தியது.

குறிப்பாக 1950 முதல் இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பின் வருகையுடன் வானொலி என்பது தமிழ்ச் சமூகத்தின் அடிமுதல் முடிவரை முக்கிய சாதனமாயிற்று. ஏறத்தாள அக்காலத்தில் ஏற்பட்ட ரான்சிஸ்டர் மயப்படுத்துகை வானொலியைக் கொண்டு திரியக்கூடிய பொருளாக்கிற்று.

உண்மையில் தமிழில் சனரஞ்சகப் பண்பாடு ( Popular culture ) வளர்வதற்கு வானொலி குறிப்பாக வர்த்தக ஒலிபரப்பு முக்கிய சக்தியாகிற்று.

அகில இந்திய வானொலி குறிப்பாக, திருச்சி நிலையம் நடத்திய விவசாயிகளின் நிகழ்ச்சிகள் வானொலியைத் தமிழ் விவசாயிகளுக்கான அத்தியாவசியமான தரவுச் சாதனமாகிற்று.

பண்பாட்டுப் பேணுகைகளில் தமிழ் வானொலிகளுக்கு முக்கிய இடம் உண்டு.

கர்நாடக இசைப் பாம்பரியத்தை பொதுச் சொத்தாக்கியதில் வானொலிக்கு முக்கியமான இடம் உண்டு. மேலும் நாடகத்துறை வளர்ச்சியில் வானொலி நாடகம் ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்திற்று. உலகின் பொதுவான இவ் விஸ்த்தரிப்புத் தமிழ் நாடகத்தையும் செழுமையாக்கியது.

தமிழ்ப் பண்பாட்டில் மிக முக்கியமானது, முன்னர் காணப்படாததுமாகிய மாற்றத்தை ஏற்படுத்தியது சினிமாவே. (திரைப்படம் என்ற பதத்தின் பின்னுள்ள புலப்பதிவை *(Preception)* நோக்குக.

தமிழ் மொழிக்குச் சினிமா வந்தது 1921 .ல் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பேசத் தொடங்கியது 1931 இல் ஆகும். (கீசக வதம்).

தமிழர் சமூக வரலாற்றில் சினிமாவுக்கு மிக முக்கிய இடமுண்டு.அதாவது சகல தமிழ் மக்களும் ஒரு கூரையின் கீழ் இருந்து தங்கள் கொள்வனவு சக்திக் கேற்ப உட்காந்து ஒரு மகிழ்வளிப்பை *(entertainment.)* பார்ப்பது என்பது ்னிமாக் கொட்டகையிலேயே நடந் தேறியது. இது மிகப் பெரியதொரு புரட்சியாகும். முற்றிலும் சந்தைத் ாரிப்பில் ஈடுபட்ட இக் கைத்தொழில் தமிழ் மரபின் "வீர ற்றிய புலப்பதிவுகளை மாற்றிற்று. தாழ் நிலையில் இருந்தவனின் உயர்ச்சியும், உயர்நிலையில் வனின் அனுதாப அகற்சியும் சினிமாவுக்கு மு ின. தமிழ்நாட்டில் மக்கள் நிலைத் தொல ன் நவீன வடிவங்களாக கதாநாயகர்கள் ாவின் சனரஞ்சகத்தன்மைக்கு அச்சாணித் தேவையாகினர். அந்த தொன்மக்களை மாத்திரமல்லாமல் (மதுரை வீரன், காத்தவராயன், ரிஸ்ய சிருங்கர், ஜகதஸ்பிரதாபன் போன்றோர்) அந்தத் தொன்மை வடிவங்களில் அமைந்த கதாபாத்திரங்களை (மீனவன், ரிக்சாக்காரன், மாட்டுக்கார வேலன் ) தமிழ்ச் சினிமா சித்தரித்தது.

அப் பாத்திரங்களைச் சித்தரித்தவரே அப்பாத்திரமாகக் கொள்ளப்பட்டு, அரசியல் முக்கியத்துவமுடையவர் ஆனார். (எம். ஜி. ஆர்.)

அவர் வருகைக்கு சற்று முன்னர் அண்ணாத்துரையும், கருணாநிதியும் தமிழ் சினிமாவின் மொழியை மாற்றியமைத்தனர். அந்த மொழிநடை அரசியலையும் பாதித்தது, சினிமாவையும் மாற்றியது. தமிழ்சினிமா தமிழ்ச் சமூகத்தை தன் மாற்றத்துக்கு உற்படுத்தியது. அந்த மழையின் தூவானம் தமிழக அரசியலில் 1967 முதல் இன்று வரை விடாமல் உள்ளது.

தமிழ்ச் சினிமா மற்றைய ஊடகங்களைப் பெரிதும் பாதித்துள்ளது. அச்சுச் சாதனங்களும் வானொலியும் பெருமளவிற்குச் சினிமா மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது மறுக்க முடியா உண்மையாகும்.

தமிழ் சினிமாவினது தாக்க வீச்சின் பின்புலத்திலேயே தொலைக்காட்சியும் பார்க்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது. தொலைக்காட்சி தமிழ்நாட்டுக்கு 1975 லும் இலங்கைக்கு 1979 / 1982 லும் வந்து சேர்ந்தது.

தொலைக்காட்சி அதன் ஊடகத் தன்மை காரணமாக (அதற்கான காட்சிப் பொட்டி அவசியம்)

தமிழ் நாட்டில் இன்னும் கிராமப்புறங்களுக்கு முற்று முழுதாகச் செல்லவில்லை. இலங்கையில் தமிழ் பிரதேசங்களில் தொலைக்காட்சி போர் காரணமாக பரவலாகச் செல்லவில்லை.

தொலைக்காட்சியைதக் "சின்னத்திரை" என அழைப்பதிலேயே தமிழ் சினிமாவின் தாக்கம் நன்கு தெரிகிறது. தமிழகத்துத் தொலைக்காட்சி நிலையங்கள் தம்மைப் பிரபலப்படுத்தி கொள்வதற்கு முதலில் சினிமாப் படங்களையே பயன்படுத்தினர். இப்போது தொலைக்காட்சி பல வழிகளில் தமிழ் சினிமாவையே நம்பியுள்ளது. பாடல்கள் திரைப்படங்களில் வருவனவே. ஒவ்வொரு நிலையமும் ஒரு நாளைக்கு இரண்டு திரைப்படங்களைக் காட்டுகின்றன.

ஆனால், இப்பொழுது படிப்படியாக தொடர் நாடகங்கள் முக்கியமாகின்றன.

இன்றைய நிலையில் தமிழில் சனரஞ்சகப்பண்பாடு வளர்வதற்கு வானொலியும், தொலைக்காட்சியும் முக்கிய சாதனங்களாகின்றன.


தமிழ் ஊடகங்கள் தமிழை மிகப் பெரிய முறையில் மாற்றியுள்ளன என்று சொல்வதிலும் பார்க்க மிகப் பெரிய மாற்றங்களுக்குள்ளாகி வரும் தமிழகத்தை இந்த ஊடகங்கள் எடுத்துக்காட்டுகின்றன எனலாம்.

தமிழின் இருபதாம் நூற்றாண்டு வரலாற்றில் ஊடகங்களுக்கு மிக முக்கியமான இடம் உண்டு.

●

**கார்த்திகேசு சிவத்தம்பி**

தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு Eelamurasu Journal Tamoul Hebdomadaire

பாரிஸ்
18. 06. 2001

வெள்ளிவிழாக்காணும் வெரித்தாஸ் வானொலியின் சிறப்பு நிகழ்ச்சிகள் தரணியெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில், அப்பெருவிழா நிகழ்ச்சிகள் சிறப்புறவும், வானொலியின் பணி மென்மேலும் வளப்புறவும் வாழ்த்தி மகிழ்வுறுகிறோம்.

பன்நெடுங்காலமாக வேரித்தாஸ் வானொலி ஈழத்தமிழ் மக்களுக்காக ஆற்றுகின்ற பணி அளப்பரியது. தனது சர்வதேச வானலையினூடாக ஈழத்தமிழர்களின் கண்ணீரைத் துடைத்துவிட்டும், செந்நீரின் துயரத்தை பகிர்ந்துகொண்டும், எதிரியின் கொடுரங்களை அம்பலப்படுத்தியும், வீரம்செறிந்த போரின் உயிர்ப்பையும் நியாயத்தையும் தலைநிமிர்த்தி வெளிப்படுத்தியும் வெரித்தாஸ் ஆற்றிவரும் பணியை ஒவ்வொரு ஈழத்தமிழரும் என்றென்றும் நெஞ்சில் நிறுத்துவர்.

வேரித்தாஸ் வானொலியின் இயக்குனர் கஸ்பர்அடிகளையும், அவருடன் பணியாற்றுபவர்களையும் நன்றியுணர்வோடு நினைவேந்துவதுடன், ஜேர்மனியில் நடைபெறும் வேரித்தாஸ் வானொலியின் வெள்ளி விழாவுக்கு ஈழமுரசு இதழும் தனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறது.

**ஈழமுரசு குடும்பத்தினர்**

*EELAMURASU, 22, Rue Perdonnet, 75010 Paris, France.*
*Tél.: 01 40 37 63 63* - E.Mail : eelamurasu@noos.fr - Web side : www.eelamurasu.com - *Fax : 01 40 37 64 64*
*Rcs Paris B 399673110*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெரித்தாஸ் வானொலியின்

# தமிழ்ச் சேவை

வெள்ளிவிழாக்காணும்
வெரித்தாஸ் வானொலியே
அள்ளி வழங்க வந்தாய்
அருளின்பத் தமிழமுதம்

உண்மைதனை உரைக்கின்றாய்
உள்ளங்கள் உயர்ச்சி பெற
உருவங்கள் பலதந்தாய்
துயருற்றவர்களை உன்
குரல் மூலம் அரவணைத்தாய்
பயமின்றி அறத்தினை
பாரெங்கும் பரப்புகின்றாய்
சாதி மத பேதம் விட்டு
நீதியை நீ எடுத்துரைத்தாய்
நாதியற்றவர்க்கு
நலந்தரவும் நீ துணிந்தாய்
தமிழன் என்ற உயர்வு தாழ்வு
அனைத்தையுமே நீ உணர்ந்திட்டாய்
தமிழீழ மக்களுக்காய்
தரணியெங்கும் வியாபித்தாய்
தமிழீழ சந்ததியின்
பசிபோக்கி நின்றாய்
தமிழ் மக்கள் மனதினிலே
அழியாத் தடம் பதித்தாய்
மனிதத்தை உணர்த்துகின்றாய்
மாண்புடனே வாழியவே
புனிதமாய் பணியெல்லாம்
புகழ் ஓங்க வாழியவே
தணியாத் தமிழ்த்தாகம்
கொண்டு உயர்ந்தாய் வாழியவே
பணியாது உண்மைக்காய்
பலகாலம் வாழியவே.



வைத்திய கலாநிதி
**க. சிவபாலன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவுகள்

**கால்நூற்றாண்டு காலமென்ன?**
**பல்லாண்டு காலங்கள் பாரினிலே வாழ்ந்திடுவாய்**

(ஜேர்மனி கனோவரில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் நாதத்தில் திருமதி இராஜேஸ்வரி லோகநாதன்.)

**நல்ல தீர்வை விட பழக்கப்பட்ட சுமைகள் சிலருக்கு சுகமாகத் தெரியலாம்.**
**அது புத்திசாலித்தனமானதல்ல.**

(ஜெகத் கஸ்பார் அடிகளார் )

**யாழ்குடா நாட்டை சிறிலங்கா இராணுவம் கைப்பற்றியதும் பொதுமக்கள் மட்டுமல்ல எமது சில போராளிகளும் நம்பிக்கை இழந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் எமது மக்களினதும் போராளிகளினதும் நம்பிக்கையைத் தாங்கி நின்ற ஒரே ஊடகம் வேரித்தாஸ் வானொலிதான்.**

(திரு. சுப.தமிழ்ச்செல்வன்.
தமிழீழ அரசியற் பிரிவுப் பொறுப்பாளர்)



***....கொஞ்ச இழப்புகளையா நாம் சந்தித்தோம்? தந்தை வீரமரணமடைய மகனை களத்திற்கு அனுப்பிய ஒரு தாய் பற்றி வாசித்திருக்கின்றேன். ஆனால் களத்தில் வீரமரணடைந்த தன் மகனுக்கு போராளித் தந்தை மண்போட்டதை நான் கண்டிருக்கின்றேன். மண நாள் நிச்சயக்கப்பட்ட தன் போராளித் துணைவியின் உடல் களத்தில் சிதறிவிட அவளுக்காக நினைவுக்கல் நாட்டிய போராளிக் காதலனை நான் பார்த்திருக்கின்றேன்.***

***பிறந்து 45 நாட்கள் மட்டுமேயான தன் பெண் குழந்தையைப் பின்னால் ஒரு போராளி சுமந்துவர் முன்னே தனது போராளிக் கணவனின் வித்துடலைச் தோளில் சுமந்து நடந்து சென்று விதைகுழியில் போட்டு மண் போட்ட போராளி மனவியின் அருகே நான் நின்றிருக்கின்றேன். தன் மகனை இராணுவ வல்லாதிக்க சதியால் பன்னிருவரில் ஒருவனாய் இழந்த அந்த அம்மா அவன் பாதையில் போன தன் கடைக்குட்டி மகள் வீரச்சாவடைந்து உடலமாக வீட்டுக்கு வர உனக்குப் பின்னால் போராட அனுப்ப எனக்கு இன்னொரு பிள்ளை இல்லையே எனக் கதறி அழுததை நான் கேட்டிருக்கின்றேன். ஒருவருக்கு மற்றவர் சொல்லாமல் சண்டைக் களத்திற்குப் போய் நின்று தொலைத் தொடர்புக் கருவியில் குரல் கேட்ட பின்பு துணையும் களத்தில் நிற்பதை அறிந்து கொண்ட போராளித் தம்பதிகளை நான் அறிந்திருக்கின்றேன். அடுத்த நேரம் சமைக்க வேறு அரிசி இல்லையேயெனத் தெரிந்து களைத்துப் போய் தன் வீட்டுத் திண்ணையில் சாய்ந்திருக்கின்ற புலிப்பிள்ளைகளுக்கு உணவு சமைக்கின்ற ஏழைத் தாய்மார்களையும் நான் கண்டிருக்கின்றேன்....***

(வேரித்தாஸ் வானொலிக்கு மலைமகள் என்ற பெண் போராளி எழு திய கடிதம் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகசபாபதி சரவணபவன்

போர்த்துக்கீசர் இலங்கைத் தீவில் கரை ஒதுங்கியது தற்செயலான செயல் என்றாலும், அவர்களை நிலைகொள்ளச் செய்தது இலங்கையில் காணப்பட்ட வாசனைத் திரவியங்கள் தான் என திரு கொல்வின் ஆர். டி சில்வா கூறியிருந்தது பலருக்கு நினைவிருக்கலாம். ஆனால் இந்தியாவின் தென்கோடியில் தரையிறங்கிய ஜேர்மனியர்களுக்கு இந்திய உப கண்டத்தையே வியப்புடன் பார்க்கத் தூண்டியது தமிழகத்தில் கிடைத்த நம் முன்னோர் விட்டுச்சென்ற ஓலைச் சுவடிகளே.
1963 இல் ஜேர்மன் அரசு வெரித்தாஸ் வானொலிக்கு நிதி உதவியளித்து ஆரம்பித்து வைத்தது என்ற செய்தியை அறியும்போது, நாம் மறந்துபோன ஜேர்மன் அறிஞர்களை நினைவுபடுத்த வேண்டிய தேவையும் நினைவுக்கு வந்துவிடுகின்றது.

வரலாற்று முக்கியத்துவமாக கருதப்படும் போர்த்துக்கீசக் கடலோடி வாஸ்கொட காமாவின் *(Vasco da Gama)* காலடித் தடம் 1498இல் கேரளக் கடற் கரையோரமாக பதிவதற்கு முன்பாகவே 1487இல் போர்த்துக்கீச மாலுமியான பெட்ரோ டி கோவில்காம் *( Pedro De Covilham )* என்பவர் கேரளாவில் தரையிறங்கியிருந்தார். 1604 இல் தமிழ்நாடு செங்கல்பட்டு மாவட்டத்தில் டச்சு அட்மிரல் *Heemskirt* தரையிறங்கியதில் இருந்தே ஐரோப்பியர்களுக்கான இந்தியக் கதவு அகலத் திறந்து கொண்டது. இதுவே ஜேர்மனிய மதப் பரப்புரைக் குழுவின் இந்திய வருகைக்கும் வழிகோலியது. ஜேர்மனியர்களது இந்திய வருகை வணிக நோக்குடன் இல்லாமல் கிறித்தவ நற்செய்திகளை பரப்பும் நோக்கில் இருந்தது. 1602 இல் டச்சு கிழக்கு இந்தியக் கம்பனியும் 1612 இல் டென்மார்க் கிழக்கு இந்தியக் கம்பனியும் வணிகத்தை விரிவாக்கம் செய்து கொண்டிருந்த காலம் அது. மலபார் மக்கள் காட்டுமிராண்டிகள் என்ற கருத்து இந்த ஐரோப்பிய வணிகக் கம்பனிகள் வழியாக ஐரோப்பிய மக்களிடம் மிக ஆழமாகப் பரவியிருந்தது.
டென்மார்க் கிழக்கு இந்தியக் கம்பனி தஞ்சாவூர் ஆட்சியாளர் ரகுநாத நாயக்கரிடம் இருந்து நிலத்தைக் குத்தகையாகப் பெற்று வணிகத்தை பெருக்கிக் கொண்டிருந்த காரணத்தால் டென்மார்க் மன்னர் நான்காவது பிரெட்றிக்கின் *(Frederick IV 1699 - 1730 )* கவனம் தமிழகத்தின் மீது திரும்பியது ஒன்றும் வியப்பில்லை.
அவர் கிறித்தவ நற்செய்திகளைப் பரப்பும் நோக்குடன் டென்மார்க் மத குருமார்களை தமிழ் நாட்டிற்கு அனுப்ப எடுத்த முயற்சி தோல்வியைத் தழுவவே ஜேர்மன் மத குருமார்கள் தமிழ்நாடு செல்ல முன் வந்தார்கள். பேராசிரியர் பிராங்கே ( Francke ) அவர்கள் Halle என்னும் நகரில் இருந்து ஜேர்மன் இளம் மத குருமார்கள் குழுவொன்றை டென்மார்க்கிற்கு அனுப்பி வைத்தார். ஜேர்மன் மத குருமார்கள் அங்கிருந்தே தமிழ்நாடு சென்றார்கள். 1652ல் ஜேர்மன் மத குரு கென்றிச் றோத் தஞ்சவூர் வந்த போதும் 1706 இல் மத குரு சீகன்பால்க் ( Ziegenbalg ) என்பவரின் வருகையே ஜேர்மன் தமிழியியலில் சிறப்புப் பெறுகின்றது. இதுவரை ஐரோப்பிய நாடுகளில் பரவியிருந்த மலபார் மக்கள் காட்மிராண்டிகள் என்ற கருத்தும் சீகன் பால்க்கின் வருகையாலேயே மறைந்தது.

ஜேர்மன் மதப் பரப்புரைக் குழுவினர் தமிழ் மொழி கற்க வீரும்பியதோடு, தமிழ் மக்களின் பண்பாட்டு பின் புலத்தையும் நன்கு தெரிந்து கொண்டனர். சீகன் பால்க் தமிழிலும் தமிழ் இலக்கணத்திலும் கொண்டிருந்த ஆழமான புலமை காரணமாக பல தமிழ் ஏடுகள் ஜேர்மன் மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டதோடு நீதி வெண்பா திருமந்திரம் உள்ளிட்ட பல செல் அரித்த ஏடுகளைச் சரி செய்ததோடு சிதைந்த எழுத்துக்களையும் திருத்தினார். 1708 இல் கொன்றை வேந்தன், நீதி வெண்பா, உலக நீதீ போன்றனவற்றையும் மொழி பெயர்ப்புச் செய்தார். இவருடன் கிறிஸ்தோப்பர் தீயோடியஸ் வோல்ட்டர் *( Christoph Theodosius Walther 1699 - 1741 )* என்ற ஜேர்மன் தமிழ் அறிஞரும் பங்கேற்றுக் கொண்டார். சீகன்பால்க்கின் சிபார்சின்பேரில் 1711இல் இருந்து ஜேர்மனியில் லுதர்ன் பல்கலைக்கழகத்தில் தமிழ் போதிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் இருந்து ஜேர்மனி திரும்பிய கென்றிச் பிட்சாவ் முதல் தமிழ் விரிவுரையாளராகப் பதவியேற்றார்.
தமிழ்மொழிக்கான அடிப்படைக் கட்டுமானத்தை சுமந்து நிற்கும் தொல்காப்பிய ஏடுகளை நன்கு கற்றறிந்ததோடு அதற்கான விளக்க உரைகளையும் தொகுத்தார். சீகன்பால்க்கின் அகராதிப் பணியானது ஜேர்மன் தமிழியலில் பெரும் பாராட்டிற்குரியது. இவரே முதன் முதலில் ஜேர்மன் தமிழ் அகராதியையும் தொகுத்தார். ஆரம்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20000 ஜேர்மன் சொற்களுக்கு தமிழ் கருத்துக்களைத் தொகுத்த சீகன் பால்க் 1712 இல் 47000 ஜேர்மன் சொற்களுக்கு தமிழ் கருத்துக்களைத் தொகுத்தார். இவரது அகாரதிப் பணியானது சூடாமணி நிகண்டு ஆகியனவற்றின் அடிப்படையிலேயே தொகுக்கப்பட்டது.

சீகன்பால்க் வரிசையில் அடுத்து பெரும் மதிப்பெண்களைப் பெறும் அறிஞர் சாட்சாத் பிரட்றிச் றுக்கேயட் *(Friedrich Rueckert)* என்பவர் தான். தமிழ் மொழியில் மாத்திரமல்ல, இலக்கணம் இலக்கியம் என்பனவற்றிலும் அவருக்கு இருந்த அறிவுக்கு சான்றிதழ் வழங்குவது அவருடைய திருக்குறள் ஜேர்மன் மொழிபெயர்ப்பு. இரு வரிகளினால் அறம் வழிப் பொருளீட்டி காதலில் கலக்கின்ற தமிழனின் வாழ்க்கை வித்தைகள் 1847 இல் ஜேர்மனியைச் சென்றடைந்துவிட்டது. தொல்காப்பியம், நிகண்டு போன்ற முதுபெரும் தமிழ் இலக்கண ஏடுகளை எல்லாம் புரட்டி கரைகண்டவர் கார்ல் குரவல் *( Karl Graul )* என்ற ஜேர்மன் தமிழ் அறிஞர். தமிழ் இலக்கணம் பற்றி இவர் எழுதிய விளக்கங்கள் பல்கலைக்கழகத்தில் தனியாகப் போதிக்கப் போதுமானது.
இந்து மதத் திருமணச் சடங்குகள், புரோகிதர்கள் கூறும் மந்திரங்கள் போன்றனவற்றிற்கான விளக்கம் இவருக்கு தண்ணீர் பட்ட பாடம். தாலியில் மாத்திரம் 100 வகை உள்ளது என்ற செய்தியைக்கூட இவர் கூறித்தான் நம்மில் பலர் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

கில்கோ வைர்டோ சுமெரஸ் *(Hilko Wiardo Schomerus )* கொஞ்சம் உச்சரிக்கச் சிரமமான பெயர்தான். ஆனாலும் இவரது பணிதான் இந்துமதத் தத்துவங்களை ஜேர்மன் மக்களுக்கு அறிமுகம் செய்தது. சைவ சித்தாந்த நூல்கள் பலவற்றில் ஆழ நுழைந்து மொழிபெயர்த்தவர். திருமந்திரத்தை நன்கு கற்றுக்கொண்ட இவர், ஏடுகளில் செல்லரித்த இடங்களில் எல்லாம் பொருத்தமான எழுத்துக்களைச் சேர்த்து நாம் படிக்க வழி செய்திருக்கின்றார். ஆயுள்வேத மருத்துவ ஏடுகளில் மனதைப் பறிகொடுத்த ஐரோப்பியர்களின் பெயர்ப்பட்டியலோ மிக மிக நீளமானது. அதில் அதிக கவனத்தை ஈர்ப்பவர் ஜெ. இ. குறுண்ட்லர் *(J.E. Gruendler)* என்பவர். இவர்தான் இந்திய மருத்துவ அறிவை மேற்குலகு உள்வாங்கத் தூண்டியவர். 18ம் நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டில் பலர் ஜேர்மன் மொழியைக் கற்றுக்கொண்டார்கள். டென்மார்க் மன்னன் நான்காவது பிரெட்றிக்கின் அழைப்பை ஏற்று தஞ்சாவூரைச் சேர்ந்த திரு பழனியப்பன் டென்மார்க் சென்றதோடு, 26.10 1714இல் மன்னர் பிரெட்றிக்கின் முன்னிலையில் ஜேர்மன் மொழியில் தமிழ் வளம் குறித்து நீண்ட தொடர் விரிவுரையை நிகழ்த்தினார்.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்று வந்தோம், கடை விரித்தோம், ஆட்சியைப் பிடித்தோம் என்றில்லாமல் சலனமின்றிச் செயலில் கவனம் செலுத்தியவர்கள் ஜேர்மனியர்கள்.
"மாக்ஸ் முல்லர் பவன்" *Max Müller Bhavan* . சென்னையில் இருந்தவர்களில் பத்துக்கு ஐந்து பேருக்காவது இந்தப் பெயர் நினைவுக்கு வரலாம். மாக்ஸ் முல்லர் (1823 - 1900) பல வட மொழிஆக்கங்களை ஜேர்மன் மொழி பெயர்ப்புச் செய்தவர். இருந்தாலும் இவருக்கு தமிழ் மொழி மீது ஆர்வமேஅன்றி மதிப்போ இல்லாமல் போனதுதான் பெரிய ஆச்சரியம். வடமொழி ஆக்கங்களை ஜேர்மன் மொழிபெயர்ப்புச் செய்த ஒரே காரணத்தால் அவரை நினைவுகூரும் தமிழகம் தமிழ் மொழிமீது ஆர்வம் காட்டி பல ஆக்கங்களைச் செய்த சீகன் பால்க், குரவல் போற்றவர்களை கண்டுகொள்ள மறந்தேவிட்டது வேதனைக்குரியது. இருந்தாலும், சென்னைப் பல்கலைக்கழ வரலாற்றுத்துறை மூத்த விரிவுரையாளர் Dr C.S. மோகனவேலு அவர்களின் முனைவர் பட்டத்திற்கான German - Tamilology என்ற ஆய்வு நூல் ஜேர்மனிய அறிஞர்களின் இந்த உண்மைகளை எல்லாம் வெளி உலகிற்கு கொண்டுவர உதவியுள்ளது. இது ஒரு ஆறுதல் தரும் செய்தி.

அது சரி, ஜேர்மனியர்களின் உள்ளங்களை கொள்ளை கொண்ட நம் முன்னோர் விட்டுச் சென்ற இந்த ஏடுகள் எங்கே என்று யாருக்காவது கேட்கத் தோன்றினால், நீங்கள் செல்ல வேண்டிய இடம் தமிழ் நாடு அல்ல. ஜேர்மனியில் கல ( Halle ) என அழைக்கப்படும் நகரத்திற்கே என்பதுதான் சற்று நெஞ்சை நெருட வைக்கும் செய்தி. சுமார் இரண்டு இலட்சம் ஏடுகள் இங்கே குவிந்துள்ளது என நம்மை வியக்க வைக்கின்றார் டாக்டர் C. S மோகனவேலு. "ஜேர்மனியில் கிடைத்த தமிழ் புதையல்" என்ற அற்புதமான நீண்ட கட்டுரையை ஆனந்த விகடனில் பல வாரங்களாக எழுதியவர். " சென்றி டுவீரெட்டுத் திக்கும் - கலைச் செல்வங்கள் யாவுங் கொணர் திங்கு சேர்ப்பீர்" என்ற பாரதியின் கட்டளையை இன்னும் நாம் காலம் கடத்தலாமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamilen Seelsorgeamt

**தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்- யேர்மனி**

J. X. Bernard Regno, Pfarrer, Schützenstr. 87, D- 49084 Osnabrück
Tel. (0541) 7 94 09, Fax: (0541) 9 77 49 08

## "தகுதியுடையவர்"

உண்மை ஓங்குக என்ற தாரக மந்திரத்தை கொண்டு செயற்படுகின்ற வானொலி வெரித்தாஸ் தன் 25 வது ஆண்டை நிறைவு செய்வதையிட்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வுறுகின்றேன்.

உலகில் ஒடுக்கப்படுகின்ற இனங்களுக்காக முக்கியமாக தமிழ் இனத்துக்காக குரல் கொடுத்ததை எந்த ஒரு தமிழனும் மறக்கமாட்டான்.

பணி ஜெகத் கஸ்பார் பணியாற்றிய காலங்களில் தமிழர் துன்பங்களை உலகமெங்கும் வெளிக்கொணர்ந்தது அதிகம் எனலாம்.

பணி ஜெகத் கஸ்பாரும் வெரித்தாஸ் வானொலியும் ஒவ்வொரு தமிழனின் வாழ்த்துக்களுக்கும் நன்றிகளுக்கும் *தகுதியடையவர்*

தொடர்ந்தும் உண்மை ஓங்கி ஒலிக்கட்டும்.

**ஜெர்மன் ஆன்மீகப் பணி இயக்குநர்**

**அருட்திரு பேர்ணாட் றெக்னோ அடிகளார்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை என்னும் ஊடகம்

செருங்கலைப் புலவன்

**அ.குமரன்** B.A

ஒலிக்கின்ற ஓசைகளாகவும் அசைகின்ற சைகைகளாகவும் ஆதிமனிதனில் தொடங்கிய கருத்துப் பரிமாற்றம் இன்று இருந்த இடத்திலிருந்தே விசைப்பலகையில் (Keyboard)விரல்களை அழுத்துவதன் மூலம் அடுத்தகண்டத்திலிருக்கும் யாரையோ (யாரையோ என்பது) தான் முக்கியம் முகம் தெரியாத முன்பின் அறிமுகமில்லாத தனது முதல் மொழியல்லாத பொதுமொழி ஒன்றை மட்டுமே புரிகின்ற யாரையோ) தொடர்பு கொள்ள உரையாட கருத்துப்பரிமாற கருத்திசைவுகளால் தோள் கொடுக்கும் தோழராக தோழியராக ஒன்றுபடுத்த முடிகின்ற அளவு வளர்ந்துவிட்டது. தனிமனித பரிவர்த்தனையிலேயே இத்தனை சாத்தியம் ஏற்பட்டுவிட்டதென்றால் சமூகப் பிராணியான மனிதனின் ஒட்டு மொத்த சமூகம் சார்ந்த தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி எந்தளவென்று சொல்லத் தேவையில்லை. இந்தப் பின்னணியில் தான் தனது தமிழ்ச்சேவைப் பிரிவின் வெள்ளி விழாவைக் கொண்டாடும் வெரித்தாஸ் வானொலி பற்றி சற்று நோக்கமுயல்கின்றேன். ஈழத்தமிழ் சமூகத்தின் அன்றாட வாழ்வில் பிரிக்கப்படமுடியாத அங்கமாக இன்று வெரித்தாஸ் ஆகிவிட்டது. ஒருவானொலி ஒரு சமூகத்தின் அன்றாட வாழ்வில் ஒரு அங்கமாக ஆகிப்போதல் என்பது ஒரு சாதாரண விடயமல்ல. போக்குவதற்குப் பொழுதில்லாமல் இயந்திரமயமாகி ஓடிக்கொண்டிருக்கும் புலம் பெயர் வாழ்வானாலும் அவலங்களே அன்றாட வாழ்வாகி அல்லலுற்று ஆற்றாது அழுத கண்ணீர் நிறைந்த ஈழத்து வாழ்வானாலும் வெரித்தாஸ் என்ற பெயர் நிலைத்து நிற்கும் ஒரு தேவையாகிப் போயிருக்கிறதென்றால் அதன் வரலாறு கவனிக்கப்படவேண்டியதே.

உண்மை உண்மையைச் சொல்லுதல் என்று அர்த்தப்படும் வெரித்தாஸ் என்ற லத்தீன் சொல்லை பெயராகக் கொண்டியங்கும் இந்த வானொலி ஒரு கத்தோலிக்க மதவானொலியாகும். தென்கிழக்காசிய நாடுகளின் கர்தினால்கள் அனைவருக்குமான ஒரு மையம் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் ஸ்தாபிக்கப்பட்டு அந்த மையத்தினூடாக வெரித்தாஸ் வானலைகளில் பவனி வரத் தொடங்கியது. வெரித்தாசின் இந்தத் ஸ்தாபிதத்தை இங்கு நான் இனங்காட்டுவது கூட அந்த வானொலியின் சேவையை தெளிவுபடுத்துவதற்கேயாகும். ஒரு மத அமைப்பின் குரலாக நிறுவப்பட்ட வானொலி மதப்பிரச்சார நோக்குகளையும் செய்திகளையும் தருகின்ற ஒரு பத்தோடு பதினொன்றாக அல்லாமல் ஒரு மக்கள் இயக்கமாகவே ஆகி ஒரு சமூகத்தின் குரலாக உலக அரங்கில் ஒலிக்கின்றதென்றால் எந்தளவிற்கு ஒரு வானொலியின் பணி துல்லியமாக உணரப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறதென்பது புரிகின்றது.

வெரித்தாசின் இந்தப் பணி பற்றி விளக்க நான் காலச்சக்கரத்தைப் பின்னோக்கி சுழற்றவேண்டும். 1983 - இந்த ஆண்டு ஈழத்தமிழனிக் இரத்தத்தோடும் சதையோடும் உறைந்து போன ஒரு வருடம். என்னால் உயிரோடும் உறவோடும் நினைவோடும் என எழுதமுடியவில்லை. ஏனெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பு யூலைநினைவுகள் எங்களிடம் இரத்தம் ,சதை,கொலை கொலைவெறி என்பதாகத் தான் பதிவாகியிருக்கின்றன. இந்தக் கால கட்டத்தில் தான் வெரித்தாஸின் முக்கியத்துவம் நம்மவர்களால் உணரப்பட்டதென நான் நினைக்கின்றேன். வாழும் நாடு என அறியப்பட்ட சிறிலங்கா உண்மைகளை ஒழித்துவிட்டு உலகுக்காக தன்னைத் தார்மீக அரசெனக் காட்ட தகுந்த வகையில் பொய்புரளிகளை செய்திகளென்ற போர்வையில் தந்திருந்தபோது உண்மை நிலையை உரைக்கின்ற ஒரு ஊடகமாக வெரித்தாஸ் எம்மத்தியில் இடம் பிடித்தது. அவலமும் தணிக்கையும் அடக்குமுறையும் கோலோச்சிய அந்த நாளில் தீர்வுகளாக தெரியாவிட்டாலும் தேர்ந்தெடுத்த சரியான உண்மைத் தகவல்களாக வெரித்தாஸ் ஒலித்தபோது எப்படி என்ற ஆச்சரியத்தை கடந்து இது தான் எமக்கான தகவல் தொடர்பு மையம் என்ற உணர்வு நம்மவரிடம் ஒட்டிக்கொண்டது. ஒட்டிக்கொண்ட இந்த உணர்வுகளோடு எல்லோரும் பேச ஆரம்பித்த காலங்களில் தான் நான் வெரித்தாசோடு உறவு கொண்டேன். ஈழமுரசு (ஈழத்தில்) பத்திரிகையின் இரவு நேர பிரதான ஆசிரியன் என்ற அந்தப் பதவியை நான் வகித்த ஒரு வருட காலம் மாலை ஆறு மணியிலிருந்து ஒலிக்கின்ற அத்தனை வானொலிகளையும் கேட்டு அவற்றின்முக்கிய செய்திகளைத் தேர்ந்தெடுத்து தேவையானவற்றை எழுதிக் கொடுப்பதும் என் வேலைகளுள் ஒன்றான போது எனது தேர்வுகளுள் பிரதான இடம் பிடித்தது பிபிசி யையும் தாண்டி வெரித்தாஸ் தான் என்பதை இன்று நான் நினைவு கூர்கின்றேன்.

எமது அரசியல் பிரச்னையை வெளியே கொண்டு வருதல், இதை ஊர்களுக்குள் பரிமாறுதல் (உ+ம் - யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு) என்று வெரித்தாஸ் நிலை கொள்ள இந்த அரைமணித்தியால ஒலிபரப்பு பட்டி தொட்டியெங்கும் பரவலாகி நிலைப்பதாயிற்று. செய்திகளும் தகவல்களும் தெரிந்து கொள்ள இன்று செய்தி கேட்டாயா என்று விசாரிக்கும் வழமையான அந்தக் கேள்வி இன்று வெரித்தாஸ் கேட்டாயா? என்று ஆகிப்போகின்ற அளவு எமது வாழ்க்கையில் வெரித்தாஸ் ஒரு அங்கமாகிப் போனது.

வெரித்தாசை விட்டு வெளியே போய் இன்றைய நிலையில் ஒரு தகவல் தொடர்பு ஊடகத்தைப் பற்றி சற்று கருத்தூன்றுவோம். நான் ஆரம்பத்தில் சொல்லிக்கொண்ட அந்தவரலாற்றிலிருந்து இன்று வரை என்பதில் வெறும் வரலாற்றை மட்டும் நினைத்துக் கொள்ளாமல் ஒரு ஊடகத்தின் பணியென விரிந்திருக்கின்ற இன்றைய கருத்தாக்கங்களின்படி ஒரு ஊடகமானது கருத்துப்பரிமாற்றம், செய்திகளைச் சொல்லுதல்,சமூகத்தை தன்னுணர்வைப் பெறச் செய்தல்,சிதறிக் கிடக்கின்றவர்களை ஒருங்கு சேர்த்தல், தன்னை அறிதல், தன்நிலை உணர்தல், உணர்ந்தவரை ஒருங்கு சேர்த்து ஒரு மக்களபிப்பிராயத்தை உருவாக்குதல் போன்ற அனைத்து அம்சங்களையும் இயங்க வைப்பதாக எண்ணப்படுகின்றது. பொழுதுபோக்கு அம்சங்களைத் தருவதில் கூட ஆரோக்கியமான அடிப்படையில் ஊடகம் இயங்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கலை கலாச்சாரம் முதலான பண்பாட்டு விழுமியங்களை கட்டிக் காப்பதிலும் காவிச் செல்வதிலும் ஊடகத்தின் பயன்பாடு பெரிதாகவேஉணரப்பட்டிருக்கின்றது. இத்தனை பாரிய பொறுப்பைச் சுமந்து நிற்கின்ற ஒரு ஊடகமானது தன்னைச் சரியாகவும் தெளிவாகவும் அழகாகவும் இனங்காட்டிக் கொள்வதன் மூலமே இவற்றைச் சாதிக்கமுடிகின்றது. இந்த வகையில் வெரித்தாஸ் வானொலி ஈழத்தமிழ் சமூகத்திற்கு பல வகைகளில் ஒரு உறவுப்பாலமாக ஆகிவிட்டது. அன்றைய காலகட்டங்களில் ஆரம்பித்து வளர்ந்த வெரித்தாஸ் ஈழ உறவு இன்று மிகப் பரந்து இலங்கைத் தீவெங்கிலும் வாழுகின்ற அனைத்துத் தமிழர்களையும் அரவணைத்து நிற்கின்றது. கொழும்பு,யாழ்ப்பாணம்,மட்டுநகர் ,திருமலை,மன்னார், வன்னி, மலையகம் என எங்கும் வெரித்தாஸ் ஒலிப்பதாகவும் ஒரு நாள் வெரித்தாஸ் ஒலிபரப்பப்படவில்லை அல்லது இழுக்கவில்லை (அலைவரிசையில் அகப்படாமை) என்றால் அது ஒரு பரபரப்பான செய்தியாகிப் போகிறதென்றும் அண்மையில் நாடு சென்று வந்தவர்கள் சொல்கின்றார்கள். சொந்த நாட்டிலேயே அகதிகளாக அல்லலுறும் வன்னி மக்களுக்கு வெளியுலகத்தொடர்புகளுக்கான வாசலாக வெரித்தாசே விளங்குகின்றது. கிடைப்பனவற்றைக் கொண்டே தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய ஒரு யுத்தகாலச் சூழலில் வாழும் அந்த மக்கள் துவிச்சக்கரவண்டியின் மின்னாக்கியை (தைனமோ) இயங்க வைத்து பெறப்படும் மின்சாரம் மூலம் வெரித்தாசைக் கேட்குமளவுக்கு அவர்களோடு வெரித்தாஸ் உறவாகியிருந்தது. வெரித்தாஸ் வானொலி என்ற பெயர் சொல்லப்படுகின்றபோதே அதனோடு இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிக்கும் ஒரு சொல் கஸ்பார் அடிகளார் என்பதாகும். ஜெகத் கஸ்பார் என்ற இந்தத் துறவி இன்று ஈழத்தமிழ் மக்கள் எல்லோராலும் செல்லமாக FATHER என்றே அழைக்கப்படுகின்றார். எத்தனையோ கிறீஸ்தவ அருட்தந்தைகளின் மத்தியில் குறிப்பிட்ட ஒருவருக்கே அருட்தந்தை என்பது பெயராகவே பாவிக்கப்படுவது அவர் எந்தளவு மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டிருக்கின்றார் என்பதைக் காட்டுகின்றது.

இவரது அன்பும் ஆதரவுமான அரவணைக்கும் குரல் பணிவும் பண்புமான உரையாடல் ,சொந்தங்களாகவே எல்லோரையும் எதிர்கொள்ளும் அணுகுமுறை என்பன பல்வேறு தளங்களிலும் திசைகளிலுமிருந்து அன்பு மடல்களைக் குவியச் செய்கின்றன. வெரித்தாஸ் வானொலிக்கு வரும் கடிதங்களில் அறுபது சதவீதம் தமிழர்களிடமிருந்தே வருகின்றன என்பதும் தமிழீழத்திலிருந்து மட்டும் மாதாந்தம் 2000 கடிதங்கள் வருகின்றன என்பதும் வெரித்தாஸ் துயரங்களைப் பகிர்ந்து கொள்வதிலும் ஆறுதல் அளிப்பதிலும் நம்பிக்கையூட்டுவதிலும் எத்தகைய இனிய தோழனாக ஈழத்தவர்களுக்கு விளங்குகிறதென்பது புலனாகும்.

இந்தக் கடிதங்களுள் பிரதானமான சிலவற்றைத் தொகுத்து கஸ்பார் அடிகளாரும் கவிஞர் அறிவுமதியும் இணைந்து வெளியிட்டுள்ள ஒலிப்பேழை உயிரைப் பிழியும் உண்மைகள் ஈழத்தின் அவலத்தை அதன் போராட்டத்தை அந்த மக்களின் துயரம் தோய்ந்த வாழ்க்கை நிகழ்வுகளை அவர்களின் அசைக்கமுடியாத உறுதியை எல்லாவற்றுக்கும் மேலாக எம்மவர் போராட்டத்தின் தார்மீக நியாயத்தை ஓங்கிய குரலில் உலகுக்கு அறிவிக்கின்றது இந்த ஒலிப்பேழை. ஆமாம் வெரித்தாசின் மிக முக்கிய பணியெனக் கணிக்கப்படத்தக்கது இதுவாகும். போர்க்காலச் சூழல் பற்றிய தகவல் கணிப்பை உலகுக்குச் சொல்வதும் அம்மக்கள் நிலை பற்றி உலகின் கவனத்தை ஈர்ப்பதுமான இந்தச் சேவை ஒரு சிறு தீவுக்குள் முடங்கிக் கிடந்த நமது பிரச்னையை இன்று உலக அரங்கில் பேசப்படும் நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றது. சரியாகச் சொல்வதானால் இன்று நமக்காக ஒலிக்கும் பல்வேறு குரல்களுக்கும் வழிகாட்டியாக ஆரம்பம் முதலே ஒலித்தது வெரித்தாஸ் என்றும் அதன் நெறியாள்கையை கட்டி எழுப்பியவர் ஜெகத் கஸ்பார் அடிகளார் என்றும் கூறலாம்.

தாயகத்தை விட்டுப் புலம் பெயர்ந்து உலகப்பந்தின் பல மூலைகளிலும் சிதறிக் கிடக்கின்ற ஈழத்தமிழினம் வெரித்தாஸ் வானொலி என்ற இணைப்புச் சங்கிலியாலேயே தொடுக்கப்பட்டுள்ளது. உறவுகள், நட்புகள் ,தாய்மண் என்பவற்றை பிரிந்தும் இழந்தும் பதறிப்போன ஈழச்சமூகம் தனக்குப் புதிய சூழலிலும் கலாச்சாரத்திலும் தன்னையும் இழந்துவிடுகின்ற அபாயத்துள் சிக்கி நிற்கின்றது. இவைகளுக்கு ஒரு ஆறுதலாக தாய்மண்ணுடனான ஒரு நம்பிக்கை தொடர்பாக தன்னை உணர்தலும் அறிதலுமான அறிவுத்துணையாக இயன்றவரை வெரித்தாஸ் தொழிற்படுகின்றது. இன்று புலம்பெயர் தமிழர்களிடம் தொழிற்படுகின்ற வானொலி,தொலைக்காட்சி ஊடகங்கள் தம்மை வடிவமைத்து நிகழ்ச்சிகளைத் தீர்மானித்து இயங்குதலுக்கு ஊடகம் பற்றிய பன்முகத் தேவைகளை அவை உணர்ந்திருக்கின்றன என்பது தெளிவாகின்றது. இந்த உணர்வை ஏற்படுத்துவதில் வெரித்தாஸ் பெரும் பங்காற்றியிருக்கின்றது.

இங்கும் ஜெகத் கஸ்பார் அடிகளார் நிகழ்த்தும் நிகழ்ச்சிகளில் (அருட்சோலை, நிலாமுற்றம்) அறிவுரைகளும் ஆறுதலும் உணர்வூட்டலும் செய்தித் துணுக்குகளும் நிறைந்து கிடக்கின்றன. எடுத்துக் கொண்ட பணியை செவ்வனே செய்வதில் சிறப்பிருக்கின்றது. தேவைக்கேற்ப பணியை வகைப்படுத்தி விரிவாக்குவதில் திட்டமிடல் இருக்கின்றது. கனிவும் அன்பும் கொண்டு அணுகுவதில் பாசம் இருக்கின்றது. நியாயங்களை ஓங்கி உரத்துச் சொல்வதிலும் இருட்டடிப்பு ,திரைமறைவு, போலிநாடகங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவதிலும் துணிச்சல் இருக்கின்றது. நம்பிக்கையூட்டுவதிலும் ஊக்கப்படுத்துதலிலும் உறுதிப்பாடு தெரிகின்றது. இத்தனையையும் கொண்டு உண்மை என நிமிர்ந்து நிற்கும் ஊடகமான வெரித்தாஸ் ஈழத்தமிழ் சமூகத்தின் குரலாக நம்பிக்கையோடு ஒலித்து தனது தமிழ்ப்பணியின் வெள்ளிவிழாவை எட்டி நிற்கும் இந்நாளில் அதனை நன்றியோடு நினைவு கூர்ந்து விழா எடுப்பது பாராட்டாகவும் வாழ்த்தாகவும் அமைந்து சிறக்கவும் வெரித்தாசின் சேவை தொடரவும் வழி வகுக்கட்டும்.

❍



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பணிப்பாளர் மேசையிலிருந்து



# உண்மை ஓங்குக!

வெள்ளி விழாக் காணும் வெரித்தாஸ் வானொலி தமிழ்பணியின் வரலாற்றினை எழுதுவது தான் இந்தக் கட்டுரையில் எனக்கு இடப்பட்டிருக்கின்ற பணி. இன்னார் அடிக்கல் நாட்டினார்... இவர் இவர்கள் பண உதவு செய்தார்கள்... அவர் திறந்து வைத்து ரிப்பன் வெட்டினார்... இவர்களெல்லாம் இங்கு பணிபுரிந்தார்கள்... என்று எளிதாக எழுதி முடித்துவிடலாம். குறிப்புக்கள் வரலாற்றுப் பதிவுக்கு முக்கியமானவை தான். ஆனால் வரலாறு என்பது குறிப்புக்களுக்கும் அப்பாற்பட்டு மேலானது. ஒரு புத்தகம் எப்படி அதன் உள்ளடக்கத்தால் மதிப்பிடப்படுகின்றதோ அது போலவே மனிதர்களும் நிறுவனங்களும் எதற்காக வாழ்ந்தார்கள்,எப்படி வாழ்ந்தார்கள் என்பதாலேயே தங்களது வரலாற்றினைப் பெறுகிறார்கள். 25 ஆண்டு கால வாழ்வில் வெரித்தாஸ் தமிழ்ப்பணி கணிசமான தமிழ் மக்களது மனங்களில் குறிப்பாக ஈழத்தமிழ் மக்களது மனங்களில் நீங்காத ஒரு இடத்தினைப் பெற்று நிற்கிறது என்பதை என்னால் உறுதியாகச் சொல்லமுடியும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் திருச்சி தூய பவுல் குருத்துவக் கல்லூரியில் வெரித்தாஸ் தமிழக நேயர்களின் சந்திப்பு நடைபெற்றது. முந்நூறுக்கும் அதிகமான நேயர்கள் கலந்து சிறப்பித்தார்கள். இவர்களில் மூவர் கண்பார்வை இல்லாத நல் உள்ளங்கள். தொலை தூரத்திலிருந்து உள்ளுணர்வையும் ஊன்றுகோலையும் மட்டுமே உறுதுணையாகக் கொண்டு சிறுகச் சிறுகச் சேமித்த பணத்தைச் செலவிட்டு இத்தகைய எளிய மனிதர்கள் நூற்றுக்கணக்கில் வருகிறார்களென்றால் இந்த ஒலிபரப்பின் ஏதோ ஒரு வேதிப்பொருள் அவர்களின் இதயங்களை வசப்படுத்தி ஆட்கொண்டிருக்கின்றது என நம்பலாம்.

போடப்பட்டிப்புதூர் செல்வராஜ், மோப்பாரிப்பாளையம் தங்கராஜ்,வேலூர் - பரமத்தி தமிழரசு, உப்பட்டி -பெருங்கரை தங்கையா,திருச்சி கலைஞர் கருணாநிதி நகர் அன்பழகன்,விட்டோரியா மருது, காளியப்பன்பாளையம் பழனிச்சாமி என நூற்றுக்கணக்கான நேயர்கள் தினமும் நிகழ்ச்சிகளைக் கேட்பது மட்டுமல்லாது நிகழ்ச்சிகள் பற்றி அன்றாடம் கடிதமும் எழுதுகிறவர்கள் . அப்பா அம்மாவுக்கு மாதம் ஒரு கடிதம் எழுதுவதே கடினமாகத் தெரிகின்ற தலைமுறையின் காலத்தில் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு இப்பால் இருக்கின்ற ஒரு வானொலி நிலையத்திற்கு அன்றாடம் கடிதம் எழுதத் தூண்டுகின்ற மந்திரம் என்ன என்பதைப் பிடித்தறிய எனக்கே நீண்டகாலம் எடுத்தது. கடா மீசைக்கார சந்தன வீரப்பன் கூட வெரித்தாஸ் வானொலியின் அபிமான நேயர் எனப்படுகின்றது. அவனிடம் பிணைக்கைதிகளாக இருந்தவர்கள் தினமும் அவன் இரவு 7.30 மணிக்கு தவறாது வெரித்தாஸ் அலைவரிசைகளைத் திருகிப் பிடிப்பதை பேட்டிகளில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். சந்தன வீரப்பன் ஒரு வடிகட்டின கிரிமினல் தான். ஆனால் அவன் கிரிமினல் மட்டுமே அல்ல. அவனுக்குள்ளும் ஒரு மூலையில் கொஞ்சம் மனிதம் இருக்கத் தான் செய்கின்றது. அந்த மனிதம் ஆற்றுப்படும் தூளியாக அவன் வெரித்தாஸ் அலைகளைப் பார்க்கின்றான் - அவ்வளவு தான்.

செஷல்ஸ் என்றொரு குட்டித்தீவுகளின் நாடு தன்சானியாவுக்கு வலது புறமாகவும் மடகஸ்காருக்கு மேலாகவும் இந்தியப் பெருங்கடலில் இருக்கின்றது. தஞ்சாவஹுர், காரைக்குடித் தமிழர்கள் இங்கு வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறக்கின்றார்கள். இரு ஆண்டுகளுக்கு முன் பணிநிமித்தமாக அந்நாட்டுக்குச் சென்றிருந்த என் நண்பர் ஒருவருக்கு இன்ப அதிர்ச்சி. மாலை நேரம் சந்தைப்பகுதி வழி நடந்து கொண்டிருந்த என் நண்பர் பெருவாரியான தமிழ்க்கடைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெரித்தாஸ் தமிழ்ப்பணி ஒலித்துக்கொண்டிருப்பதைக் கேட்டிருக்கின்றார். மலேசிய நாட்டில் சுமார் 15 லட்சம் தமிழ் மக்கள் வாழ்கிறார்களென்பதும் பர்மா மயன்மார் நாட்டில் சுமார் 7 லட்சம் தமிழர்களென்பதும் பலருக்கு வியப்பாக இருக்கலாம். இம்மக்களில் பலர் தாய்மொழியாம் தமிழை மறந்துவிடாதிருக்க வெரித்தாஸ் தமிழ்ப்பணியும் ஒரு கருவியாய் இருந்து வருகின்றது. பர்மா .- மயன்மார் நாட்டில் சில இந்து தேவாலயங்களில் பக்திப்பாடல்களைத் தொடர்ந்து வெரித்தாஸ் வானொலி நிகழ்ச்சிகளையும் பொது ஒலிபரப்பு ஊடாக மக்களுக்குத் தருவித்து வருகின்றார்கள்.

ஈழத்தமிழ் மக்களோடு வெரித்தாஸ் தமிழ்ப்பணி உருவாக்கிக்கொண்ட உறவு தனித்துவமானது .அம்மக்களின் கடந்த இருபது ஆண்டுகாலச் சிலுவைப் பயணத்தில் வாஞ்சையோடும் இதய நேர்மையோடும் ஒரு நம்பிக்கைக்குரிய சகோதரனாய் வழி நடந்தது வெரித்தாஸ்.

1981, 83 களில் கொழும்பு வீதிகளிலும் 1991 இல் திருகோணமலையிலும் அதே ஆண்டு செப்டம்பரில் வந்தாறுமூலை கிழக்கு மாகாணப் பல்கலைக்கழகத்திலும் சத்துருக்கொண்டானிலும் குமாரபுரத்திலும் நவாலி - நாசிக்குடா - செம்மணி - வசாவிளான்- புன்னாலைக்கட்டுவன்- கிளிநொச்சி - துரையப்பா விளையாட்டரங்கம்- மணலாறு- ஒட்டுசுட்டான்- சாவகச்சேரி- புதுக்குடியிருப்பு-வவுனிக்குளம் என அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவ பயங்கரவாதத்திற்கு உள்ளாகி சின்னாபின்னப்படுத்தப்பட்டு மூச்சடங்கிப் போன கொடுமையின் நாட்களில் அந்த அப்பாவிகளின் ஆத்துமக்குரல் ஆனமட்டும் உரத்துக் கூக்குரலிப்பது வெரித்தாஸ் தமிழ்ப்பணி.

உன்னதங்கள் புதைக்கப்பட்டு, உலகத்தின் கருணையுள்ளம் மலடாகி மரணத்தில் மட்டுமே வாழ்க்கையைத் தேடி நின்ற அம் மக்களுக்கு ஆறுதலின் சிறிய நீரூற்றாய் தூரத்தில் இருந்து கொண்டு மனமுருகிக் கசிந்தது வெரித்தாஸ் தமிழ்ப்பணி.

எறிகணைப் புகையும் விமானக்குண்டுகளின் புகையும் கவிந்து கறுத்த அம்மக்களின் வான்பரப்பில் மனித நேயத்தின் மழைச்சாரல்களை வானலைகள் ஊடாக அனுதினமும் அனுப்பி வைத்தது வெரித்தாஸ் தமிழ்ப்பணி.

தலைமுறை தலைமுறைகளுக்கும் மறக்கமுடியாதபடி வரலாற்று நினைவில் பதிந்துவிட்ட 1995 அக்டோபர் மாத இடப்பெயர்வின்போது எங்கு போகிறோம் என்ற இலக்கின்றி கனத்த இரவிலே கடல் நீரேரிகளுடாக பூக்களும் பிஞ்சுகளும் காய்களும் கனிந்து வெடித்துவிட்டவைகளுமான இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் நடந்தபோது நம்பிக்கை கொள் நாளை நமக்காகவும் ஒரு ஆதவன் உதிப்பான் என இடைவிடாது மந்திரம் ஓதிக்கொண்டே உடன் நடந்தது வெரித்தாஸ் தமிழ்ப்பணி.

பயங்கரவாதம் என்ற சாயம் பூசப்பட்டு அன்றாடம் மரணத்திற்கும் அழிவுகளுக்கும் வாழ்க்கைப்பட்டு அவலம் சுமந்து நின்ற அம்மக்களுக்கு நாகரீக உலகம் பாராமுகம் காட்டி நின்றபோது அவர்களும் கடவுளின் பிள்ளைகள் மானுடக் குழந்தைகள் எங்களின் செல்வங்கள் எனக் கருணையுடன் அரவணைத்து ஆறுதல் தந்தது வெரித்தாஸ் தமிழ்ப்பணி.

இராணுவ எந்திரத்திடமிருந்து தப்பவேண்டிப் புறப்பட்ட தமிழ் மக்கள் ஆங்காங்கே அகதிகளாகவும் ஏஜண்டுகளால் ஏமாற்றப்பட்டவர்களாகவும் நாட்டு எல்லைகளைக் கடக்கையில் பிடிபட்டு சிறையிலடைக்கப் பட்டவர்களாகவும் சிதறுண்டு போன இக்காலத்தில் அம்மக்களை அவர் தம் குடும்பங்களோடும் உறவுகளோடும் ஒன்றிணைக்கும் உறவுப்பாலத்தினை உருவாக்கியது வெரித்தாஸ் தமிழ்ப்பணி.

உலக ஊடகங்கள் உள்நுழையாதபடி தடுக்கப்பட்டு தணிக்கை தடையிடப்பட்டு அம்மக்கள் தகர்க்கப்பட்ட தளங்களிலே தாண்டிக்குளங்களைத் தாண்டியும் உயிலங்குளங்களை ஊடறுத்தும் சென்று நின்றன வெரித்தாசின் வானலைகள். உண்மையான தமிழ் உலகிற்கு படம் பிடித்தன.

அநீதியின் உச்சக்கட்டமாக வன்னிப்பிராந்தியத்தில் லட்சக்கணக்கான தமிழ் மக்களை உணவும் மருந்துகளும் இல்லாத பொருளாதார முற்றுகைக்கு உள்ளாக்கி விடுதலையைப் பற்றிப் பேசினார் இது தான் உங்களுக்கு கிடைக்கும் என்ற வக்கிரமான பாடத்தை கொழும்பு ஆட்சியாளர்கள் தருவித்து நின்றபோது தமிழீழப் பிள்ளைகள் உயிர்காப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி ஏழைக்கு இரங்குகிறவன் இறைவனுக்கு கடன் கொடுக்கிறான் என்றும் நொய்யிற் பிளவளவேனும் வறிஞர்க்குப் பகிர்ந்தால் வையிறக் கதிர்வேலனின் வாயில் திறக்கும் என்றும் எடுத்துச் சொல்லி புலம்பெயர் தமிழ் மக்களின் கருணை நீரூற்றுக்களை அம்மக்களுக்காய்த் திருப்பி விட்டது இந்த வெரித்தாஸ் தமிழ்ப்பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தான் காலையில் கண்விழித்து அப்பாவுக்குத் தேநீர் போட்டுக் கொடுத்த பின் முதல் வேலை வெரித்தாஸ் தமிழ்ப்பணி கேட்பது தான் என யாழ்ப்பாணம் அளவெட்டி மேற்கு நேயர் ஜெயந்தி அவர்களும் தென்மராட்சி வரணியில் இருந்து எல்லாவற்றையும் இழந்துவிட்டு ஏதிலிகளாய் இடம் பெயர்ந்து புளியம்பொக்கணை நாகேந்திரத்தில் தங்கியிருக்கும் எங்களுக்கு இருக்கும் ஒரே அன்றாட ஆறுதல் வெரித்தாஸ் தமிழ்ப்பணி தான் என எஸ்.யோகேஸ் அவர்களும்.

ஒவ்வொரு நாளும் இரவு 7.30 உங்களின் நிகழ்ச்சிக்காக காத்திருப்பே அலாதியானது .கேட்காவிட்டால் அன்றைய தினம் உறக்கம் வராது. நான் ஒரு இந்துவாக இருந்தாலும் உங்கள் பிரார்த்தனையைக் கேட்க கண்களில் நீர் நிரம்பி விடுகின்றது என பரந்தன் தர்மபுரத்திலிருந்து சகோதரி சிவகலா அவர்களும்

சிறிலங்கா அரசாங்கத்தின் அராஜகத்தால் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதோ ஒருவகையில் பாதிக்கப்பட்டு உடல் களைப்புடனும் மனச்சலிப்புடனும் வீடு திரும்பியிருக்கும் நேரத்தில் உனது குரல் உண்மைக்காக நான் இருக்கின்றேன் என அபயமளிக்கின்றது. அடிபட்ட மனதிற்கு அது ஒத்தடம் தருவது போல் இருக்கின்றது என யோகபுரம் மத்தி இ.யசோதா அவர்களும்

பூமி சுற்றுவது நின்றாலும் வெரித்தாஸ் ஒலிக்கும் காலை மாலை நேரங்களில் என் அப்பா சி.தர்மராஜா நிகழ்ச்சிகளைக் கேட்பதற்காக சைக்கிள் டைனமோவைச் சுற்ற மறக்கமாட்டார் (மின்சாரம் இல்லாத நிலையில் சுற்றித்தான் பெருவாரியான தமிழ்மக்கள் வானொலி கேட்கிறார்கள் என யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி நேயர் த. உமையாள் அவர்களும்

இவர்கள் போன்று பல்லாயிரக்கணக்கான இனிய இதயங்களும் எமது அன்பை அங்கீகரித்து கடிதம் எழுதுகிறார்கள்.
பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா விமான நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீற்றர் தூரத்தில் கெயெசான் நகரில் தான் வெரித்தாஸ் தலைமையகம் இருக்கின்றது. இங்கிருந்து சுமார் 200 கி.மீ.தூரத்தல் பலாவிக் கடலோரத்தளத்தில் ஒலிபரப்புக்கட்டுமானங்கள் இருக்கின்றன.
வெரித்தாஸ் தமிழ்ப்பணியின் தமிழகத்துக்குப் பொறுப்பு வழிகாட்டியாக மேதகு ஆயர் ஆரோக்கியசாமி அவர்கள் இருக்கின்றார்கள்.
இப்படியொரு வானொலி நிலையத்திற்கான யோசனையை விதைத்தவர் திருத்தந்தை 12ம் பயஸ் அவர்கள். 1958 இல் தென்கிழக்காசிய நாடுகளின் கத்தோலிக்க ஆயர்கள் இணைந்து அந்த யோசனையை தீர்மானம் ஆக்கினார்கள்.
1960 ஆம் ஆண்டு மணிலா பேராயர் கர்தினால் ரூபினோ சாந்தோஸ் நிதியுதவி வேண்டி ஜெர்மன் நாட்டு வேந்தர் திரு. கொன்ராட் அதெனெயூர் அவர்களை சந்தித்தார். 1963 இல் ஜெர்மன் பாராளுமன்றம் வெரித்தாஸ் வானொலி நிலையம் எழுப்ப நிதியுதவியை அங்கீகரித்தது. ஏப்ரல் 11,1969 இல் மூன்று மொழிகளுடன் ஒலிபரப்பு தொடங்கியது.
1967 தொடக்கம் சிற்றலை ஒலிபரப்பு சோதனைகள் முயற்சிக்கப்பட்டன. 1976 யூன் 12 ஆம் திகதி தமிழ்மொழி பரீட்சார்த்த ஒலிபரப்பு தொடங்கியது.
அதே ஆண்டு நவம்பர் 01ம் நாள் தமிழ் அதிகாரபூர்வ ஒலிபரப்பு தொடங்கியது. இன்று வெரித்தாஸ் அலைகளில் 17 மொழிகள் பயணிக்கின்றன.
எதற்காக இந்த நிலையம் தொடங்கப்பட்டது?
1.மனித உரிமைகள்,மனித சுதந்திரம் ஆகிய விழுமியங்களைத் தாங்குவது.
2. உண்மையின் குரலாய் முழங்குவது.
3. கலை கலாச்சார மொழி விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவுவது.
4. அமைதிக்கும் ஆசிய மக்களின் முன்னேற்றத்திற்கும் உழைப்பது.
1976 தொடக்கம் 1988 வரை தமிழ்ப்பணியை பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் வளர்த்து வலுவான அடித்தளம் தந்தவர்கள் திரு.எம்.ஏ. சாமி மற்றும் அவரது குடும்பத்தினர்.
வெரித்தாசில் நடைபயின்ற திரு.எம்.ஏ. சாமி அவர்களின் புதல்வர் திரு.ரபி பெர்ணாட் இன்று தமிழ் ஊடக உலக நாயகர்களில் ஒருவர்.
1988 தொடக்கம் 1995 வரை அருட்திரு செபா,றைசெல், செலஸ்ட்டீனா,ரூபி மேரி,கார்மல் அணியினர் தமிழ்ப்பணியின் தளத்தை திறம்பட விரிவுபடுத்தினர்.
அவர்கள் வளர்த்தெடுத்த இந்த ஆல மரத்தில் 1996 தொடக்கம் அடியவன் நானும் எனது அணியினரும் வந்தமர்ந்து பாடுகிறோம்.

**- ம.ஜெகத் கஸ்பார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானொலி என்னும் மக்கள் இயக்கம்

**- நா. கண்ணன்**
**ஜெர்மனி**

வான்வழிச்செய்தி வருவது தமிழுக்கு புதிது அல்ல. தன் கணவனோ கள்வன் என்று குமுறிக்கொண்டு வருகிறாள் கற்புக்கரசி கண்ணகி. அவள் இக்கேள்வியைக் கேட்டது சுட்டெரிக்கும் சூரியனிடம்:

*காய் கதிர்ச் செல்வனே.. கள்வனோ என் கணவன்,?*

அதற்கு மறுமொழி கூறியது கதிரவன் வான் வழியாக

கள்வனோ அல்லன் கருங்கயல்கண் மாதராய் ஒள் எரி உண்ணும் இவ்வூர் என்றது ஒரு குரல்..

இது சிலம்பில் துன்பமாலையில் வருகின்றது இதற்கும் தமிழீழ விடுதலைக்காய் குரல் கொடுக்கும் வெரித்தாஸ் வானொலிக்கும் ஒரு ஆச்சரியமான தொடர்பு இருக்கின்றது.
கண்ணகி மதுரையில் கேட்டது நேர்மை தவறிய ஒரு அரசிற்கு எதிரான கோபக்குரல். இதற்குப் பதிலாக கதிரோன் சொல்லியது மனச்சாட்சியின் குரல். அது உள்ளிருந்து வரும் குரல் என்று விஞ்ஞான பூர்வமாகப் பதில் சொல்லாமல் அதற்கான பதிலை எல்லோரும் கேட்கும் வண்ணம் பொதுமையில் வைத்தான் இளங்கோ அடிகள். வான் அலையில் பதில் சொல்கிறது சிலம்பு நியாயமென்று ஒன்றிருந்தால் அது பொதுமன்றத்தில் ஒலிக்கட்டும் என்பது சிலம்பு சொல்லும் சேதி.
மேலும் கற்பு என்பது திடமான கொள்கைப் பிடிப்பென்று நல்ல தமிழ் சொல்லும். கண்ணகியின் போர்க்குணமும் அது சார்ந்த பிடிப்புமே இங்கு கற்பெனப்படுவது. பாலியல் சார்ந்த ஆணாதிக்க கருத்தன்று.

இதேபோல் ஈழமண்ணில் அல்லலுறும் பல்லாயிரக்கணக்கான மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைக்குரலாக வெரித்தாஸ் வானொலியை ஒலிக்கச் செய்து வருகின்றார் ஜெகத் கஸ்பார் அடிகள். இளங்கோ அடிகள் ஒரு துறவி கண்ணகி கதையை அவர் பதிவு செய்வதன் நோக்கமே இது போன்ற ஒரு குற்றம் தமிழ் மண்ணில் மீண்டும் நடந்து விடக்கூடாது என்ற நல்லெண்ணம் தான். இது போன்ற நோக்கில் தான் இன்று கஸ்பார் அடிகளாரும் ஈழத்தில் நடக்கும் கொடுமைகளை உலகறியச் செய்து இக்குற்றம் மீண்டும் தமிழ் மண்ணில் நடக்கக் கூடாது என்று போராடி வருகிறார் .துறவு என்பது ஒரு பொறுப்பு என்பதை இருவருமே உணர்ந்து செயற்படுவது கண்கூடு. அன்று கண்ட கற்பு இன்று ஒரு வானொலிக்கு இருப்பதும் கூர்ந்து நோக்கத் தக்கது வான் ஒலியாக அன்று வந்தது ஒரு கற்பனையாக இருக்கலாம்.ஆனால் கற்பனைகள் தான் செயல் வடிவமெடுத்து அறிவியல் உண்மைகளாகின்றன. வான் வழியாக ஒலி அலைகளைச் செலுத்தவேண்டுமென்ற தேவை கூட ஒரு போர்க்கால நெருக்கடியில் தான் உருவாகின்றது. இரண்டாவது உலக யுத்தம் உலகைச் சூழ்ந்திருந்த ஒரு காலகட்டத்தில் தான் வானொலியின் உச்சகட்டப் பயன்பாடு வெளிவந்திருக்கின்றது.

எனவே வானொலி என்பது ஒரு மகிழ்வூட்டும் ஊடகம் என்ற கருத்து முழுவதும் உண்மையல்ல.

வானொலி என்பது ஒரு பொது மேடை அமைத்துத் தரும் ஒரு ஊடகம். அதன் ஆதாரமான பயன்பாடு பொதுமை நோக்கியுள்ளது. ஒரே வானொலிப் பெட்டி வழியாக சேதி வந்தாலும் அது கேட்கும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவே அச்செய்திகளை பரிமாறுகின்றது வானொலி. அதே நேரத்தில் ஒரே நேரத்தில் கேட்கும் அனைவருக்குள்ளும் ஒரு சூட்சும தொடர்பையும் அது ஏற்படுத்துகின்றது. இவ்வகையில் அதற்கு ஒரு குமுகாயப் பரிமாணம் இயல்பாக வந்து விடுகின்றது. அது ஒரு குமுமக் கருவி என்றும் சொல்லலாம். ஆனால் இப்பயன்பாட்டை அநேகமாக இவ்வுலகம் மறந்திருந்த போதில் அதன் குமுகாயப்பயன்பாட்டை மெத்த வெளிக்கொணர்ந்தவர் கஸ்பார் அடிகளார். போர்க்காலச் சூழலில் அல்லது போர்க்கருவிகளெனவெ பல நுகர் பொருட்கள் முதலில் உருவாகின்றன. பின் அதன் பொது நன்மை கருதி அது நுகர்தலுக்கு வருகின்றது. மோர்ஸ் கருவி ,வானொலி இவை தொலைதூரத் தகவற் சாதனங்களாகும். பல நூறு மைல்கள் தாண்டி செய்திகளை அனுப்பும் ஊடகமாகும். போர் வியூகங்களை வகுக்கவும் எச்சரிக்கை செய்திகளை முன்கூட்டியே சொல்லவும் தானைத் தலைவன் அல்லது ஒரு நாட்டின் தலைவரின் உற்சாக மொழியினை எல்லையில் இருக்கும் போர் வீரர்களுக்கு சொல்லவும் இத்தகைய சாதனங்கள் பயன்பட்டன.

ஆயினும் இதன் பயன்பாடு போர் எல்லை விடுத்து பொதுமக்கள் குடியிருப்புக்களுக்கு வரும் போது தான் அது ஒரு ஜனநாயகத்தை பெறுகின்றது. மக்களாட்சி மலர்ந்த பின் இவ்வூடகம் சுதந்திரதினச் செய்திகள், தேர்தல் செய்திகள் என்று ஜனநாயக கட்டமைப்பிற்கு பெரிதும் பயன்பட ஆரம்பித்தது. அதற்கு அடுத்த கட்டமாக வானொலி கலை,கலாச்சாரம் வளர்க்கும் ஊடகமாக பரிமளித்தது.

இப்பரிமாணம் தான் பெரும்பாலோருக்கு அதிகம் அறிமுகமான ஒன்று. தினம்,தினம் வானொலியில் திரை இசை கேட்பது, சாஸ்திரிய சங்கீதம் கேட்பது, நாடகங்கள் கேட்பது போன்றவை நமக்குத் தெரிந்த வானொலிப் பயன்பாடு.

உலகம் இரண்டுபட்டு முதலாளித்துவ நாடுகள், சோசலிச நாடுகள் என்று கூறுபோட்டபோது வானொலி ஒரு அரசியல் பிரச்சார ஊடகமாகிப்போனது. ஒரு நாட்டைப் பற்றி இன்னொரு நாடு குறை சொல்வது கோள் மூட்டிவிடுதலும் ஒரு காலகட்டத்தில் அதிகமாகவே இருந்தது. வானொலி அலைகளை சிதைத்து ஒலி பரப்பைக் கேட்கமுடியாத வண்ணம் நாடுகள் தங்களுக்கும் திரை போட்டுக் கொண்டிருந்த காலமும் உண்டு.

இவ்வாறு செயற்படுவதற்கான முக்கிய காரணம் தகவல் காற்றில் கலந்த பின் அது உலகப் பொதுத் தகவலாகிப் போவது தான். அதன் பின் விளைவுகள் ஒரு சின்ன வானொலி நிலையத்திலிருந்து நாடு தழுவிய அளவில் பெரிதாக்கப்பட்டு விடுகின்றது.இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இறந்த செய்தியை அகில இந்திய வானொலி பல மணி நேரங்கள் தாமதித்தே ஒலி பரப்பியது. இச்செய்தி இந்தியாவில் உருவாக்கும் குழப்பங்கள் ,இன,மத சண்டைகள் எண்ணிலடங்கா என்ற புரிதலே இந்தத் தாமதத்திற்கு காரணம். அவ்வளவில் வானொலிப்பெட்டி என்பது ஒரு பயங்கர ஆயுதமாகிப் போகின்றது.

காற்றில் கலக்கும் சேதிகளுக்கு அளப்பரிய சக்திகள் உண்டு. இதன் ஆகப்பெரிய சமூகப் பயன்பாடு சமீபத்திய ஈழ இடம் பெயர்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியப்பட்டது. ஒரு குடி அகதியாய் இடம் பெயரும் போது உற்றார்,உறவினர்களைப் பற்றிய சேதிகள் கேட்பதற்கு அரியனவாகிப்போகின்றன. அல்லோலகல்லோலப்பட்டு ஓடி ஒழியும் போது உறவுகள் நட்புகள் வாணிபத் தொடர்புகள் இவை அறுந்து போகின்றன. அப்போது இவைகளை இணைக்கும் பசையாக வானொலி புதுவுருக் கொள்கிறது. இத்தகைய பயன்பாடு மிக அரிதாகவே உலக நடப்பில் காணக்கிடைக்கின்றது. புலம் பெயரும் சமூகத்தின் திறமையையும் ஒன்றிணைக்கும் ஆற்றலையும் பொறுத்தே இது அமைகின்றது. அவ்வகையில் புலம் பெயர்ந்த ஈழசமூகம் இவ்வானொலி ஊடகத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தியது சரித்திர உண்மை. தேவையே கண்டுபிடிப்புக்களின் ஆதாரம் என்பது முதுமொழி. இப்போதைய புகலிடத் தமிழர்கள் உலகமெல்லாம் பரவியிருந்தாலும் வானொலி மூலமாக இணைக்கப்பட்ட ஒரு சமூகமாகவே காட்சியளிக்கின்றனர். இவர்களது அடிப்படை உளவியல் தேவைகளை வானொலி தீர்த்து வைக்கின்றது. சிதறிச் சிதைந்துவிட்டோம் என்னும் எண்ணம் அழிக்கும் ஆற்றலுடையது. புதிய நாட்டில் புதிய கலாச்சாரத்தில் பழக்கப்படாத சூழலில் வாழும் ஈழத்தமிழர்களுக்கு வானொலி பழக்கப்பட்ட விடயங்களைப் பேசுவதன் மூலமும் பழக்கப்பட்ட இசையைத் தருவதன் மூலம் முதற்கண் உளச்சாந்தியைத் தருகின்றது. இரண்டாவது கிராமக்கட்டமைப்பிலிருந்து வரும் ஈழ சமூகத்திற்கு கல்யாணம், கார்த்தி,சாவுச் செய்திகள் ,பிறந்தநாள் செய்திகள் போன்ற அன்றாடச் செய்திகளை வானொலி தருவதன் மூலம் கிராமத்தில் இருக்கும் ஒரு உணர்வை மீண்டும் தந்துவிடுகின்றது. இது முதற் கட்டவானொலிச் சேவையாகும்.

இதைவிட முக்கியமான சேவையொன்றை வானொலி மூலமாக செயற்படுத்தி வருகின்றனர் ஈழத்தமிழர்கள். அது தான் கருத்து நெறிப்படுத்தல் என்பது.வெளிநாட்டில் இருந்து கொண்டு தன் நாட்டின் சுயநிர்ப்பந்தத்திற்கு பாடுபட கருத்துச் சேகரிப்பு அவசியம். உள்நாட்டில் உள்ளது போல் கூட்டங்கள் கூட்டி செயற்படமுடியாது. இந்தத் தேவையையும் பூர்த்தி செய்துள்ளது வானொலி. ஒரு தலைப்பின் கீழ் கருத்தை நெறிப்படுத்தும் ஊடகமாக வானொலி புதிய பரிமாணம் கொண்டுள்ளது. பல்வேறு கருத்துக்கள் ஜனநாயக ரீதியாக அலசி ஆராயப்பட்டு நெறிப்படுத்தப்படுகின்றன. வானொலிக்கும் கல்வி சேவைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வானொலி தொடர்ந்து கேட்பவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவர். பிறமொழி கற்பிக்க வானொலி பெரிதும் பயன்படும் ஒரு ஊடகம். பல்வேறு மொழிக் கூட்டமுள்ள ஐரோப்பிய நிலப்பரப்பில் வாழும் தமிழர்களுக்கென்று சில தனித்தேவைகள் உண்டு. முதலில் தமிழை பர மொழிச் சூழலில் தக்க வைத்தல்,பின் பரமொழிப் பாண்டித்தியம் பெறுதல். இவை இரண்டிற்கும் தமிழ் வானொலி நன்கு பயன்படுவது கண்கூடு. மேலும் புற கலாச்சாரச் சூழலில் தமிழ்பண்பாட்டு விழுமியங்களை தக்க வைக்கவும் இவ்வூடகம் நன்கு பயன்படுகின்றது.

இவ்வூடகம் இதுவரை அறியாத ஒரு புது எழுச்சியை வெரித்தாஸ் வானொலி செய்திருக்கின்றது. அது தான் போர்க்காலச் சூழலைப் பற்றிய ஒரு மூன்றாம் மனிதக் கணிப்பை உலகிற்கு சொல்லவும் அதன் மூலம் போர்ச் சூழலில் அல்லலுறும் மக்களிடம் உலக கவனத்தை ஈர்ப்பதும் போன்றவையாகும்.இரண்டாம் உலக யுத்தம் உச்சத்திலிருக்கும் போது ஜீலியன் கக்ஸி என்ற புகழ் பெற்ற விஞ்ஞானி இலண்டன் மிருகக்காட்சி சாலையில் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். குண்டு வெடிப்புக்களின் போது மிருகங்கள் எப்படி நடந்து கொள்கின்றன என்பது அவர் ஆய்வு. ஒவ்வொரு மிருகமும் ஒவ்வொரு விதமாக செயற்படும்போது ஒட்டகமானது தனதருகில் குண்டு வெடித்தபோதும் கண்டு கொள்ளாமல் இருந்ததாம்.

இப்படித் தான் ஈழம் எரிந்து கொண்டிருக்கும்போது பல தமிழர்களும் பிற உலகமும் யாருக்கு வந்த இழவோ என கவனமற்று இருக்கின்றனர். இவர்கள் கவனத்தை ஈர்ப்பதென்பது சாதாரண விஷயமல்ல. தொடர்ந்த தன் முயற்சியின் மூலம் வெரித்தாஸ் வானொலி உலகத் தமிழர்கள் கேட்டறியும் ஒரு வானொலியாக உருமாறியது. இச்செயற்பாட்டின் மூலம் இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜெர்மனிய திருச்சபை செய்யாத ஒரு தொண்டை கஸ்பார் அடிகளார் தமிழர்களுக்கு செய்து வருகின்றார். நோயிருக்கும் இடத்தில் தான் வைத்தியனுக்கும் வேலை இருக்கவேண்டும். மக்கள் எதிர்பார்ப்பைப் பொய்த்துவிட்டு ஒழிந்து கொண்டது ஜெர்மனியத் திருச்சபை அன்று. ஆனால் அது போல் அல்லாமல் தேவையான காலகட்டத்தில் ஈழத்தின் குரலாக வெரித்தாஸ் ஒலிக்கின்றது. அது போர் அழிவை உலகிற்குச் சொல்கின்றது. அதே நேரத்தில் போராளியும் சக மனிதந்தான் என்று காட்டி அவனது உள்ளக்கொதிப்பை உலகிற்கு காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் போர்முனையிலிருக்கும் ஒருவனுக்கும் வீட்டு முற்றத்திலிருக்கும் ஒருவனுக்கும் முடிச்சுப் போடுகின்றது வெரித்தாஸ். இது இருவரது ஆசுவாசத்தையும் பூர்த்தி செய்கிறது. கஸ்பார் அடிகளாரின் கணக்குப்படி மாதத்திற்கு இரண்டு லட்சம் கடிதங்கள் வருகின்றன. அதில் அறுபது சதவிகிதம் தமிழர்களிடமிருந்து குறைந்தது 2000 கடிதங்களாவது போர்ச் சூழலிலிருக்கும் தமிழீழத்திலிருந்து வருகின்றதாம். இது வெரித்தாஸ் வானொலியின் மீது மக்கள் கொண்டுள்ள நன்னம்பிக்கைக்கு எடுத்துக்காட்டு. அடுத்து வெரித்தாஸ் ஒரு மக்கள் இயக்கமாகவே மாற்றப்பட்டுள்ள விந்தை தெரிகின்றது. மேலும் வெரித்தாஸ் என்ற ஒரு வானொலி தொப்புள் கொடி போல் போராளியையும் குடிமக்களையும் இணைக்கும் ஒரு செயற்பாடு தெரிய வருகின்றது. சமகால வானொலி செய்த மிகப் பெரும் சாதனை இதுவாகத் தான் இருக்கமுடியும்.

ஊடகங்கள் முன் எப்போதும் நினைத்திராத பல விஷயங்களை சமீப காலங்களில் செயற்படுத்தி வருகின்றன.தகவல் புரட்சி ஒன்றை வெளிக்கொணர்ந்திருக்கின்றது. இன்டர்நெட் எனப்படும் உலக வைய விரிவு இணையம். இது பல் ஊடகங்கள் சங்கமிக்கும் ஒரு கடலாக உருவாகி வருகின்றது.

வானொலி,தொலைக்காட்சி,அச்சு இவைஒன்றாகக் கூடும் சங்கமம் இது.வானொலியின் அடுத்த கட்ட பயன்பாடு இங்கு நிகழ்ந்து வருகின்றது. கருத்து ஒருங்கிணைப்பில் இணையத்தின் செயற்பாடு நிரூபிக்கப்பட்டுள்ளது. இது மின்னஞ்சல் மூலம் செயற்பட்டிருக்கின்றது. அடுத்த கட்டமாக பல்வேறு தமிழ் வானொலிகள் இணையத்தளத்திற்குள் வந்துள்ளன. 24 மணி நேர ஒலிபரப்பு. தேவையான சேதியை தேவையான நேரத்தில் கேட்பது போன்றவை இன்று சாத்தியப்பட்டுள்ளது.குடிமக்களின் தேர்வை அறிந்து சேதிகள் தனித்திரையில் (கணனித்திரை) வந்த வண்ணமுள்ளன. அவர்கள் சொல்லும் சேதி தான் கேட்கவேண்டுமென்ற கட்டாயம் நீங்கி நாம் விரும்பும் சேதியை அவர்கள் தரக்காத்திருக்கின்றனர். சரியாக கையாளப்பட்டால் சுதந்திரத்தின் நல்ல ஒரு வெளிப்பாடாக இணைய வானொலி வந்து சேர வாய்ப்புள்ளது.

தற்பொழுது இணையத்தமிழ் வானொலிகளென கீழ் காணும் வானொலிகள் செயற்படுகின்றன.

தற்பொழுது இணையத்தமிழ் வானொலிகளென கீழ்காணும் வானொலிகள் செயற்படுகின்றன.

All India Radio-
**http:// air.kode .net/index.html**

BBC service in Tamil –
**http:// www.bbc.co.uk**

Candian Tamil Program –
**http://www.tamil.org/ctbc/**

Deepam Television – Europe-
**http://www.deepamtv/com**

Doordarshan Live 24 hours –
**http://www.ddindia.net**

Europes Tamil TV-
**http://www.trt.net**

International Tamil Broad cast –
**http://www/itbcnet/net**

Live Tamil Radio Prgram (Sundays 7.30 am to 8 am)- Vancouver.Canada
**http://www. expage.com/page/tamilsvoice**

On line Radio Program- San Francisco-
**http://www.angelfire.com/id/mostytamil**

Radio Singapore 24 hours Live Audio
Sun Tv – **http:// www.sunnt/com**

Tenisai- Tamil radio station-
**http://listen.to/tamilfm**

Thendral- **http:// www.thendral/com**

வானொலி என்பது தனி மனித சகித்தலுக்கான ஒரு ஊடகம் என்பது எவ்வளவு உண்மையோ அதேபோல் வானொலி என்பது ஒரு குழுமக்கருவியுமாகும். மனிதன் என்றும் தனித்தீவாக இயங்கமுடியாது. அவன் இயக்கத்திற்கு சமூகம் ஒரு தேவை. வானொலி இந்தத் தனிமனிதனையும், சமூக சீவியான மற்றொரு மனிதனையும் இணைப்பதில்தான் தன் வெற்றியைத் தக்கவைத்துள்ளது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானின் ஒலி எல்லாம் வானொலி ஆகுமா?
# வானொலி எல்லாமே வாய்மை ஒலிகளா?


**சுதுமலை கந்தையா இராஜமனோகரன்**

*"காசி நகர்ப் புலவர் பேசும் உரை தான் காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்" என்று உலக மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (1882-1921) பாடியதை அறியாத தமிழர்கள் மிகச் சிலர் என்று துணிந்து கூறலாம். ஏறத்தாழ அவருடைய காலத்திலேயே, மேற்கிலே வானொலிக்குரிய பலவிதமான ஆய்வுகளும் அடிப்படைக் கண்டபிடிப்புகளும் நடைபெற்றன. இன்றுவரை தொடர்கின்ற ஆய்வுகளின் மூலம் எத்தனையோவிதமான புதிய கருவிகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் நாம் அனுபவித்துவருகின்றோம். உண்மை உழைப்பாற் கண்டுபிடிக்கப்படும் இக் கருவிகளைப் பயன்படுத்தி, மக்கட் கூட்டங்களும் முக்கியமாக அரச யந்திரங்களும் பொய்யையே கூடுதலாகப் பரப்பிவருகின்றன. உண்மையைக் கூறும் வாய்மை வானொலிகள் உலகிலே மிகக் குறைவானவை. அக் குறைவான தொகையிலே முன்னணி வகிப்பது, வெள்ளிவிழாக் காணும் வெரித்தாசின் தமிழ்ப்பணி. சிற்றலை 31 (31.51) இல் 9520 கிலோ ஹேட்ஸில் (ஞறு31 ∴ 9520KHz) அனுபவிக்கும் அவ் வானலைகளின் தொழில்நுட்பம் பற்றிய விஞ்ஞான உண்மைகளைச் சிறிதளவிலாவது அறிந்து கொள்ள முயல்வோம்.*

எண்ண அலைகளிலே ஏங்கும் தமிழர் என்று பார்த்தாலென்ன, அகிலமெங்கும் அகதியாய் அலையும் தமிழர் என்றாலென்ன அல்லது சொந்த மண்ணிலேயே ஏதிலியாக அலைகின்ற தமிழர் என்றாலென்ன, எவராகவிருப்பினும் அலை என்ற சொல்லை நன்கு அறிந்திருப்பர். இன்று இவ்வாறான எம் எல்லோரையும் இணைக்கும் ஒரு பாலமாக விளங்குவதும் இந்த அலைகளே. பாரதியாரின் "நீலக்கடலலையே உனது நெஞ்சின் அலைகளடீ" என்ற பாடல் வரிகள் கூட இரு காதல் மனங்களுக்கிடையேயான அலைப் பாலத்தையே குறிக்கின்றது.

## அலைகளின் தன்மைகள்

அலைகளைக் கண்ணாலே பார்த்து விஞ்ஞானமுறையிலே விளங்கிக் கொள்வதற்குப் பெரிதும் பயனுள்ளது, சலனமற்ற குளத்து நீரிலே கல்லொன்றை எறிகின்ற சாதாரண நிகழ்ச்சி. கல் விழுந்த இடத்தைச் சுற்றி வட்டமாக அலைகள் பரவுவதை நாம் கண்டிருக்கின்றோம். அலைகள் கிடையாக வெளியே பரவுவதாகத் தோற்றினும், நீர் மூலக்கூறுகள் நிலைக்குத்தாக மேல் கீழ் நோக்கியே அமைந்திருக்கும். அதாவது மூலக்கூறுகள் அசையுந்திசை அலையின் திசைக்குச் செங்குத்தாகும். நீரிலே மிதந்து கொண்டிருக்கும் இலைகள் போன்றவற்றை நோக்கினால் இவ்வுண்மை புலப்படும். இவை குறுக்கலைகள் (transverse waves) எனப்படும்.




அலைகள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் சக்தியைக் கடத்துவன. அதிகமான அலைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவுவதற்கு ஊடகம் தேவை. ஆனால் ஊடகத்திற்குரிய அலைகளான மின்காந்த அலைகள் பரவுவதற்கு ஊடகம் தேவையில்லை.
வெற்றிடத்தினூடு வெகு சுலபமாக இவை பரவவல்லன. *(இதனாற் போலும் வெற்றுச் செய்திகள் வேகமாகமாவும் இலகுவாகவும் பரவிவிடுகின்றன?)*

சாதாரண அலையொன்றின் தன்மைகளைச் சற்று விஞ்ஞான முறையிலே பார்ப்பது அவசியம். கீழேயுள்ள படம் அதனை விளக்கி நிற்கும்.
சுற்று : ஒரு முழு அலையின் ஊசல்.
அலைநீளம், **L** : ஒரு முழு ஊசலின் தூரம் (மீற்றர்).
வீச்சம் : ஊசலின் போதான அதிகூடிய நேர் அல்லது எதிர்ப் பெயர்வு (மீற்றர்).
அதிர்வெண், **f** : செக்கன் ஒன்றிலே அமையும் சுற்றுக்களின் எண்ணிக்கை (Hz).
வேகம், **V** : ஒரு செக்கனில் அலை சென்ற தூரம் (மீற்றர்/செக்கன்), $v = f. L$.


## மின்காந்த அலைகள்

கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் கிளார்க் மக்ஸ்வெல் (1831-1879) என்பவர் சில முக்கியமான அலைகள் பற்றித் தான் கண்டுபிடித்த கருத்துகளை 1867 ஆம் ஆண்டிலே முதன்முதலாக வெளியிட்டார். இவ்வலைகளின் வேகமும் சோதனைகளிலிருந்து பெறப்பட்ட ஒளியின் வேகத்தின் அளவும் கணிக்கப்பட்ட வேகத்திற்கு ஏறத்தாழச் சமமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இது ஒளியும் மின்காந்த அலையே என்கின்ற கொள்கையைத் தந்து நிற்கின்றது. இவற்றைவிட வேறு வகையான அலைகள் சில, ஜேர்மனி ஹம்பேர்க்கைச் சேர்ந்த ஹைன்றிக் றுடோவ் ஹேர்ட்ஸ் (1857-1894) அவர்கள் கண்டுபிடித்த வானொலி அலைகளை ஒத்து இருந்தன. மின் காந்த அலைகளின் முழு நீளங்களும் கொண்ட மின்காந்த அலை மாலை *(electromagnetic spectrum)* கீழே உள்ளது:




## ஒலியலைகள்

ஒலி அலைகள் நீரிலே ஏற்படும் அலைகள் போலே குறுக்கலைகள் அல்லாமல் நீளலைகள் *(longitudinal)* ஆகும். நீளலைகளிலே ஊடகமூலக்கூறுகளின் அதிர்வு அலையின் திசையிலேயே அமைந்திருக்கும். இது அமுக்கப் பகுதி, விரிவாக்கப் பகுதி எனப் பரவும். ஒலி அலைகள் மிகச்சிறிய தூரத்திற்கே பரவ வல்லன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி

அடிப்படை வானொலி அமைப்பிலே பரப்பி *(transmitter)*, வாங்கி *(receiver)* என இரண்டு பகுதிகள் உள்ளன. பரப்பி என்னும்போது பின்வரும் செயன்முறைகளும் கருவிகளும் முக்கியமானவை:

- ☐ ஒலிவாங்கி *(microphone)* - இது ஒலியலைகளை மின்னோட்டமாக மாற்றுவது. இவ்வாடலோட்ட மின்னோட்டத்தின் அதிர்வெண் மூலவொலியலையின் அதிர்வெண்ணோடு தொடர்புடைத்து. இவை வழமையாக ஒலியதிர்வெண் சமிக்ஞைகள் எனப்படும்.
- ☐ ஆட்டி *(oscillator)* - இது ஆடலோட்ட மின்னோட்ட சமிக்ஞையை வானொலி அதிர்வெண் சமிக்ஞை ஆக்குவது. ஒலியதிர்வெண்ணிலும் அளவிலே கூடிய இவ்வதிர்வெண்ணே சமிக்ஞைகள் கடத்தப்படும் வடிவம் ஆகும்.
- ☐ மாற்றி *(modulator)* - இது ஒலியதிர்வெண்ணை நிலையான அதிர்வெண் சமிக்ஞை ஆக்குவது. மாற்றப்பட்ட சமிக்ஞையானது வானலைச் செலுத்தியிலே ஆடலோட்டமாகச் செலுத்தப்படுவதற்கு முன்னர் வானொலி அதிர்வெண் பெரிதாக்கியிலே பெரிதாக்கப்படும்.
- ☐ வானலைச் செலுத்தி *(aerial)* - இது மின்காந்த அலைகளை வெளியே செலுத்தும் கருவி.





வாங்கி என்னும்போது பின்வரும் கருவிகளும் அவற்றின் செயன்முறைகளும் முக்கியமானவை:

- ☐ வானலை உள் வாங்கி *(aerial)* - இது மின்காந்த அலைகளை உள் வாங்கும் கருவி. தேவையற்ற அலைவரிசைகள் பலவற்றையும் இது உள்வாங்கும்.
- ☐ இசைவாக்கச் சுற்று *(tuning circuit)* - இது தேவையான வானொலி அலை வரிசையை மட்டும் தெரிவு செய்ய உதவுவது.
- ☐ வானலை மிகையாக்கி *(radio frequency amplifier)* - இது வானலை அதிர்வெண்ணைப் பொரிதாக்குவது. சாதாரண அமைப்புகளிலே இது இருக்கமாட்டாது. பெரிதாக்க வேண்டிய தேவை இல்லை.
- ☐ அலை மாற்றி *(demodulator or detector)* - இது வானலை அதிர்வெண்ணை மீண்டும் ஒலியலை அதிர்வெண் ஆக்குவது.
- ☐ ஒலியலை மிகையாக்கி *(audio frequency amplifier)* - இது ஒலியலை அதிர்வெண்ணைப் பெரிதாக்குவது.
- ☐ ஒலி பெருக்கி *(loud speaker)* - இது ஒலியலைகளை வலிதாக்குவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாங்கி (receiver)





மேலே விளக்கப்பட்ட கருவிகள் அடங்கிய அமைப்பு அடிப்படையிலே வானொலி தொழிற்படுகின்ற தன்மையை எளிதான முறையிலே எடுத்துக் காட்டுகின்றது. ஆயினும் தொழில் நுட்பத் தன்மையை நோக்கின், விஞ்ஞான முன்னேற்றத்தோடு வளர்ந்துவந்த நிலைமையால் இன்று எத்தனையோ வகையான மேலதிக கருவிகளை இணைத்துக் கொண்டுள்ளது. இதனாலே பலவகையான வானொலிகளை நாம் அனுபவிக்கத் தக்கதாக இருக்கின்றது. செவிக்கும் மனத்திற்கும் இன்பம் ஏற்படுத்துவதற்கென மட்டுமன்றித் தேவைக்கேற்பவும் இவை அமைக்கப்படுகின்றன. அதாவது வானொலி ஒலிபரப்பப்படவேண்டிய திசை, தூரம் இன்னோரன்னவைக்கேற்பத் தன்மையைத் தெரிவுசெய்யும் வசதி இன்று உண்டு.

## வானொலி அலைகள்

வானொலி அலைகள் மின்காந்த அலைகள் வகையின. இவை ஒளியின் வேகத்திலே - அதாவது செக்கன் ஒன்றிற்கு ஏறத்தாழ 300,000 கிலோ மீற்றர் செல்லவல்லன. ஆரம்ப காலத்தில் நேர்கோட்டிற் செல்லும் அலைகளிலேயே இவை தங்கியிருந்தன. முதன்முதலாக 1901 ஆம் ஆண்டிலே மார்க்கோனி (1874-1937) என்பவர் கோன்வோல் (Cornwall) என்னும் இடத்திலிருந்து செலுத்தப்பட்ட வானொலி அலைகளை அத்திலாந்துச் சமுத்திரத்தின் (Atlantic Ocean) அப்பால் நியுபௌண்ட்லான்ட் (Newfoundland) என்னும் இடத்திலிருந்து கேட்டார். வானொலி வரலாற்றிலேயே முக்கிய திருப்பத்தை இந்நிகழ்ச்சி ஏற்படுத்தியது. ஆனாலும் நேர்கோட்டிலே செல்லும் அலைகள் பூமியின் வளைவு காரணமாக அதிகதூரம் செலுத்தப்பட முடியாதனவாக இருந்தன. எட்வேர்ட் அப்பிள்ட்டன் என்பாரின் அயனமண்டலக் கண்டுபிடிப்பு இச்சிக்கலைத் தீர்த்து வைத்தது. இவ்வயன மண்டலம் பிரதிபலிக்கும் தன்மை கொண்டவை என்பதை இவர் விளங்க வைத்தார். பின்னர், இம் மண்டலம் பல உட் படைகளாக அமைந்து இருப்பதும் தெரியவந்தது.

வானொலி அலைகள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்தைப் பல வழிகளிலே சென்றடையலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தளவலைகள் *(Ground or surface waves)*** இவை நிலத்தின் தளத்தை அடியொட்டிச் செல்லும். மணலினாலான தளத்திலும் பார்க்க நீரினாலான தளத்திலே இப்பரவுகை கூடிய தூரம் செல்லும். சாதாரணமாக இவ்வாறான முறையிலே 1000 கில்லோ மீற்றர் வரை வானொலி அலைகள் செல்லக்கூடும். 2 மெகாஹேட்ஸ் (MHz) வரையிலான அதிர்வெண் கொண்ட அலைகளே இவ்வாறு பரவ வல்லன.

**வானலைகள் (Sky waves)** 3 தொடக்கம் 30 மெகாஹேட்ஸ் (MHz) அதிர்வெண் கொண்ட அலைகள் பரவுவதற்கான முறை இதுவேயாகும். இவ்வலைகள் நிலத்திற்கும் அயனமண்டலத்திற்கும் இடையே மாறிமாறித் தெறித்துப் பரவும். இதனால் முழு உலகையுமே இவ்வாறு தொடர்பு கொள்ளலாம்.

**வெளியலைகள் (Space waves)** 30 மெகாஹேட்ஸ் (MHz) அதிர்வெண்ணிலும் கூடிய அலைகள் அயனமண்டலத்தினூடு வெளியேறிவிடும். இதனால் இவை செலுத்தியிலிருந்து நேரடியாக வாங்கியை நோக்கிச் செலுத்தப்படும். இதனால் 100 கில்லோ மீற்றர் வரையே இவ்வசதியை ஏற்படுத்தலாம். மேலும் இடையிலே மறைப்புகள் தடையாக இருத்தலாகாது.

### செய்மதி அலைகள்

மேலே கூறப்பட்ட அனைத்தும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட இவை மிகவும் அண்மைக்காலத் தொழில் நுட்பங்கள் பலவற்றை அடிப்படையாகக் கொண்டவை. பூமியிலிருந்து செலுத்தப்படும் அலைகள் குறிப்பிட்ட செய்மதியை அடைந்து தெறித்து மீண்டும் பூமியை அடைகின்றன. அவ்வாறு வருகின்ற அலைகளை இதற்கென அமைக்கப்பெற்ற தட்டுகள் (discs) ஏற்று உரிய கருவிகள் மூலம் ஒலியலைகளாக மாற்றும்.

இறுதியாக, வாய்மை வானொலியாம் வெரித்தாஸ் தமிழ்ப் பணியின் SW31 / 9520 KHz என்பதன் கருத்து என்ன என்பதைப் பார்ப்போம். SW31 என்பது குறிப்பிட்ட அலை வரிசையின் அலைநீளத்திற்குரிய குறியீடு. 9520 KHz என்பது அலையின் அதிர்வெண். அதாவது ஒரு செக்கனில் 9,520,000 சுற்றுகள் வெளியேறும்.

வானலை பற்றிய வளர்கலை தன்னிலே
தேனுறு தமிழிலே தெளிவுற வேண்டியே
நானறி செய்திகள் நலம்பெற எழுதினேன்
கூனறத் தமிழர்நாம் குயிலெனக் கூவிடும்
வானொலி வெரித்தாஸ் வளமுற வாழ்கவே!
கானமாய் முழங்கிடும் கஸ்பார் வாழ்கவே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கையில் தொடர்பாடற் பணியிற் சில ஊடகங்கள் :-

# போக்குகளும் தாக்கங்களும்

**கணபதிப்பிள்ளை ஞானேஸ்வரன்**
*முதுநிலை விரிவுரையாளர். பொருளியற்துறை.பேராதனைப் பல்கலைக்கழகம்*

பாரம்பரியமாகத் தகவல்கள் எழுத்து வடிவத்திலேயே நீண்டகாலமாகப் பரிமாற்றம் செய்யப்பட்டு வந்துள்ளன. சுவடியோ அல்லது புத்தகமோ தான் அக்காலத்தில் தகவற் பரிமாற்றத்திற்கான பிரதான சாதனமாக இருந்தது. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் ஆரம்பித்த கைத்தொழிற்புரட்சியானது தகவற் பரிமாற்ற வழிமுறையிலும் அதன் தாக்கத்தினைக் கொண்டு வந்தது. 1876 இல் மேற்குலகில் நிகழ்ந்த தொலைபேசியின் கண்டு பிடிப்புத் தகவற் பரிமாற்றத்தில் ஒரு புரட்சியினை ஏற்படுத்தியது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்த வானொலி அலை,வானொலி ,சலனப்படப்பிடிப்புக் கருவி ஆகியவற்றின் கண்டுபிடிப்புக்கள் தகவற் பரிமாற்ற வழிமுறையின் அடுத்த கட்ட முன் நகர்வுக்கு வழிகோலின. 1940 களில் நிகழ்ந்த டிரான்ஸிஸ்ரரின் கண்டுபிடிப்பானது 1952 இல் டிரான்ஸிஸ்ரர் ரேடியோ அபிவிருத்தி செய்யப்படக் காரணமாக அமைந்தது. மற்றொரு புறத்தில் 1946 இல் நிகழ்ந்த இலத்திரனியல் கணிப்பொறித் தொழில்நுட்பத்தின் கண்டுபிடிப்பினையடுத்து அதிற் படிப்படியாக நிகழ்ந்து வந்த முன்னேற்றங்கள் இருபத்தோராம் நூற்றாண்டினை ஒரு தகவல் யுகமாகவே மலர வைத்தன.

தொடர்புச் சாதனங்கள் சமூகம் ஒன்றின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்து வருவது பரவலாக இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒரு சாதாரண பாவனைப் பொருள் தொடர்பான தகவல்களைத் தருவதிலிருந்து அன்றாட நாட்டு நடப்புக்கள் உள்ளடங்கலாக உள்நாட்டு,வெளிநாட்டு அரசியல்,பொருளாதார நிகழ்வுகள் பற்றியும் அவை தொடர்பான பல்வேறு அறிஞர்கள்,கல்விமான்களின் கண்ணோட்டங்களையும் அவை வழங்கி வருகின்றன. இதன் மூலம் தொடர்பு சாதனங்கள் மக்களின் எண்ண ஓட்டங்களிற் செல்வாக்கினைச் செலுத்தி அவர்களின் அபிப்பிராயங்களை மாற்றியமைத்து அதன் மூலம் இறுதியில் அவர்கள் நடத்தைகளில் மாற்றங்களைத் தோற்றுவிக்கக்கூடிய அளவுக்கு சக்தி மிக்கவனாக அமைந்து விடுகின்றன. சமீபத்திய உலக மயமாக்கல் நிகழ்வுப்போக்கு ஒன்றிற்கு தொடர்பாடலின் விரிவாக்கமே நெம்புகோலாக இருந்துள்ளது என்பதிற் சந்தேகமில்லை. தொடர்பு சாதனங்கள் சமூக அக்கறையுடன் செயற்படவேண்டுமேயானால் அவை அரசாங்க கட்டுப்பாடுகளற்ற சுதந்திர ஊடகங்களாக இருப்பதன் அவசியம் நீண்டகாலமாகவே வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது.

இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகள் பலவற்றில் பத்திரிகைகள்,வானொலி ,தொலைக்காட்சி ஆகிய மூன்றும் அதிகளவிற்கு மக்கள் மயப்படுத்தப்பட்ட ஜனரஞ்சகமான தொடர்பாடல் ஊடகங்களாக இன்று காணப்பட்டிருக்கின்றன. இலங்கையில் ஆங்கில மொழிக்கு அப்பால் சிங்கள ,தமிழ் மொழிகளில் காலனித்துவ காலத்தில் பெரும்பாலும் ஒரே சமயத்திலேயே பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. கூடுதலான வாசகர்கள் காரணமாக உருவான பெரும் சந்தை வாய்ப்பும் செல்வந்த சிங்கள தேசிய வாதிகளின் முனைப்பும் இலங்கையில் சிங்களப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள் பலவற்றின் தொய்வில்லாத தொடர்வளர்ச்சிக்கு பெருமளவில் உதவின. மறுபுறத்தில் பெரும்பாலான தமிழ்க் கல்விமான்கள் தம் எண்ணங்களை ஆங்கில மொழியிலேயே வெளிப்படுத்தி வந்தமையும் தமிழ்த்தேசிய முதலாளிகளின் தமிழ்ப் பத்திரிகைத் துறையிலான முதலீட்டு ஆர்வக்குறைவும் வரையறுக்கப்பட்ட வாசகர்கள் காரணமாகத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கான சந்தை வாய்ப்புக் குறைவாக இருந்தமையும் இலங்கையிற் தமிழ்ப் பத்திரிகைகள் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் மிக மெத்தனமான வளர்ச்சியொன்றினைக் கொண்டிருக்க முக்கிய காரணங்களாக அமைந்தன.

எவ்வாறாயினும் 1950 க்கு பின் வந்த காலங்களில் இலங்கையில் வீரகேசரி, தினகரன் ஆகிய பாரம்பரியத் தமிழ்த்தேசிய செய்தித் தாள்களுக்கு அப்பால் தமிழ் பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அவற்றுக்கு எழுதும் எழுத்தாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வந்துள்ளன. குறிப்பாக கடந்த ஒரு தசாப்த காலத்தினுள் தினக்குரல் போன்ற சில நாள் ஏடுகளுடன் சரிநிகர் போன்ற ஒன்றில் வாராந்த அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை வெளிவரும் பத்திரிகைகள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பத்திரிகைகளில் தரம் மிக்க கட்டுரைகளும் சிந்தனையைத் தூண்டும் ஆசிரியத் தலையங்கங்களும் அவ்வப்போது வெளிவந்து கொண்டிருப்பினும் பகுப்பாய்வுக் கட்டுரைகளும் ஆய்வுக் கண்ணோட்டங்களும் மிக மிக அரிதாகவே காணப்படுகின்றன. இதேவேளை பல்வேறு அரசியற் கட்சிகள், இலக்கிய மன்றங்கள், பல்கலைக்கழக அமைப்புக்கள் போன்றவை சஞ்சிகைகள், செய்தி மடல்கள் போன்றவற்றினை வெளியிட்டுள்ளபோதிலும் இவற்றுட் பல நீடித்த ஆயுளைக் கொண்டிருக்கவில்லை. அநேக பத்திரிகைகள் சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்ட கதை, கவிதை, இலக்கியக்கட்டுரைகள் போன்றவற்றினை வெளியிடுவதில் ஆர்வம் காட்டி வந்துள்ளனவேயன்றி சமகாலப் பிரச்னைகளைத் தொட்டு விமர்சனப் பாங்கான கட்டுரைகளை பிரசுரிப்பதில் பொதுவாகவே அதிக நாட்டம் காண்பிக்கவில்லை. இப்போக்கின் கவலை தரும் அம்சம் யாதெனில் இலங்கையின் இனவிவகாரம் .குடியேற்ற விவகாரம் போன்ற சிறுபான்மையோர் நலன்களுடன் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் தொடர்பான ஆய்வுகள் அரசின் பத்திரிகைத் தணிக்கை அமுலில் இல்லாத காலங்களிற் கூட இப்பத்திரிகைகளில் உரிய முக்கியத்துவத்தினைப் பெறாமற் போயிருப்பதேயாகும்.

மேற்குலகில் 1930 களிலேயே வர்த்தக ரீதியாக தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டதோடு 1946 இல் வண்ணத் தொலைக்காட்சி பெட்டி கண்டுபிடிக்கப்பட்டபோதும் இலங்கையைப் பொறுத்த வரையில் தொலைக்காட்சிச் சாதனத்தின் ஊடுருவல் என்பது சுமார் இரு தசாப்த காலப்பகுதியுடன் வரையறுக்கப்பட்ட ஒன்றாகும். தொலைக்காட்சி என்ற தொடர்புசாதனமானது 'காட்சி? விளைவு" என்ற அம்சத்தினைப் பொறுத்த வரையில் பத்திரிகை, வானொலி என்ற ஏனைய இரு தொடர்புச் சாதனங்களைக் காட்டிலும் தாக்கமான ஒன்றாக இருப்பினும் இலங்கையினைப் பொறுத்தவரையில் இது அதனுடைய முழுப்பரிமாணத்தில் பயனளிக்கும் வகையிற் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. ரூபவாகினி, அரச கட்டுப்பாட்டின் கீழ் அமைவதுடன் ஏனைய தொலைக்காட்சிச் சேவைகளிலும் அரசின் கட்டுப்பாடு ஏதொ ஒரு அளவிற் காணப்பட்டுள்ளது. இதனால் பாரபட்சமற்ற வகையில் பொதுமக்களைச் செய்திகள் சென்று சேர்வதில் இடர்ப்பாடுகள் உள்ளன. தமிழ் மொழியில் ஒளிபரப்புக்கு இத்தொலைக்காட்சிச் சேவைகளில் ஒதுக்கப்படும் நேரங்களும் பாரதூரமான அளவிற்கு குறைவாகவே உள்ளன. ரூபவாகினி போன்ற தொலைக்காட்சிச் சேவைகளில் ஒளிபரப்பு அட்டவணை நிரலில் இடம் பெறுகின்ற தமிழ் நிகழ்ச்சிகளும் கூட முன்னறிவிப்பின்றி அவ்வப்போது திடீரென ரத்துச் செய்யப்படுவதென்பது ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டுள்ளது. செய்தித் தணிக்கை கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட எம்ரிவி (MTV) தொலைக்காட்சிச் சேவையில் ஒளிபரப்பாகி வரும் பிபிசி உலக சேவையின் ஆங்கிலச் செய்தி ஒளிபரப்பில் இலங்கை தொடர்பான செய்திகள் தணிக்கை செய்யப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சுருக்கமாகச் சொல்வதாயின் தொலைக்காட்சி என்ற தொடர்பு சாதனம் ஒரு பொழுதுபோக்கு ஊடகம் என்பதற்கு அப்பால் இலங்கையில் இன்றும் விருத்தி பெறவோ சேவைகளைப் பன்முகப்படுத்திக் கொள்ளவோ இல்லை எனலாம்.

பல மூன்றாம் உலக நாடுகளைப் போலவே இலங்கையிலும் பத்திரிகைகளுக்கு அடுத்த முக்கியமான ஜனரஞ்சகத் தொடர்பு சாதனமாக வானொலியே நீண்டகாலமாகப் பணியாற்றி வந்துள்ளது. பத்திரிகைகள் போன்றே வானொலியும் பெருமளவு கிராமிய ஊடுருவலைக் கொண்டுள்ள ஒரு தொடர்புச் சாதனமாக உள்ளது.

அதேவேளை எழுத,வாசிக்க முடியாதவர்களைக் கூட சென்றடையக்கூடிய ஒரு தொடர்புசாதனம் என்ற வகையில் பத்திரிகைகள் கொண்டிராத பிரத்தியேக அனுகூலம் ஒன்றினையும் வானொலி கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் போர்ச்சூழல் ஒன்றில் பத்திரிகைகளின் துரித பரிமாற்றத்தில் காணப்படுகின்ற நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக பத்திரிகைககள் வெளியாகும் பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு உடனுக்குடன் செய்திகளை எடுத்துச் செல்வதில் வானொலியின் பங்கு அளப்பரியதாக உள்ளது. தொலைக்காட்சியின் இயங்குதல் பெரும்பாலும் மின்சாரக் கிடைப்பனவுடன் தொடர்புடைய ஒன்றாக இருப்பதனால் செய்திப் பரிமாற்றத்தில் தொலைக்காட்சி ஊடகத்தினாற் கூட வானொலியுடன் போட்டியிட முடியாதிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. போர்ப் பிரதேசங்களில் துவிச்சக்கர வண்டி *(cycle)* ஒன்றின் மின்பிறப்பாக்கி *(Dynamo)* யினை உபயோகித்து வானொலியினை இயங்கச் செய்து செய்திகளைச் செவிமடுப்பது என்பது இன்று பரவலாக அறியப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டு இலங்கையில்வானொலி ஒலிபரப்பு அரசாங்கக் கட்டுப்பாட்டினுள் முழு அளவில் கொண்டு வரப்பட்டதனையடுத்து பக்கச்சார்பற்ற விதத்தில் வானொலிச் செய்திகள் ஒலிபரப்பாவதில் சிக்கல் தோன்றிற்று. குறிப்பாக வடக்கு கிழக்கு யுத்தம் தீவிரமடைந்ததனையடுத்து இலங்கை வானொலியானது நாட்டின் ஒரு பகுதி மக்களை ஒன்றில் திருப்திப்படுத்தக் கூடிய வகையிலோ இன்னும் சில வேளைகளில் மகிழ்ச்சிப்படுத்தக்கூடிய வகையிலோ செய்திகளைத் திரித்து வெளியிடுவது ஒரு வழக்கமாயிற்று. இதனால் இலங்கை வானொலியானது சிறுபான்மை மக்கள் மத்தியில் நம்பகத்தன்மையினை இழந்து அந்நியப்பட்டுப் போகின்ற ஒரு அவலம் நேர்ந்தது. இலங்கைச் செய்திகள் சம்பந்தப்பட்ட வரையில் இந்தப் பின்னணி ஒன்றிலேயே பிபிசி ,வெரித்தாஸ் போன்ற வெளிநாட்டு வானொலிச் சேவைகள் இலங்கை மக்களின் குறிப்பாக சிறுபான்மை மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக மாறலாயின. ஒட்டுமொத்தமான நோக்கில் இலங்கையைப் பொறுத்தவரையில் இங்கு வெளிவரும் பத்திரிகைகளாயினும் நிகழ்த்தப்படுகின்ற தொலைக்காட்சி ஒளிபரப்புக்களாயினும் மேற்கொள்ளப்படுகின்ற வானொலி ஒலிபரப்புக்களாயினும் நாட்டின் முக்கிய பிரச்னைகள் சம்பந்தப்பட்ட வரையில் நடுநிலைத் தன்மையோ விமர்சிக்கும் அணுகுமுறையோ இன்றிச் செயற்பட்டு வந்தமை. மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு வானொலிச் சேவைகள் மீது இலங்கை மக்களின் பிடிப்பும் நம்பகத்தன்மையும் வளர்வதற்கு வழி வகுத்தது.

இலங்கையின் சிறுபான்மை மக்கள் மத்தியில் பிபிசி யின் தமிழோசையானது நீண்டகாலமாகவே தனியான ஓரிடத்தினைத் தக்க வைத்து வந்துள்ளபோதும் சமீப காலங்களில் இந்தப் பிணைப்பில் ஒரு வெளித்தோன்றா விரிசல் விழுந்துவிட்டதாகவே தோன்றுகின்றது. பிபிசி நிர்வாகத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான உடன்பாடொன்றினையடுத்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்சேவையின் முதலாவது அலைவரிசையினூடாக பிபிசி யின் தமிழோசை நிகழ்ச்சி உடனடி அஞ்சல் செய்யப்பட ஆரம்பித்த நாளிலிருந்து பிபிசியின் தமிழோசை ஏனோ தனது வழமையான வீரியத்தினை இழந்து போய்விட்டதென்ற ஒரு கருத்தும் அதனால் கவலையும் இலங்கையின் சிறுபான்மை மக்களிடையே பரவலாக இன்று காணப்படுகின்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமானது அரசியற் காரணங்களால் பிபிசி யின் தமிழோசை நிகழ்ச்சியினை உடனடி அஞ்சல் செய்வதனை நிறுத்திக் கொண்ட பின்னரும் கூட இலங்கை சம்பந்தப்பட்ட செய்திகளையும் ஆய்வுக்கண்ணோட்டங்களையும் தருகின்ற முன்னைய வீரியம் அதற்கு மீண்டும் திரும்பிவிட்டதாகப் பொதுவாக யாரும் கருதவில்லை.

புதிய சர்வதேச வானொலி ஒலிபரப்புச் சேவைகள் தமிழில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதனையடுத்து செய்திகளுக்கு வானொலிகளை மட்டுமே நம்பியிருக்கின்ற ஏராளமான இலங்கைத் தமிழ் மக்கள் இலங்கை தொடர்பான செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் இன்று அதிகரித்துள்ளபோதிலும் பழையதும் நம்பகமானதும் ஆன வெளிநாட்டு வானொலி ஒலிபரப்பாக வெரித்தாஸ் தொடர்ந்தும் திகழ்கின்றது. வெரித்தாஸ் வானொலியானது அன்றாட செய்திகளையும் அவை தொடர்பான ஆய்வுக்கண்ணோட்டங்களையும் கட்டுப்பாடுகளற்ற ஒரு' சுதந்திர' தளத்திலிருந்து இனிய இதயங்களுக்கு அன்புடன் கலந்து தருவது அவ்விதயங்களில் அது நீங்காமல் நிரந்தர இடமொன்றினைப் பிடித்திருப்பதற்குக் காரணமாதல் கூடும்.தனது ஒலிபரப்புச் சேவையில் வெள்ளிவிழாக் காணும் வெரித்தாஸ் வானொலியின் சேவை தங்குதடையின்றி இன்று போல் என்றும் தொடரத் தமிழ் கூறும் நல்லிலங்கை மக்களின் அன்பும் ஆசியும் அதற்கு எப்போதும் உண்டு.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரித்தாஸ் தமிழ் பணியின்



சகோதரி பாத்திமா சைமன்
தயாரிப்பாளர்



தமிழ்ப்பணியின் முதல் பொறுப்பாளர்
திரு. ம. அ. சாமி அணியினர்
(இடமிருந்து வலம் 4வதாக நிற்பவர் திரு. ம. அ. சாமி)



ஈழத்தில் மிதிவண்டி டைனமோமூலம்
தமிழ்ப்பணி கேட்கும் தமிழர்கள்



தமிழ்ப்பணியின் நிர்வாக அணி
ம. ஜெகத்கஸ்பர் — ஜோ. லூர்துசாமி
— வின்செண்ட் சின்னத்துரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரும் விழுதுகளும்



வேரித்தாஸ் ஆய்வு
மக்கள் தொடர்பு பிரிவினருடன்





திரு. அன்ரனி கிளீட்டஸ்
தயாரிப்பாளர்



வேரித்தாஸ் கலையக — நிர்வாக அலுவலகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்

*எங்கு ஓர் தலைமை சரியாக அமைகின்றதோ அங்கே சிறந்த கட்டுக்கோப்பும், வளர்ச்சியும், வெற்றியும் கிடைப்பதை வரலாறுகள் எமக்குப் பாடமாகக் காட்டியிருக்கின்றது. அந்த வரலாற்றின் பாதையில் புனிதப் பயணத்தின் புனிதராக இருந்து புனிதப் பணியினை வெரித்தாஸ் தமிழ்ப்பணி மூலம் தமிழ் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் எங்கள் அருட் திரு ஜெகத் கஜ்பார் ராஜ் அடிகளாரையும், அவருடன் பணிபுரியும் அன்பு உள்ளங்களையும் இந்த நாட்களில் இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம். வளர்க வெரித்தாஸ். நீடு வாழ்க கஸ்பார் அடிகளார்.*

(லம்பேட் குடும்பத்தினர். பிராங்பேட், ஜேர்மனி. )

*ஜெகத் அண்ணா! நீங்க உலகச் செய்தி படிக்கின்றபோது எங்கட நாட்டுச் செய்தியை முதலில்*
*சொல்லுங்கோ. காரணம் முதல் மூன்று நிமிடங்கள் எனது அண்ணன் சைக்கிள் சுற்றுவார். அடுத்து நான் சுற்றுவேன்.*
(வேரித்தாஸ் வானொலிக்கு சுகீதரன் என்ற சிறுவன் எழுதிய கடிதம். சைக்கிள் டைனமோ சுற்றித்தான் பலர் வன்னியில் வேரித்தாஸ் வானொலி கேட்கின்றார்கள்)

*என்னதான் நடந்தாலும், எப்படியோ வானொலியைத் திருகி வீரப்பன் இரவு 7.30 மணிக்கு*
*வேரித்தாஸ் கேட்பதை மட்டும் மறப்பதில்லை.*
(நக்கீரனில் வீரப்பனால் விடுவிக்கப்பட்ட பிணைக் கைதி )

*வேரித்தாஸ் வானொலி தமிழ் ஈழ மக்களினது குறிப்பாக போராளிகளினது அன்றாட வாழ்வில் ஓர் அங்கமாயிருப்பதை, தமிழ் ஈழத்தில் இருந்த நாட்களில் என்னால் உணர முடிந்தது.*
(நேர்காணலில் திரு வை.கோ அவர்கள் )

*வர்த்தக நோக்கோடு இல்லாததால் இந்த வானொலியால் உலகத் தமிழ் மக்களின் உண்மையான*
*குரலாய் இருக்க முடிகிறது.*
(நேர்காணலில் வலம்புரி ஜான்)

*வேரித்தாஸ் சொல்வது சரியாக இருக்கும் என பலர் என்னிடம் சொல்லியிருந்தார்கள். ஏதோ ஒரு*
*மாயா சூத்திரம் உங்களிடம் இருக்கின்றது.*
(மலேசியாவில் இருந்து தொலைபேசிச் செவ்வியில், மறைந்த மாமனிதன் குமார் பொன்னம்பலம் )

*வெள்ளிவிழாக்காணும் வெரித்தாஸ் வானொலியின் பணிப்பாளர் அருட்திரு ஜெகத் கஸ்பர் அடிகளாரின் சேவை எண்ணிலடங்கா. தமிழீழ மக்களின் துயர் துடைப்பதில் தனது வாழ்நாளை அர்ப்பணிக்கும் இந்தப் பெருந்தகையை, இந்தச் சிகரத்தை வாழ்த்த வார்த்தைகள் உண்டோ?*
(ஜேர்மனியில் வெளியாகும் மண் சஞ்சிகையின் ஆசிரியர் வ. சிவராசா)

*"விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்ற வள்ளுன் வாக்கிற்கு இலக்கணம் வகுத்தவர் அருட்திரு ஜெத் கஸ்பர் அடிகளார். அவர்*
*வன்னிக் குழந்தைகளுக்குத் தாயுமானவர் . உண்மை, நீதீ மனித நேயத்துடன் புனிதப் பணியைத் தொடரும் வேரித்தாஸ் பல்லாண்டு சேவை செய்ய மனதார வாழ்த்துகின்றேன்.*
(இ. நடராசா ஆசிரியர் தமிழ் அலை காலாண்டு சஞ்சிகை, ஜேர்மனி

# ஈழநாடு பாரிஸ்

## இது நமக்கு வெள்ளிவிழா

இன்று வானொலி என்பது ஒவ்வொருவராலும் பேசப்படுகின்ற ஒன்றாக மாறியிருக்கின்றது. பாரிஸில் தமிழர்கள் அதிகமாக நடமாடுகின்ற அந்த வீதியில் நால்வர் கூடிவிட்டால் செயற்கைக்கோள் பற்றியும் அதில் வானொலி தொலைக் காட்சி பற்றியுமே கதைக்கின்ற காலம் இது.
அவ்வளவு தூரம் வானொலியும் தொலைக்காட்சியும் நம்மவர்களுக்கு சாதாரணமாகிவிட்டன.
இருபத்திநான்கு மணி நேர வானொலியில் இன்று பலரும் பல மணி நேரம் தாம் நிகழ்ச்சிகள் செய்யவேண்டும் என்று முண்டியடிப்பதைக் காணமுடிகின்றது.
வானொலி என்பது எவ்வளவு மணி நேரம் ஒலிபரப்பாகின்றது என்பதல்ல முக்கியம். அது எதை ஒலிபரப்புகின்றது என்பது தான் முக்கியமானது.
அரை மணி நேர நிகழ்ச்சி ஒன்றின் மூலமே உலகத்தையே கட்டிவைத்துவிடலாம் என்பதற்கு வேரித்தாஸ் நல்ல உதராணம்.
யாழ்ப்பாணத்தின் இருண்ட காலம் அது-
அதாவது இந்திய இராணுவம் தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த காலம். யாழ்ப்பாணம் ஈழநாடுவில் சிரேஷ்ட துணை ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது வேரித்தாஸின் செய்திச் சேவை பெரிதும் துணை புரிந்தது.
யாழ்ப்பாணத்தின் மையப்பகுதியில் ஒரு மாடிக்கட்டிடத்தில் இருந்த நாங்கள், நல்லூரில் நடந்த செய்தியை வேரித்தாஸ் மூலமே அறிந்துகொண்டு அதனைச் செய்தி ஆக்கியிருக்கின்றோம்.
இது ஒன்றே வேரித்தாஸ் பற்றிய அறிமுகத்திற்கு போதுமானது என்று நினைக்கின்றேன்.
நம்பிக்கை ஒன்றையே மூலதனமாகக் கொண்டு வாழ்கின்ற தமிழீழ மக்களுக்கு வேரித்தாஸ் ஒரு ஊட்டசச்சத்து.
அந்தச் சத்துணவு தமிழீழ மக்களுக்கு தொடர்ந்து கிடைக்கவேண்டும் என்பதே எமது பெரு விருப்பு. வோலித்தாஸ் தமிழ்ப்பணி தொடரவும், அதன் தலைமைப் பணியாளர் அருட்பணியாளர் ஜெகத் கஸ்பார் ராஜ் அடிகளார் பல்லாண்டு காலம் வாழவும் இறைவனை வேண்டுகின்றோம்.

இவ்வண்ணணம்

**எஸ்.எஸ். குகநாதன்**
ஆசிரியர், ஈழநாடு
இயக்குனர், தமிழ்அலை வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழாக் காணும் வேரித்தாஸ் தமிழ்ப் பணிக்கு
எங்கள் நல் வாழ்த்துக்கள்



எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்த தென்று
கொட்டு முரசே

- பாரதிதாசன் -

**T.T.S.BROTHERS**

*ASIEN SUPERMARKT*

Retail & Wholesale

Rheinischstr 52
44137 DORTMUND
GERMANY

Tel.: 0231 819288
FAX.: 0231 833431

Internet: www.TTS-Brothers.de

*Gartenstr. 29*
*48147 MÜNSTER*
*GERMANY*

*Tel.: 0251 2301184*
*FAX.: 0251 2301183*

திங்கள் வாழ்க செங்கதிர் வாழ்க
தென்றல் வாழ்க செந்தமிழ் வாழ்க
இங்குத் திராவிடர் வாழ்க மிகவே
இன்பம் சூழ்ந்ததே எங்கள் நாடு

- பாரதிதாசன் -


*உங்கள் எண்ணம் போல்*
*தங்க நகைகள், பட்டுப் புடவைகள்,*
*அன்பளிப்புப் பொருட்கள் பெற*

**Pirruntha Silk House**


**Hasenbergerstr. 39b**
**70176 Stuttgart**
*Tel. & Fax.: 07116158976*
*HP 01703344059*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேரித்தாஸ் வெள்ளி விழாவிற்கு நல் வாழ்த்துக்கள்




"நீங்கள் இங்கே அனுபவிப்பது மிகவும் துன்பமான வாழ்க்கைதான்.
உறவு பிரிந்த வாழ்க்கைதான்.
சவால் நிறைந்த வாழ்க்கைதான்.
போராடுகின்ற வாழ்க்கைதான். ஆனால்.
உங்கள் நாட்டின் மக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது அவர்களை விட கோடி மடங்கு பாதுகாப்பாகவும். உயர்வாகவும், வசதியாகவும் நீங்கள் வாழ்கின்றீர்கள்.
இந்த வாழ்க்கை உங்கள் திறமையால் உங்களுக்கு வந்ததல்ல.
மன்னிக்கவும். நான் ஒரு மதகுரு.
எனவே நான் உரிமையோடு உங்களுக்குச் சொல்ல முடியும். உங்களுக்கு கிடைத்திருக்கின்ற குறைந்த பட்ச துன்பங்கள் நிறைந்த இந்த வாழ்க்கை உங்கள் திறமையால் கிடைத்த வாழ்க்கையல்ல.
ஒரு சமுதாயத்தின் ஒட்டு மொத்த அழிவால் கிடைத்த வாழ்க்கை என்பதை மறந்துபோய் விடாதீர்கள். ஒருபோதும் மறக்காதீர்கள்.
யாராவது காயப்பட்டால் தயது செய்து என்னை மன்னிக்கவும். உண்மை சுடும்.
உங்களைக் காயப்படுத்துவதற்காக. நான் சொல்லவில்லை. ஒரு சமுதாயத்தின் ஒட்டுமொத்த அழிவால் இது உங்களுக்கு கிடைத்த வாழ்க்கை என்றால். அந்த சமுதாயத்திற்கு பதில் சொல்ல வேண்டியது உங்கள் மனச்சாட்சியின் கடமை. உங்கள் வாழ்வுக் கடமை. உங்கள் ஆன்மீகக் கடமை.
அதுவே நீங்கள் கடவுளுக்குச் செய்யும் புண்ணியமான கடமை."

அருட் திரு ஜெகத் கஸ்பர் அடிகளார்

தமிழன் ஸ்ரீ
தொலைபேசி: 01722326876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org